# வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல்

## (அய்யா அவினாசிலிங்கம் அவர்களின் வாழ்க்கை)



4136
-8

ஆசிரியர்

டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ்

அன்பு என்பது மகத்தான சக்தி கொண்டது. விலை மதிக்க முடியாதது. எல்லாவற்றையும் விட அன்புதான் சிறந்தது.

எல்லோரும் நன்றாக இருக்க வேண்டுமானால் மற்றவர்களுடன் சேர்ந்து பிரியமாய் வாழ வேண்டும்.

உயர்ந்த இலட்சியத்தில் ஈடுபடுவதே ஒழுக்கத்தின் அறிகுறியாகும்.

இலட்சிய வாழ்வுக்குப் பெரிது பணமல்ல, அதிகாரமல்ல, சேவை தான் பெரிது; தூய்மைதான் பெரிது; கடமையைச் செவ்வனே செய்வதுதான் பெரிது.

ஆத்மீக லட்சியங்களை ஏற்று, அவைகளை வாழ்க்கை முழுவதும் பின்பற்றி வாழ்வதே யாவற்றினும் உயர்ந்தது.

வெறும் உடல் பலம் மாத்திரம் இந்திய மக்களின் இலட்சியமாயிருக்க முடியாது அத்துடன் ஆன்மீக பலமும் சேர்ந்திருக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் சக்தியை அவர்கள் தங்களுக்கெனப் பயன்படுத்திக் கொள்ளாமல், மண்ணுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து, அவர்களுக்காகத் தமது உடைமை அனைத்தையும் தியாகம் செய்ய முன்வர வேண்டும்.

*— தி.சு. அவினாசிலிங்கம்*

# வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல்

(அய்யா அவினாசிலிங்கம் அவர்களின் வாழ்க்கை)

108915

ADU LIB
108915

இராசம்மாள் பா. தேவதாஸ்

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN
( DEEMED UNIVERSITY )
108915
LIBRARY
AVINASHILINGAM CBE. 43
T4.44136 AVIw
3IN8

அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 043

முதற்பதிப்பு மே, 1998

108915

வெளியிடுவோர்

பதிவாளர்,
அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் – 641 043.

அச்சிட்டோர்

சாரதாலயா அச்சகம்,
ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள்
கோயமுத்தூர் – 641 043.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | *முன்னுரை* | | |
| | *அணிந்துரை* | | |
| 1. | பிறப்பும் பெற்றோரும் | .... | 1 |
| 2. | இளமைப் பருவம் | .... | 5 |
| 3. | கல்லூரி வாழ்க்கை, வழக்குரைஞர் பணி | .... | 9 |
| 4. | வித்யாலயத்தின் தோற்றம் | .... | 13 |
| 5. | காந்தியடிகளைச் சந்தித்தது – சிறை சென்றது | .... | 21 |
| 6. | அண்ணல் காந்தியடிகளும், அய்யா அவினாசிலிங்கமும் | .... | 30 |
| 7. | அரசியல் பிரவேசம் | .... | 35 |
| 8. | அண்ணல் காந்தியடிகளின் அறைகூவலை ஏற்றல் | .... | 40 |
| 9. | புண்ணிய தலங்களைத் தரிசித்தல் | .... | 46 |
| 10. | ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் தரிசனம் | .... | 53 |
| 11. | சேவா கிராமத்தில் காந்தியடிகளுடன் | .... | 58 |
| 12. | தாய்த்திருநாடு சுதந்திரம் பெற்றபோது | .... | 66 |
| 13. | தேசத் தந்தையின் மறைவினால் ஏற்பட்ட தொய்வு | .... | 76 |


T4·44136 AVI w
INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION (DEEMED UNIVERSITY)
108915
3IN8

14. ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தின் முதல் பத்தாண்டுகள் .... 83
15. கல்வி அமைச்சராக .... 89
16. தமிழ்க் கலைக்களஞ்சியம் .... 97
17. தமிழ்த் தொண்டு .... 102
18. பக்திச் சிறப்பு .... 108
19. ஸ்ரீராமகிருஷ்ணர் குருபூஜை : அன்னை விழா .... 114
20. எழுத்தாளராக .... 123
21. திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி ஆரம்பித்தது .... 130
22. தான் தோற்றுவித்த கல்வி நிறுவனங்களின் வெள்ளி, பொன், வைர விழாக்கள் கண்ட மாமனிதர் .... 139
23. அய்யா அவர்கள் பெற்ற விருதுகள் .... 149
24. இறைவனிடம் இரண்டறக் கலந்தது .... 154

# முன்னுரை

அய்யா டாக்டர் டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்கள், காந்தீய வழியில் வாழ்ந்து, கல்வித் துறையில் அரும்பெரும் சாதனைகள் செய்துள்ள ஒரு மகான் ஆவார்கள். இளம்பருவத்திலேயே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணிதேவி, அண்ணல் காந்தியடிகள் ஆகியோரின் வாழ்க்கைச் செய்திகளால் கவரப்பட்டுத் தேச சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள். நாட்டின் விடுதலை போராட்டத்தில் காந்தியடிகளின் தலைமையில் பங்கு கொண்டு, பலமுறை சிறை சென்று, அவர்கள் செய்திருக்கும் தியாகங்கள் ஏராளம்.

அரசியல், சமுதாய சேவை, வழக்குரைஞர் பணி ஆகியவற்றின் இடையே கல்விப் பணியையே தன்னுடைய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டார்கள். பெரியநாயக்கன்பாளையத்தில் ஆண் குழந்தைகள் கல்விக்காக 1930 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தை ஆரம்பித்தார்கள். அங்குக் கல்வி பெற்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இன்று உலகம் முழுவதும் சிறந்து விளங்குகிறார்கள். வித்யாலயம் வெள்ளி விழா கொண்டாடிய 1955 ஆம் ஆண்டு, மகளிருக்காக ஒரு கல்வி நிறுவனம் துவங்க வேண்டுமென முடிவெடுத்து 1955 ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் உயர்நிலைப் பள்ளியையும், 1957 ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியையும் தோற்றுவித்தார்கள். அய்யா அவர்களின் தொலைநோக்கும், தீவிர முயற்சிகளும் இந்த கல்வி நிறுவனங்களுக்கு ஆழமான அஸ்திவாரத்தை அளித்தன.

...TITUTE FOR H... AND HIGHER E... (DEEMED UNIVERSITY)

தாய்க்குலம் தழைத்தோங்கினால் தான் நாடு உயருமென்று உறுதியாக நம்பினார்கள். அவர்களுடைய தெய்வீக வாழ்க்கை நெறிகளும், ஆழமான கருத்துக்களும், வலிமை நிறைந்த தெளிவான திட்டங்களும், 1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, 1988 ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக்கழகமாக மலர வழிவகுத்தன.

ஆண்டவன் அருளால் இன்று அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், மனையியல், அறிவியல், கலையியல், கல்வியியல், நிர்வாகவியல், பொறியியல் என்று ஆறுபுலன்களின் கீழ் 30 துறைகளுடனும், முனைவர் பட்டப்படிப்புவரை பயிலுவதற்கான திட்டங்களுடனும் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. பல அகில உலகத் தொடர்புகள், மாணவியரின் அறிவு வளர்ச்சிக்கு உதவியாக அமைந்துள்ளன. ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு சமுதாயத்திற்குப் பயனளிக்கின்றன. அவற்றின் விளைவாக, மக்களுக்குப் பயன்படும் வகையில், பல நூல்கள் வெளியாகி உள்ளன. நாட்டுப் பற்றும் சமுதாய சேவையும் நமது கல்வித் திட்டத்தின் இருகண்களாக இருக்க வேண்டுமென்று அய்யா அவர்கள் விரும்பினார்கள். அவை, நிறைவாகிக் கொண்டிருந்ததை அய்யா அவர்கள் கண்டு பூரித்திருந்தார்கள். மாணவியர்களிடம் பேசும்பொழுதெல்லாம் உயர்ந்த ஆன்மீக கருத்துக்களை எளிய முறையில் கூறி அவர்களைப் பக்தி வழிப்படுத்தினார்கள்.

தெய்வீக சக்தியும், மனித நேயமும் எல்லையற்ற அன்பும் கொண்ட மாமனிதராகிய அய்யா அவர்களைப்பற்றி இன்றைய தலைமுறையினருக்கும், பொதுமக்களுக்கும்


அறிமுகம் செய்யும் வண்ணம் இந்நூலை எழுதியிருக்கிறேன்.

இந்நூலை எழுதுவதற்குப் பெரிதும் உதவிய அவினாசிலிங்கம் பல்கலைக்கழகப் பதிவாளர், முனைவர் சரோஜா பிரபாகரனுக்கு என் நன்றி. பல கடமைகளுக்கிடையே அவர்கள் செய்த உதவி என் பாராட்டுக்குரியது.

அன்புடன் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியிருக்கும் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அய்யா அவர்கள்பால் உள்ள பேரன்பினால் அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிகளுக்கும், முன்னேற்றத்திற்கும் அருட்செல்வர் அவர்கள் காட்டி வரும் அக்கறை மகத்தானது. எனக்கு அவர் அவ்வப்போது தந்துதவும் யோசனைகள் பல்கலைக் கழகத்திற்கு உறுதுணையாக இருக்கின்றன.

இந்நூலைப் படிப்பவர்களுக்கு வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாய் விண்ணுலகிலிருந்து நம்மை வாழ்த்திக் கொண்டிருக்கும் அய்யா அவர்களின் ஆசி நிறைய கிடைக்க, இறைவன் அருள் புரிவாராக.

(இராசம்மாள் பா. தேவதாஸ்)
வேந்தர்
அவினாலிங்கம் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் — 43



அருட்செல்வர் டாக்டர் N. மகாலிங்கம் அவர்கள்

**நா. மகாலிங்கம்**
*தலைவர்*
சக்தி குரூப் நிறுவனங்கள்

180, ரேஸ்கோர்சு சாலை
கோயமுத்தூர் - 641 018
✆ 215552

# அணிந்துரை

கலைஞர்களைப் போற்றுகிற தேசத்தில்தான் கலைஞர்கள் அதிகமாகத் தோன்றுவார்கள். தியாகிகளைப் போற்றி வணங்கும் தேசத்தில்தான் தியாகிகள் அதிகமாகத் தோன்றுவார்கள்.

சுதந்திரப் போராட்டத் தளபதி தியாகி அவினாசிலிங்கம் அய்யா அவர்களுடைய ''வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளண்மை'' நிரம்பிய வாழ்வை பாமரனுக்கும் புரியும் பழகு தமிழில், சொற் சித்திரமாக வடித்துத் தந்திருக்கிறார் வேந்தர் திருமதி. டாக்டர் ராஜம்மாள் பா. தேவதாஸ் அவர்கள்.

ஒரு மணி நேரத்தில் வாசித்துவிடக் கூடிய சிறிய நூல், எளிய நூல். அட்டை முகப்பில் குழந்தைகளுக்கு மத்தியில் அய்யா அவர்கள் ஒரு குழந்தையாகவே மாறி குதூகலமாகப் பேசிக் கொண்டிருக்கும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. அந்தக் குழந்தைகளும்கூட இந்த நூலினை வாசித்து அனுபவிக்க முடியும். அதேசமயம் இளைஞர்களும் பெரியவர்களும் இந்நூலில் அள்ளிக் கொள்வதற்குரிய அரிய செய்திகள் அநேகம் உள்ளன.

அய்யா அவர்கள் எனது தந்தையின் மதிப்பிற்குரிய கோவை நகர நண்பர்களில் ஒருவர். காங்கிரஸ் கட்சி விஷயமாகப் பொள்ளாச்சிக்கு வருகை தந்த போதெல்லாம் தவறாமல் எங்கள் வீட்டுக்கு வருவார். எனது தந்தையோடு உரை யாடுவார். நான் சிறுவனாக இருந்தேன். அவருடைய

பேச்சு ஒவ்வொன்றும் எனது சிந்தனையில் தாக்கங்களை ஏற்படுத்தத் தவறியதே இல்லை.

அய்யா அவர்களை ஒரு அதிசயமான கலவை எனலாம். நேருஜியைப் போல தமிழ்நாட்டில் அய்யா அவர்கள் செல்வச் செழிப்புள்ள பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்தவர். படிப்பிலும், பக்தியிலும் சிறு பிராயத்திலேயே சிறப்பாக விளங்கினார். சென்னையில் கல்லூரியில் படித்து வக்கீல் தொழிலுக்குத் தேர்ச்சி பெற்றுக் கோவையில் திறமையான வக்கீலாகப் புகழ் பெற்றார்.

அவருடைய உள்ளத்தில் சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி ஒன்று இடிபோல எப்போதும் முழங்கிக் கொண்டேயிருந்தது. ''மகத்தான காரியங்களைச் செய்வதற்காக நீ பிறந்திருக்கிறாய். சராசரி மனிதர்களைப் போல சாதாரண செயல்களில் உன் வாழ்க்கையை வீணாக்கி விடாதே'' என்ற இந்த வாசகங்கள்தான் அவருடைய இதயத்துக்குள் இடைவிடாது முழங்கிக் கொண்டிருந்த அந்த இடிமுழக்கங்கள்.

சென்னையில் படித்துக் கொண்டிருந்தபோது அய்யா அவர்களும் அவருடைய விடுதி நண்பர் சுவாமி சித்பவானந்தரும், அடிக்கடி ராமகிருஷ்ண மடம் சென்று அருளுரைகள் கேட்டனர். இங்கேதான் அய்யா அவர்களின் தனித்துவத்தை நாம் தரிசிக்க முடிகிறது.

சுவாமி சித்பவானந்தா குருதேவர் பரமஹம்சரின் பாதையிலேயே பயணமாகிறார். ஆனால் அய்யா அவர்கள் குருதேவர் ராமகிருஷ்ணரின் சீடராக இருந்து கொண்டே மற்றுமொரு குருநாதரைச் சந்திக்கின்றார். அவர்தான் மகாத்மா காந்தியடிகள். காந்திஜியின் வாழ்க்கை அய்யா

அவர்களைக் கரைத்து உருக வைத்துவிடுவதை நூலாசிரியர் பல்வேறு இடங்களில் தொட்டுக் காட்டியுள்ளதைப் படிக்கும் போது அம்மா அவர்களுடன் சேர்ந்து அய்யா அவர்களை நாமும் தொழுது வணங்கத் தூண்டிவிடுகிறது.

அய்யா அவர்கள், ராமகிருஷ்ண வித்யாலயத்தை ஒரே ஒரு ஹரிஜன மாணவன் மூலம் தொடங்கி அதற்கு காந்திஜியே அடிக்கல்லும் நாட்ட வைத்தார்.

வித்யாலயத்தை மேற்பார்வையிட ஒருவரை நியமித்துவிட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதாகிறார். சிறை செல்கிறார். ஒருமுறை அல்ல ஏழு முறை. ஒரு சில நாட்கள் அல்ல. ஏறக்குறைய 7 ஆண்டுகள். மதுரை கம்பம், கடலூர் முதலிய சிறைக் கூடங்களில் அய்யா அவர்கள் தவம் இருந்தார்கள். உடன் சிறைப்பட்ட கைதிகளுக்கு அய்யா அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்தினார். அன்றைய ஆங்கிலேய அரசின் சிறைக்கூடங்கள் எப்படி இருந்தன என்பதைப் பற்றிய செய்திகளும் நமது இளைஞர்களுக்குத் தேவை.

காந்திஜி தண்டித் துறைமுகத்தில் உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் கைதானதும் வேதாரண்யத்தில் ராஜாஜியும், சர்தார் வேதரத்னமும் கைதானதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் கோவையில் வாலாங்குளத்தில் உப்புச்சத்யாக்கிரகப் போராட்டத்தை செய்து அய்யா அவர்களும் ராகவாச்சாரியும் கைதான செய்தி பலருக்குத் தெரியாத மிக அரிய செய்தி.

கோவை ஒப்பணக்கார வீதியில் அய்யா அவர்களின் வீட்டில் காந்திஜி மதிய உணவு சாப்பிட்ட செய்தியை இந்நூல் மூலமே முதன் முதலில் நான் தெரிந்து கொண்டேன்.

இவ்வாறு அய்யா அவர்கள் குருதேவர் – மகாத்மா ஆகிய இருபெரும் ஆன்மாக்களின் அருளாற்றிலேயே இறுதி நாள்வரை இன்புற்றிருந்தார்கள்.

அய்யா அவர்கள் அரசியல் துறையில் பெற்ற புகழ் அவரை அமைச்சராக்கியது. அப்போதுகூட அவர் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்று அவர் ஆற்றிய பணிகளுக்கு ஈடு இணையில்லை. கலைக்களஞ்சியம் இந்திய மொழி களிலேயே முதன் முதலில் தமிழில்தான் அவரால்தான் வெளிவந்தது. 50 ஆண்டுகளாக மறுபதிப்புக்கூட வர வில்லை. ஆனாலும் அரசியல் துறை அய்யா அவர்களைக் கவரவில்லை.

அவருடைய துறவு. மனப்பான்மைக்கும் துணிவுமிக்க உணர்ச்சிகளுக்கும் அரசியல் துறை பொருத்தமானதாக இல்லை. கல்விப் பணியிலேயே கவனம் செலுத்தினார். குறிப்பாகத் ''தாய்க்குலம் தழைத்தோங்கினால்தான் நாடு உயரும் என்று உறுதியாக நம்பினார்கள்'' என்று நூலாசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மை. அந்த எண்ணத்தைச் செயலாக்க விரும்பிய அய்யா அவர்களின் 'கண்டுபிடிப்புத்தான்' அம்மா என்றால், அது மிகையல்ல.

அவினாசிலிங்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகி, கல்லூரியாகி, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகி முதல் வேந்தராக அய்யா அவர்கள் பொறுப்பேற்றார். அவருடைய கனவை நனவாக்கும் புகழ் மிக்க காரியங்களை வேந்தராகப் பொறுப்பேற்றுள்ள அம்மா அவர்கள் ஆற்றி வரும் பணிகள் அனைவரின் பாராட்டு களுக்கும் உரியவைகளாகும்.

அய்யா அவர்களைப் பற்றிய இந்நூல் ஒப்பற்ற அவருடைய தலைமையை ஏற்று, அவருடைய தியாகங்களைத் தரிசித்து, அவருடைய பேராற்றல்களைப் போற்றி, அவருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அர்ப்பணிப்போடு அவருக்குச் சேவை செய்து திருப்தியும் அனுபவமும் பெற்ற அம்மா அவர்களால் எழுதப்பட்டிருப்பது மிக மிகப் பொருத்தம். அய்யா அவர்களுடைய 95–வது பிறந்த நாளில் இந்நூல் வெளியிடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

அனைவரும் படித்துப் பயன் பெற எனது வாழ்த்துகள்.

தங்கள் அன்புள்ள

(நா. மகாலிங்கம்)

# 1. பிறப்பும் பெற்றோரும்

*''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று.''*

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாய் உலக வரலாற்றில் திகழ்ந்தவர்கள் மிகச் சிலரே. அத்தகைய சான்றோர்களுள் டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள் பிறக்கும் பொழுதே ஆண்டவனால் தெரிந்துகொள்ளப்பட்ட புண்ணியவானாய்த் தோன்றி னார்கள். தன்னலங்கருதாத சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, ஏழை எளியோரின் வாழ்க்கை மேம்பட, பல்லாயிரக்கணக்கான இல்லங்கள் ஒளி பெற, வாழ்க்கை வளம் பெற, குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்விக்கண்களைப் பெற, மகளிர் கல்வி மேம்பாடடைய பாடுபட்டவர்கள். அவர்களை மக்கள் அனைவரும் பாசத்துடனும் நேசத்துடனும் அன்பாக 'அய்யா' என்று அழைத்தார்கள்.

அவர்களின் வாழ்க்கை வரலாறு எல்லோருக்கும் ஊக்கம் (inspiration) தருவதாக உள்ளது. அய்யா அவர்கள் தென்னிந் தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மாவட்டத்தில் கொடிகாத்த குமரனால் புகழ் பெற்ற திருப்பூரில் திரு.கே. சுப்பிரமணியம் செட்டியார் அவர் களுக்கும், திருமதி பழனியம்மாள் அம்மையாருக்கும் திரு மகனாக 5.5.1903 ஆம் ஆண்டு இம்மண்ணில் தோன்றி னார்கள்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கொப்ப இளமையிலேயே துடிப்புடன் விளங்கினார்கள். தந்தையார் சுப்பிரமணியம் செட்டியார் தம் குலத்தொழிலாம் வியாபாரத்தில் சிறந்து செயல்பட்டார்கள்.

*''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோற் செயின்.''*

என்ற முறையில் வியாபாரம் செய்து வந்தார்கள். தாய் பழனியம்மாள் அவர்கள் ஆன்மீக நெறியில் பிள்ளைகளைத் தெய்வபக்தியுடன் வளர்த்தார்கள்.

*''எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்*
*யானிதற் கிலனோர் கைமாறே.''*

என்ற பாடலுக்கேற்றவாறு அனுதினமும் சிவன் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாதல்லவா? தாய்தானே குழந்தையின் முதல் ஆசிரியை. தாயிடமிருந்து தானே குழந்தை அனைத்தையும் கற்றுக்கொள்கிறது. ஆம், தன்னை ஈன்றெடுத்த தாய், பக்தியின் சிந்தனை கொண்டு விளங்குவதை அறிந்த அய்யா அவர்கள் குழந்தைப்பருவம் முதலே ஆண்டவனிடம் எல்லையற்ற பக்தி கொண்டு விளங்கினார்கள். தன் தாய் கோவிலுக்குச் செல்லும் பொழுதெல்லாம் உடன் சென்றார்கள். தாய் ஆண்டவனிடம் உள்ளம் உருக வேண்டும்பொழுதெல்லாம் தானும் அவ்வாறே ஆண்டவனிடம் அடி பணிய வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அந்த பக்தி பிற்காலத்தில் பேருதவி புரிந்தது. கருவிலே திருவுடையவர் என்பதை மெய்ப்பித்தது.

அய்யா அவர்களின் அன்னையார் ஆஸ்துமா நோயினால் தாக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சில வேளைகளில் கோவிலுக்குச் செல்ல முடியாதபடி ஆஸ்துமா இளைப்பு வருத்தி விடும். உடனே தன்னருமை மகனை அழைத்து கோவிலுக்குச் செல்லப் பணிப்பார்கள். அய்யா அவினாசிலிங்கம் அவர்களோ கோவிலுக்குச் செல்லும் நேரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பார்கள். உடனே தாய் கூறியதைக் கேட்டுக் கோவிலுக்குச் சென்று வழிபட்டுப் பிள்ளையாருக்கு விளக்கில் எண்ணெய் ஊற்றிப் பிரசாதம் பெற்றுத் திரும்பி தாய், தந்தையருக்குக் கோவிலில் அளிக்கப்பட்ட விபூதி,

குங்குமம் முதலியவற்றைக் கொடுத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

அய்யா அவர்களின் அன்னையோ, தன்மகன் இவ்வாறு பக்தியில் வளருவது கண்டு உள்ளம் பூரிப்படைவார்கள். இம்மகனைப் பெறுவதற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று நினைப்பார்கள் போலும். அய்யா அவர்களின் பெயர் அவினாசியில் கோயில் கொண்டருளிய அவிநாசியப்பரின் பெயராகும். 'அவிநாஷ்' என்ற வடமொழிச் சொல்லுக்கு என்றும் அழியாமல் இருப்பது என்று பொருளாகும். பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்று, புகழுடம்பால் என்றும் அழியாமல் வாழப்போகும் அய்யா அவர்களுக்கு எவ்வளவு பொருத்தமாக, தீர்க்கதரிசனமாக அவரது பெற்றோர் பெயரிட்டுள்ளனர் என்பதை எண்ணும்போது வியப்பாக உள்ளது. பெயருக்கேற்ப பெரும் பக்திமானாய்த் திகழ்ந்தார்கள். 'உள்ளமே பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்ற கொள்கையின்படி தம் உள்ளத்தை இறைவன் வாழும் இல்லமாகச் சிறுவயது முதற் கொண்டு ஆக்கிக் கொண்டவர்கள்.

அய்யா அவர்களின் குடும்பம் ஒரு பெரிய கூட்டுக் குடும்பமாகும். நான்கு குடும்பங்களும் ஒரே குடும்பம் போல ஒன்றாக உண்டு உறங்கி வாழ்ந்து வந்தனர். கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் அய்யா அவர்கள் வாழ்ந்ததால் பிறருக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பிறரைத் தம்மைப்போல் சமமாகப் பாவித்தல், மற்றவர்களை மதித்து நடத்தல், பிறர் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழத் தன்னை மாற்றிக்கொள்ளுதல், பல்வேறு குணமுடையவர்களோடு இணைந்து பழகுதல், அனைவரிடமும் அன்பு செலுத்துதல் போன்ற பண்புகளை எல்லாம் இளமையிலேயே பெற முடிந்தது.

இல்லத்தலைவர் திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவர்கள். யார்

தங்கள் இல்லத்திற்கு வந்தாலும் இல்லையென்று சொல்லாத இயல்புடையவர்கள். வந்தாரை வாழவைக்கும் வள்ளல். திருமதி பழனியம்மாள் அவர்களும் ஏழைகளின் மீது இரக்கங் கொண்டவர்கள். பசியோடு வருகின்றவர்களுக்குப் பசியாற்றும் பண்புள்ளம் கொண்டவர்கள். அய்யா அவர்களோடு பிறந்தவர்கள் ஏழுபேர். மூன்று சகோதரர்கள் திரு. கந்தசாமி செட்டியார், திரு. திருஞானசம்பந்த செட்டியார், திரு. தண்டபாணி செட்டியார். அவர்களின் சகோதரிகள் திருமதி பர்வதம் அம்மாள், திருமதி முத்தம்மாள், திருமதி உண்ணாமலை அம்மாள், திருமதி கருணையாத்தாள் அம்மாள் ஆகியோர். அனைவரும் சகோதர பாசத்தோடு ஒன்றாக வாழ்ந்து வளர்ந்து வந்தார்கள்.

அய்யா அவர்களின் இளமைப்பருவம் நல்ல சூழ்நிலையில் அமைந்திருந்தது. இளமைப்பருவமே எதிர்கால வாழ்க்கைக்கு வித்திடும் பருவம். நல்ல சூழ்நிலையில், சிறந்த பெற்றோர்களின் அரவணைப்பில், பாதுகாப்பில் வளர்ந்து சகோதர, சகோதரிகளின் பாசத்தில் பிணைந்து, அத்தைமார், பெரியப்பா, சித்தப்பாக்களின் அன்பில் திளைத்து வளர்ந்த அய்யா அவர்களின் இளமைப் பருவம் சிறந்ததாக விளங்கியதில் ஐயமொன்றும் இல்லை.

*''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற''*

*— திருக்குறள்*

# 2. இளமைப்பருவம்

*'இன்று குழந்தைகள் நீங்கள் – எனினும்*
*இனி இந்த நாட்டை ஆளப்பிறந்தீர்*

என்ற பாரதிதாசனின் பாடலுக்கேற்ப விளங்கிய அய்யா அவர்கள் இளமையிலேயே துடிப்புடன் இருந்தார்கள். 'இளமையில் கல்' என்பதற்கிணங்க படிக்க வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு அதிகமாக இருந்தது. தாயின் அரவணைப்பிலும், தந்தையின் அன்புமிகு கண்டிப்பிலும், உற்றார், உறவினரின் அன்பிலும், உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் பாசத்திலும் வளர்ந்த அய்யா அவர்கள் படிப்பில் முழு கவனத்தையும் செலுத்தினார்கள்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது நாமறிந்த பழமொழி. இளமைப் பருவத்திலேயே அய்யா அவர்கள் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொண்டார்கள். சிறுவனாக இருக்கும் பொழுது ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பண்புடையவராக விளங்கினார்கள். அவர்கள் தம் ஆரம்ப கல்வியைத் திருப்பூர் ஆரம்பப் பள்ளியில் கற்றார்கள்.

ஆரம்பக்கல்வி அவர்களுக்கு அதிக உற்சாகத்தையும், ஆர்வத்தையும், ஆசிரியர்கள் பால் அளவில்லாத மரியாதையும் ஊட்டியது. மாணவர்கள், ஆரம்பப்பள்ளியில் தம் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை அப்படியே பசுமரத்திலடித்த ஆணி போல கற்றுக் கொள்ளும் தன்மை உடையவர்கள். ஆரம்ப காலத்தில் கற்ற கல்வி, பிற்காலத்திலும் உள்ளத்தில் பதிந்து உதவி புரிகிறது. ஆரம்பப் பள்ளியின் தலைமையாசிரியர் அய்யா அவர்கள் மீது அன்பு கொண்டவர். அய்யா அவர்களிடம் பிரியங்காட்டி

படிப்பில் கெட்டிக்காரனாக வளருவதற்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தார்.

ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களின் ஊக்கத்தினால், உயர்நிலைப் பள்ளிக்கல்வியை, கோவையிலுள்ள லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் தொடர்ந்தார்கள். இந்தப்பள்ளி இப்பொழுது சிஎஸ்ஐ மேல்நிலைப் பள்ளியாக விளங்குகிறது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு லண்டன்மிஷன் பள்ளியாக இருந்ததினால் பயிற்றுவிக்கும் மொழி ஆங்கில மொழியாக இருந்தது. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் அன்னியர் ஆட்சியில் மக்கள் சிக்குண்டு அல்லற்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், ஆங்கில வழிக் கல்வியைத் தான் பெற முடிந்தது. அய்யா அவர்கள் அன்னிய மொழியாக இருந்தாலும் ஆங்கிலத்தை ஆர்வத்தோடு கற்றுக் கொண்டார்கள்.

படிக்கும் மாணவப் பருவத்தில், நேரத்தின் அருமையைத் தெரிந்து, காலந் தாழ்த்தாது குறித்த நேரத்தில் பள்ளிக்குச் சென்றார்கள். வகுப்பில் உட்கார்ந்து கவனமாகப் பாடம் கேட்டார்கள். ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை அப்படியே மனத்தில் வைத்துக் கொள்ளும் சக்தியுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அன்றன்று பாடங்களை அன்றன்றே படித்து முடித்தார்கள். வீட்டுப் பாடங்களையும் ஒழுங்காகச் செய்தார்கள். இன்றைய தலைமுறையினருக்கு இந்தப் பழக்கங்கள் நல்ல படிப்பினையாக அமைய வேண்டும். தண்டனை பெறுவது அல்லது ஆசிரியர்களை ஏமாற்றுவது என்பது அய்யா அவர்களிடம் இருந்ததே கிடையாது. கடமையினின்று பிறழ்கின்ற மாணவர்களிடமிருந்து சிறு வயதிலிருந்தே ஒதுங்கியவர்கள் அய்யா அவர்கள். நல்ல புத்தகங்கள் இனிய நண்பர்கள் என்றவாறு அய்யா அவர்கள் நல்ல புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தைச் சிறு வயது முதலே கொண்டிருந்தார்கள். புத்தகங்கள் நல்ல

கருத்துக்களைக் கொடுப்பதோடு, உலகியல் வாழ்விற்கு உறு துணையாயும் அமைகின்றன. அவற்றின் மூலமாகப் படிப்பவர்களின் பொது அறிவு வளருகிறது. சிறுவயதில் கொண்டிருந்த நல்ல பழக்கவழக்கங்கள் அழியாது அய்யா அவர்களுக்கு இறுதிவரையும் கைகொடுத்தன.

நல்ல மாணவர்கள் நல்ல ஆசிரியர்களால் பாராட்டப் படுவார்கள். அய்யா அவர்களைப் பாராட்டி மகிழ்ந்து அறிவுரை நல்கியவர்களுள் சிறப்புமிக்கவர் தலைமை யாசிரியர் திரு. தேவசகாயம் ஆவார். அவர் அய்யா அவர்களது படிப்புத் திறனையும், பண்பாற்றலையும் கண்டு உள்ளம் மகிழ்ந்து ஊக்குவித்தார்.

தமிழாசிரியர் திரு. சொக்கலிங்கம் பிள்ளையும் அய்யா அவர்களின் நினைவில் நிலைத்திருந்தார். அவர் தமிழ் படிக்கும் பொழுதே சிறந்த பண்பாட்டினையும் படிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். மாணவச் செல் வங்களுக்குத் தமிழ்ப்பாடத்தோடு, தாய்மொழிப்பற்றும் தாய் நாட்டுப்பற்றும் ஊட்டியவர். அய்யா அவர்கள் இளமையில் இவரிடம் கற்ற இத்தகு பற்றுதான் பிற்காலத்தில் தமிழ் மேல் நிகரில்லா பாசமாக மலர்ந்தது. சுதந்திர இந்தியாவில் தமி ழகத்தின் முதல் கல்வி அமைச்சரானபோது தமிழுக்கும், தமி ழாசிரியர்களுக்கும் உரிய இடத்தைத் தேடித்தந்தார்கள்.

அய்யா அவர்கள் இளமையிலே கட்டுப்பாட்டுடனும் கண் டிப்புடனும் வளர்க்கப்பட்டவர்கள். அய்யா அவர்களின் கையெழுத்து அழகாக இருக்கும். மாணவராக இருந்த பொழுது கையெழுத்தில் அக்கறை காட்டினார்கள். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்றாற்போல் கையெழுத்தை அழகுபடுத்த தினமும் எழுதி எழுதிப் பழகினார்கள். வெற்றியும் பெற்றார்கள். இக்கால மாணவர்கள் அய்யா அவர்கள் செய்தது போல தத்தம் கையெழுத்தைத் திருத்திக் கொள்ளுவதில் ஆர்வம் கொள்ள வேண்டும்.

அய்யா அவர்களின் பள்ளிப் பருவம், ஆசிரியர்கள், சக மாணவர்கள் அனைவராலும் பாராட்டப்பட்ட பருவமாக சீரும் சிறப்புமாக அமைந்திருந்தது.

*''கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.''*

*— திருக்குறள்*

# 3. கல்லூரி வாழ்க்கை, வழக்குரைஞர் பணி

பள்ளிப் படிப்பை முடித்த அய்யா அவர்கள், மேற் படிப்புக்காகச் சென்னை மாகாணத்தின் தலைநகர் சென்னைக்குச் சென்றார்கள். இளமையிலேயே படிப்பில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அவர்களுக்குத் தன் பெற்றோர்களைப் பிரிந்து சென்னை பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்று படிப்பது சிரமமாகத் தோன்றவில்லை.

கண்ணுங் கருத்துமாகப் பாடங்களைக் கற்றுத் தேர்ச்சி யடையவே விரும்பினார்கள். நல்ல மாணவர்களைக் காணும்பொழுது ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியும் மனத்தில் திருப்தியும் ஏற்படுவது இயல்பே. இக்கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது, அய்யா அவர்களை ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டி மகிழ்ந்ததில் ஐயமில்லை. ஆசிரியர் களால் பாராட்டப்பட்ட மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களை வாழ்நாள் முழுவதும் மறக்கவேமாட்டார்கள். தங்கள் சிறந்த நிலைக்கு ஆசிரியர்கள்தான் காரணம் என்று உளமார எண்ணி, எப்பொழுதும் அதை நினைவு கூர்வார்கள். அய்யா அவர்களும் பச்சையப்பன் கல்லூரியில் படித்த நாட் களில் வரலாற்றுப் பேராசிரியர் சி.எஸ். சீனிவாச்சாரியாரை யும், கல்லூரி முதல்வர் எம். இரத்தினசாமி அவர்களையும் அடிக்கடி நினைவில் கொள்வார்கள்.

பச்சையப்பன் கல்லூரியில் படித்தபொழுது விக்டோரியா மாணவர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்றார்கள். ''நீ உன் நண்பனைப் பற்றிச் சொல். நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்'' என்ற பழமொழிக்கேற்ப இனிய நண்பர்களைப் பெற்றிருந்தார்கள். விடுதியில் தங்கியிருந்து பயிலும் மாணவர்கள் நல்ல நண்பர்களைப்

பெறுவார்களேயானால் அவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்புடையதாகவே அமையும். அய்யா அவர்களின் நண்பர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், 'சின்னு' என்று அன்போடு அழைக்கப்பட்ட சுவாமி சித்பவானந்தா அவர்கள். சுவாமி சித்பவானந்தா திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தை உருவாக்கியவர்கள்.

அய்யா அவர்களும், திரு. சின்னு அவர்களும் நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்திற்குச் செல்வார்கள். இருவரும் மஹாபுருஷ் மஹராஜ் போன்ற பெரியோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பார்கள். நண்பர்கள் இருவரும் நல்லுரைகளைக் கேட்டு மனதில் இருத்தி வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயன்று வெற்றியும் பெற்றார்கள்.

ஒருமுறை அய்யா அவர்களும், திரு. சின்னு அவர்களும் ராஜ்மஹராஜ் என்று அழைக்கப்பெறும் சுவாமி பிரம்மானந் தரையும், மஹாபுருஷ் மஹராஜ் என்று அழைக்கப்பெறும் சுவாமி சிவானந்தரையும் தரிசிக்கச் சென்றார்கள். சுவாமிகளின் திருவடிகளை வணங்கி ஆசி பெற்றார்கள். மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் இருவரிடமும் அன்போடு பேசி, மீண்டும் வருமாறு கூறினார்கள். அவ்வாறே பலமுறை சென்று சுவாமிஜி அவர்களைத் தரிசித்து வந்தது அய்யா அவர்களுக்கு மனநிறைவை அளித்தது.

அய்யா அவர்கள் இளங்கலை வகுப்பை முடித்து, கோடை விடுமுறையில் அன்பும் அருளும், பரிவும், ஆன்மீகமும் நிறைந்த மஹாபுருஷ் மஹராஜ் அவர்களைக் காண, புவனேஸ்வரத்திற்குச் சென்றார்கள். அங்கு சுவாமிஜியைக் கண்டு வழிபட்டார்கள். இளைஞன் ஒருவன் தமிழ்நாட்டி லிருந்து தன்னைத் தரிசிக்க வந்ததைக் கண்டு மகிழ்ந்த சுவாமிஜி, அய்யா அவர்களுக்கு ஆசி அளித்தார். இறைவனை உள்ளன்போடு நாடுகின்றவர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு ஆண்டவன் அருளுவான் என்பதை இச்சம்பவம் விளக்குகிறது.

மஹராஜ் அவர்கள் அய்யா அவர்களைப் புண்ணியத் தலமான பூரியைத் தரிசித்து வருமாறு கூறினார். ஆண்டவன் கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றும் பக்தனைப் போல அய்யா அவர்களும் சுவாமிஜி பணித்த அன்புக் கட்டளையை ஏற்றுக்கொண்டு, பூரியைத் தரிசிக்கச் சென்றார்கள். மஹராஜ் அவர்கள் அய்யா அவர்களுக்குத் தங்கப் பூண் போட்ட பென்சில் ஒன்றை அளிக்க, அதனைப் பெற மறுத்து, சுவாமிஜி அவர்களின் ஆசி ஒன்றே போதும் என்று நினைத்து மஹராஜ் அவர்களின் ஆசிபெற்று வந்தார்கள்.

அய்யா அவர்களுக்கு நெருக்கமான இன்னொரு இனிய நண்பர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் நம்பியார் ஆவார். அவர் பின்னாளில் சுவாமி அகமானந்தா ஆனார். அவரே பிற்காலத்தில் சங்கராச்சாரியார் பிறந்த புண்ணிய மண்ணான காலடியில் ஸ்ரீராமகிருஷ்ண அத்வைத ஆசிரமத்தை உருவாக்கினார்.

அய்யா அவர்கள் சட்டப் படிப்பைச் சென்னை சட்டக் கல்லூரியில் படித்தார்கள். அச்சமயம் அவர்கள் பச்சையப்பன் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தார்கள். சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்து கொண்டார்கள். கற்றவற்றை ஆழமாகச் சிந்தித்துச் செயல்படும் வண்ணம் கற்றார்கள்.

சட்டப்படிப்பு முடித்தவுடன் தன் சொந்த ஊருக்குத் திரும்பினார்கள். வழக்குரைஞர் தொழிலை முதலில் திருப்பூரில் தொடங்கினார்கள். பின்பு அவர்கள் கோவைக்கு வந்தார்கள். அங்கு புகழ்பெற்ற வழக்குரைஞரான தன் சிறிய தந்தை உயர்திரு டி.ஏ. இராமலிங்கச் செட்டியாருடன் பணியாற்றினார்கள். அப்பொழுது அய்யா அவர்களுக்கு வழக்குரைஞர் துறையில் சிறப்பான எதிர்காலம் இருக்கிறதென பலர் புகழ்ந்து கூறினார்கள். அண்ணல் காந்தியடிகள் வழக்குரைஞர் தொழிலை விடுத்து, நாட்டுச்

சேவையைக் கண்ணெனக் கொண்டாற்போல், அய்யா அவர்களும் தேசச் சேவையைப் பெரிதெனக் கொண்டார்கள்.

ஆதலால், அய்யா அவர்களின் மனம் வழக்குரைஞர் பணியில் செல்லவில்லை. மாறாக ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதில் அக்கறை எழுந்தது. சுவாமி விவேகானந்தரின் உள்ளத்தை உருக்கும் சொற்களான, 'நீ மகத்தான காரியங்களைச் செய்யப் பிறந்திருக்கிறாய். உன் சுயநலனுக்காகவும், பணத்திற்காகவும் சாதாரணச் செயல்களில் உன் வாழ்க்கையை வீணாக்க வேண்டாம்' என்பன மீண்டும் மீண்டும் அய்யா அவர்களின் நினைவுக்கு வந்தன. எனவே வழக்குரைஞர் தொழிலில் அவரது மனம் ஈடுபடவில்லை. உலக அறிவைப் பெற்ற பொழுதே, அகக்கண்ணைத் திறந்து, ஆண்டவனிடம் தன்னை அர்ப்பணிக்க வேண்டுமென்ற ஆன்மீக அறிவும் அவர்களுக்கு எழுந்தது.

*''அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி*
*விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே''*

*— தாயுமானவர்*

# 4. வித்யாலயத்தின் தோற்றம்

அய்யா அவர்கள் நல்ல பல நண்பர்களைப் பெற்றிருந்தார்கள். கல்லூரியில் படிக்கும் நாட்களில் திரு. சின்னு அவர்களுடன் சேர்ந்து மயிலாப்பூரிலிருக்கும் ஸ்ரீராம கிருஷ்ணர் மடத்திற்குச் சென்று மஹாபுருஷ் மஹராஜ் போன்ற பெரியோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பரவசமடைவார்கள். அங்கு சந்தித்த சாதுக்களின் அன்பும், பரிவும் அய்யா அவர்களை மிகுதியாகக் கவர்ந்தன. சுவாமி யதீஸ்வரானந்தா, சுவாமி சாஸ்வதானந்தா, சுவாமி கங்கேசானந்தா, சுவாமி சித்பவானந்தா, ஸ்ரீராமகிருஷ்ண மாணவர் இல்லத்தை நிறுவியவர்களில் ஒருவரான திரு. இராமனுஜாச்சாரியார், திருவாளர்கள் கந்தசாமிப்பிள்ளை, கிருஷ்ணமாச்சாரி, மாமுண்டி ஆகியோரின் தொடர்பு கிடைத்தது. நல்லாரைக் காணவும், நலமிக்க நல்லார் சொல் கேட்கவும், நல்லார் குணங்கள் உரைக்கவும் அவர்களோடு இணைந்து இருக்கவும் பெரும் பேறு பெற்றவர்கள் ஆனார்கள்.

இதுபோன்றே சுவாமி அசோகானந்தர், சுவாமி அகிலானந்தர், சுவாமி சித்தேஸ்வரானந்தர், சுவாமி ருத்ரானந்தர், சுவாமி சர்வக்ஞானானந்தர், சுவாமி கேதாதேஸ்வரானந்தர், சுவாமி ஆத்ம பிரகாசானந்தர், சுவாமி சாரதானந்தர், சுவாமி சிரத்தானந்தர், சுவாமி மாதவானந்தர், சுவாமி வீரேஸ்வரானந்தர் ஆகியவர்களுடன் அய்யா அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். குடும்பச் சூழ்நிலையும், நண்பர்கள் சூழ்நிலையும் அய்யா அவர்களைத் தொண்டு செய்யத் தூண்டின.

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்' என்ற தாயுமானவர் வாக்கிற்கொப்ப, அய்யா அவர்கள் தம்

உள்ளத்தை இறைவன் வாழும் இல்லமாக ஆக்கிக் கொண்டார்கள். அனுதினமும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு, உடனே ஆண்டவனிடம் சரணடைந்து விடுவார்கள். தன்னை மறந்த நிலையில்

*''பெற்ற தாய்தனை மகமறந் தாலும்*
*பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்*
*உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்*
*உயிரை மேவிய வுடல்மறந் தாலும்*
*கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்*
*கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்*
*நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கு*
*நமச்சிவாயத்தை நான்மற வேனே.''*

என்ற திருவருட்பா பாடலுக்கேற்ப ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை நினைத்து பரவசமடைவார்கள். இவ்வாறு இளம்பருவத்திலேயே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சரணடைந்தார்கள்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தைக் கொண்ட அய்யா அவர்கள் பணக்காரர் களுக்கும், வசதி படைத்தவர்களுக்கும் கல்வி பயிலுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன, ஆனால் கிராமப் புறங்களில் வாழும் குழந்தைகளுக்கும், வறுமைக் கோட் டிற்குக் கீழுள்ள குழந்தைகளுக்கும் கல்வி பயிலும் வாய்ப்பு இல்லையே என ஏக்கம் கொண்டார்கள். சுவாமி விவேகானந்தரிடம் பெரிதும் ஈடுபட்ட அவர்கள், ''அனைத்து வேலைகளும் புனிதமானவை; அவற்றுள் உயர்வுதாழ்வு இல்லை. ஒரு மனிதனின் உயர்வு அவன் எந்த வேலையைச் செய்கிறான் என்பதைப் பொறுத்ததல்ல. அவன் எத்தகைய மனப்பான்மையுடன் செய்கிறான் என்பதைப் பொறுத்த தாகும். அனைத்து வேலைகளையும் நாம் வழிபாடாகக் கருதித் தன்னலமின்றியும், பயன் எதிர்பாராமலும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யப்படும் கடமைகள் உயர்ந்த



ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி வீரேஸ்வரானந்தருடன் அய்யா அவர்கள்

தவமாகின்றன'' என்ற விவேகானந்தரின் அறைகூவலை மனதில் நிறுத்தி அதன் வழி செயலாற்றத் திட்டமிட்டார்கள்.

அய்யா அவர்களின் ஆன்மீக வாழ்க்கைக்குத் தூண்டு கோலாக அமைந்திருந்தது மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் குன்னூரில் தங்கியிருந்தபொழுது அவருக்குச் சேவை செய்யும் பெரிய வாய்ப்பு கிடைத்தமையேயாகும். சுவாமிஜி யின் அன்பும் அரவணைப்பும் அய்யா அவர்களின் ஆன்மீக நெறிக்கு வழிகாட்டிகளாயின.

அய்யா அவர்கள் எப்படியாவது ஒரு கல்விக்கூடம் அமைத்து அதில் ஏழை எளிய குழந்தைகள் சாதி, மத வேறு பாடின்றிக் கல்வி கற்க வழி செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

*''புகழ்பவர் புகழைப் பெற்றிடுவோர்*
*புழுதியை வாரி வாரிநிதம்*

*இகழ்பவர் இகழப் பட்டிடுவோர்*
*எல்லாம் ஒருவர் எனும் போதில்*

*புகழ்ச்சி இகழ்ச்சி என்பதெல்லாம்*
*புவியில் என்றும் ஒன்றே தான்*

*அகத்தில் இதனை உணர்ந்தினிய*
*அமைதி யதனைக் கொள்ளுங்கள்''*

என்ற சுவாமி விவேகானந்தரின் சந்நியாசி கீதம் என்ற பாடலைப் படித்த அய்யா அவர்கள் அதன் வழி நடக்கத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று எண்ணி, வித்யாலயம் ஆரம்பிப் பதற்கு மஹாபுருஷ்ஜிக்குக் கடிதம் எழுதி அவர்களின் ஆசியைப் பெற்றார்கள்.

தான் ஆரம்பிக்க இருக்கும் பள்ளியைத் துவக்கி வைப்ப தற்காக, அப்பொழுது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின்

தலைவர் சுவாமி யதீஸ்வரானந்தரை அய்யா அவர்கள் தன் பள்ளிக்கூட விழாவிற்கு வரும்படி அழைக்க, அவர்களும் அன்போடு இசைந்து வந்து பள்ளியை வாழ்த்தினார்கள். இதன்மூலம் அய்யா அவர்களுடைய நீண்ட நாள் கனவு 1930—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3—ஆம் நாள் நிறைவேறியது.

அன்று துவக்க விழாவில், கூட்டுறவுத் துறையின் தந்தை என்று புகழப்பட்ட, அய்யா அவர்களின் சிறிய தந்தையார் திரு டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், பொதுவாழ்வில் பல பொறுப்புகளை வகித்த திரு. வி.சி. வெள்ளிங்கிரி கவுண்டர், அய்யா அவர்களின் சிற்றன்னையின் கணவர் திரு டி.எஸ். கல்யாணசுந்தரம், கோவையின் பல முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. இரத்தினசபாபதி, சிறந்த கல்வியாளரான திரு. இராமச்சந்திரன் செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட கல்வி அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றிய திரு. இராமகிருஷ்ணன் அடிக்கடி வித்யாலயம் வருவார். அய்யா அவர்கள் காந்தியடிகளின் அழைப்பை ஏற்று விடுதலைப் போராட்டத்தில் குதித்தபொழுது இவரை வித்யாலயத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

பின்பு ஒருமுறை அய்யா அவர்கள் சிறைசென்ற பொழுது திரு மாணிக்கசாமி முதலியார் ஓராண்டு காலம் வித்யாலயத்தில் தங்கியிருந்து மாணவர்களை நன்கு கவனித்துக் கொண்டார். ஆண்டவன் பணிசெய்ய விரும்புகின்றவர்களுக்கு அவன் எப்படியாவது உதவி செய்வான் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒரு பள்ளியைத் துவக்குவது எளிது. ஆனால் அதனைத் திறம்பட நடத்துவது மிகவும் அரிது. அய்யா அவர்கள், பல

இன்னல்கள் நேரிட்ட போதிலும், அஞ்சா நெஞ்சத்துடன், குருமஹராஜ், அன்னை சாரதாமணி தேவியின் அருள் இருக்கும் பொழுது வெற்றி உறுதி என்று நினைத்துச் செயல்பட்டு வெற்றியும் கண்டார்கள்.

வித்யாலயத்தை நடத்துவதற்குப் பணம் வேண்டும். அய்யா அவர்களின் தந்தை, அய்யா அவர்கள் மீது பரிவும் பாசமும் கொண்டவர்; மனமுவந்து பணம் கொடுத்தார். பணம் மட்டும் இருந்தால் போதாது. வித்யா லயத்தை நடத்திச் செல்லுவதற்குப் பண்புள்ளம் கொண்டவர்கள் தேவைப்—பட்டார்கள். முதன் முதலில் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமையாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திரு பெரியசாமித் தூரன் சிறந்த அறிஞர். நல்ல தமிழ்க் கவிஞர். பிறருக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற துடிப்புடையவர். இலட்சியவாதி. செயலாற்றும் திறன் கொண்டவர். திரு பெரியசாமித் தூரன் அவர்களுக்குப் பின் திரு. கே. வேங்கடாசலம் தலைமையாசிரியர் பொறுப்பை ஏற்று மிகுந்த பக்தியுடனும், ஈடுபாட்டுடனும் பணியாற்றினார். திரு கே. வேங்கடாசலம் கோவையைச் சேர்ந்தவர். திரு சி. சுப்பிரமணியம் அவர்களின் உறவினர். வித்யாலயத்தின் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். அதன் வளர்ச்சியில் பெரிதும் துணைபுரிந்தவர். அவரைத் தொடர்ந்து பணியாற்றிய திரு கே. அருணாசலம், வித்தியாலயத்திற்கு வந்தபொழுது இளைஞராக இருந்தார். எப்பொழுதும் கதராடையே அணிந்தார். காந்தியக் கொள்கைகளில் பற்று கொண்டவர். வித்யாலயத்தின் மீது அன்பு கொண்டவர். சேவை செய்வதையே தன் மூச்சாகக் கொண்டவர். முதலில் ஆதாரப் பள்ளியின் தலைமையாசிரியராகி, 22 ஆண்டுகள் பணியாற்றி, வித்யாலய ஆசிரியர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்று சிறந்த சேவை செய்தார். மகரிஷியாகி பலருக்கு வழிகாட்டியாக விளங்கினார். மதுரை அய்யா என்று அன்போடு அழைக்கப்பட்ட திரு என். எம்.ஆர். சுப்பராமன் அவர்கள் வித்யாலயத்தின் வளர்ச்சிக்குப்

பெரிதும் உதவினார். திரு டி.எஸ். கல்யாண சுந்தரம் தொடக்க கால முதல் அவர் அமரராகும் வரை செயலாளராக இருந்து வித்யாலய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

அய்யா அவர்கள், சாதி சமய வேறுபாடற்ற வித்யாலயத்தை முதலில் ரவுண்ட்ரோடில் தொடங்கவே விரும்பினார்கள். அதற்காக திரு வெள்ளிங்கிரி கவுண்டர், கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் வெள்ளக் கிணற்றில் தமக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை அளித்தார். அங்கு 49 மாணவர்களும், இரு ஆசிரியர்களும், அய்யா அவர்களும் தங்கியிருந்தார்கள். இங்கு பாம்புகள் அதிகமாக இருந்ததினாலும், தண்ணீர் தட்டுப்பாடு இருந்ததினாலும் வித்யாலயத்தை போத்தனூருக்கு மாற்றினார்கள். போத்தானூரிலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்தது. பின் அங்கிருந்து வித்யாலயம் பெரியநாயக்கன்—பாளையத்திற்கு மாற்றப்பட்டது.

ஆண்டவன் அருளினால் வித்யாலயம் 300 ஏக்கர் நிலப்பரப்பில் இங்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு கல்வி நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டு பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயிலும் அறிவுக் கூடமாகத் திகழ்கிறது. இது ஆரம்பப்பள்ளி, மேனிலைப்பள்ளி, உறைவிடப்பள்ளி, கலைக்கல்லூரி, கல்வியியல் கல்லூரி, உடற்பயிற்சி கல்லூரி, தொழில் பயிற்சி கல்லூரி ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

வளமான வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் காட்டிலும், துன்பங்களும், சோதனைகளுமே ஒருவனைச் சிறப்பாக்குகின்றன என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றிற்கிணங்கப் பல சோதனைகள் அய்யா அவர்களைச் சிறந்த, ஒப்பற்ற மனிதராக்கின. பக்தியும், நேர்மையும், தூய்மையும், தொண்டுள்ளமும், தியாகமும், சேவை

மனப்பான்மையும் கொண்ட பல ஊழியர்களின் உழைப்பால் வித்யாலயம் உயர்ந்து வளர்ந்தது.

*"இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம்பதி னாயிரம் நாட்டல்,*
*பின்ன ருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,*
*அன்ன யாவினும் புண்ணியங் கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்."*

*— பாரதியார்*

# 5. காந்தியடிகளைச் சந்தித்தது – சிறை சென்றது

அய்யா அவர்கள் ஆன்மீகத்தில் தம்மைச் சிறுவயது முதற் கொண்டே அர்ப்பணித்துக் கொண்டது போன்றே நாட்டுக் காக உழைக்க வேண்டுமென்ற குறிக்கோளுக்கும் அர்ப் பணித்துக் கொண்டார்கள். அவர்கள் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஒருங்கே கொண்டிருந்தார்கள். அவர்கள் இளைஞராக இருந்த பொழுது இந்திய நாடு அந்நியர் ஆட்சியில் சொல்லொண்ணாத் துன்பத்தை அடைந்து கொண்டிருந்தது. காந்தியடிகளின் தலைமையில், கத்தி யின்றி இரத்தமின்றி அகிம்சை முறையில் வீரச்சுதந்திரம் வேண்டி நின்று, அதை அடையப் பாடுபட, நாடே ஒன்று திரண்டது. அய்யா அவர்கள்

*பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனி சிறந்தனவே*

என்ற பாடலுக்கேற்பப் பிறந்த நாட்டின் சுதந்திரத் திற்காக உழைக்க தனக்குத் தானே உறுதிமொழியை எடுத்துக் கொண்டார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர் கென்னடி அமரராகும் முன்பு ''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே நாட்டிற்காக நீ என்ன செய்தாய் என்று கேள்'' என்று கூறியபடி, இந்தியமண்ணில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் தான் நாட்டுக்குச் செய்ய வேண்டியதை நினைவில் கொண்டு செயல்படவேண்டும் என்று அய்யா அவர்கள் கருதினார்கள். இந்த குறிக்கோளைக் கொண்ட அய்யா அவர்கள், முதலில் பெற்றோர்கள் மறுத்தும் விடுதலைப் போராட்டத்தில் குதித்தார்கள். நாடு அவர்களை



தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளுடன்அய்யா அவர்கள்

அழைத்தது. அதிலிருந்து மீளமுடியாமல் சுதந்திரத்திற்காக முழுமனதுடன் பாடுபட்டார்கள்.

பொதுவாகப் பொதுப்பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிர்ப்புகளும், இன்னல்களும் அதிகமாக இருக்கும். அவை அனைத்தையும் எதிர்த்து நின்று வெற்றி பெறுகின்ற சக்தியை ஆண்டவன் அருளுவான் என்ற நம்பிக்கை அய்யா அவர்களுக்கு எல்லையற்றிருந்தது.

நாட்டு விடுதலைக்குக் காரணகர்த்தாவாக விளங்கிய தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளைச் சந்திக்கும் அரிய வாய்ப்பினை அய்யா அவர்கள் பெற்றார்கள். 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கம் நாடெங்கும் எழுந்தது. சென்னையில் படித்துக் கொண்டிருந்த அய்யா அவர்கள் சென்னைக் கடற்கரையில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு காந்தியடிகளின் பேச்சினைக் கேட்கும் பெரும் பேறு பெற்றார்கள். அக்கூட்டத்தில் கூடியிருந்த அனைவரும் வேலைவாய்ப்பினை அளிக்கும் கதராடையையே அணிய வேண்டுமென தேசப்பிதா அன்பு வேண்டுகோள் விடுத்தார். அன்று கதராடை அணிவேன் என்று சபதம் எடுத்துக் கொண்ட அய்யா அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தூய வெண் கதராடையையே அணிந்து அனைவருக்கும் வழி காட்டியாக விளங்கினார்கள்.

காந்தியடிகளை அய்யா அவர்கள் மறுமுறை 1926 ஆம் ஆண்டு திருப்பூரில் சந்தித்தார்கள். அப்பொழுது காந்திஜி அவர்கள் கதர் இயக்கத்தைப் பரப்பச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். விடுதலை வேட்கை கொண்ட அய்யா அவர்களுக்குக் காந்தியடிகளின் சந்திப்பு சுதந்திரப் போராட்டத்தில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும் என்னும் எண்ணத்தைத் தூண்டியது. அய்யா அவர்கள், காந்தியடிகள் போன்ற பெரியவர்களெல்லாம் நாட்டுக்காக உழைக்கத் தம்மை அர்ப்பணிக்கும் பொழுது, அப்புனித வேள்வியில் இளைஞரான நாம் ஏன் ஈடுபடக் கூடாதென எண்ணி சுதந்திர வேள்வியில் குதித்தார்கள். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும்

இரு கண்களெனக் கொண்ட அய்யா அவர்கள் நாடு விடுதலை பெற வேண்டுமெனப் பெரிதும் விரும்பினார்கள். பல இடையூறுகளுக்கும், உற்றார், உறவினர்களின் எதிர்ப்பு களுக்கும் மத்தியில், விடுதலை வேள்வித் தீயில் குதித் தார்கள்.

*''நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு''.*

என்ற திருக்குறளுக்கேற்பப் பாரதம் சிறந்த நாடாக விளங்க, தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் இறங்கிய அத்தனை பேருக்கும் சிறையிலிருக்கும் நிலை கிடைக்கவில்லை. சிலருக்கு மட்டுமே அந்த வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுள் தென் னிந்தியாவில் சிறப்புடன் விளங்கியவர்கள் அய்யா அவர்கள். நான்கு முறை சிறை சென்று, தன் உடல் நலங் கெட்டப் பின்னரும், உடலுக்காக வருந்தாமல் நாட்டுக்காக வருந்தினார்கள்.

*''பாரத நாடு பழம் பெரும் நாடு*
*நீரதன் புதல்வர் இந்நினைவ கற்றாதீர்''.*

என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியாரின் பாடலைத் தம் மனத்தில் கொண்டு பாரத பூமி விடுதலை பெற வேண்டும் என்பதற்காகச் சிறைவாசத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள். அய்யா அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட செயலை எண்ணிப் பார்க்கும் பொழுது நமக்கு மெய்சிலிர்க்கின்றது.

காந்தியடிகள் 1930ஆம் ஆண்டு 'யங் இந்தியா' இதழில் ''சுதந்திர போராட்ட வீரர்கள், சத்தியாகிரகிகள், ஆகவே அவர்கள் சினம் கொள்ளக்கூடாது. மாறாக மற்றவர்களின் சினத்தைத் தாங்கிக் கொள்ள வேண்டும். பொதுசொத் துக்குப் பொறுப்பாக இருக்கும்பொழுது, அதனைக் காப்ப தற்குத் தம் உயிரைக் கொடுக்க வேண்டும்'' என்று வேண்டு

கோள் விடுத்திருந்தார். இதனைப் படித்த அய்யா அவர்கள் தம்மை ஒரு சத்தியாக்கிரகியாக்கிக் கொண்டார்கள்.

காந்திஜி, 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதி காலை 8.30 மணிக்கு தண்டியில் உப்பை எடுத்து உப்பு சத்தியாகிரகத்தைத் தொடங்கி வைத்தார். அவர் மே மாதம் 4ம் தேதி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப் பட்டார். இச்செய்தி நாடெங்கும் பரவியது. இதனைப் படித்த அய்யா அவர்கள் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகி கோவை நகர காங்கிரஸ் குழுவின் தலைவரானார்கள். தொண்டராக இருந்து தொண்டு புரிந்த அய்யா அவர்களும், திரு. இராகவாச்சாரியும் வாலாங்குளத்தில் உப்பு காய்ச்சினார் கள். அதற்காக இருவரும் கைது செய்யப்பட்டு ஆறுமாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை பெற்றார்கள். அச்சமயத்தில் அய்யா அவர்கள் நூற்றுக்கணக்கான தொண்டர்களை நண்பர்களாகப் பெற்றார்கள்.

சிறையிலிருந்து வெளியே வந்த அய்யா அவர்கள் சுதந்திரத்தைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துக் கொண் டிருந்தார்கள். 1931 ஆம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அக்கூட்டத்தில் உண்மை, அகிம்சை ஆகிய வழிகளில் சுதந்திரம் பெறுவதுதான் காந்தீயம் என்று விளக்கப்பட்டது. கராச்சியிலிருந்து திரும்பி வந்த அய்யா அவர்கள் மாவட்ட காங்கிரசின் தலைவராகச் சுதந்திர இயக்கத்தை மூலைமுடுக்கெல்லாம் நிறுவினார்கள். அதோடு தஞ்சை, மதுரை, சேலம் போன்ற மாவட்டங்களிலும் சுதந்திர தீயைப் பரப்பினார்கள்.

*''என்று தணியும் இந்த சுதந்திரதாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''*

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப மூலை முடுக்கு களிலெல்லாம் சுதந்திர முழக்கத்தை முழக்கினார்கள், சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டபொழுது, மக்களிடையே நாட்டுப் பற்றையும், தமிழ்ப்பற்றையும் ஊட்டினார்கள்.

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்கும் காணோம்''*

*''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''*

போன்ற பாரதியாரின் பாடல்களைக் கூட்டங்களில் பாடச் செய்தார்கள்.

அய்யா அவர்களுக்கு 1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டதினால் இரண்டாம் சிறைவாசம் ஏற்பட்டது. முதல் சிறை அனுபவம் இரண்டாம்முறை சிறை செல்வதற்கு அய்யா அவர்களுக்குத் துணையாக இருந்தது. சட்டத்தை மீறியவர்கள் என்ற குற்றச்சாட்டுடன் சிறு அறையில், தனியாக அடைக்கப்பட்டார்கள். வசதியின்மை, அடிப்படை தேவைகள் கூட கிடைக்காமை, இவற்றைக் கண்டு துவண்டு விடவில்லை. சிறு அறையில்தான் காலைக்கடன் களைக் கழிப்பதற்கென பானை ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. உணவு கொடுப்பதற்கும், பானையைச் சுத்தம் செய்வதற்கும் மட்டுமே அறை திறக்கப்படும். யாரையும் பார்க்கவும், யாருடனும் பேசவும் அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகைய நிலையிலும் மிகுந்த துன்பம் வந்த போதிலும் சோர்ந்து விடாது, அன்பு மிகுந்த தெய்வம், துன்பம் அத்தனையும் நீக்கிவிடும் என்று இறைவனையே நினைத்துத் துன்பம் நிறைந்த சிறை வாழ்க்கையை இன்பம் நிறைந்த மனத்தோடு ஏற்றுக் கொண்டார்கள்.

முதலில் மதுரை மாவட்ட சிறையில் இருந்தார்கள். பின்பு அங்கிருந்து கடலூருக்கு மாற்றப்பட்டார்கள். சிறைவாசத்தின் பெரும்பகுதியை இங்கு தான் கழித்தார்கள். இந்தத்தடவை சிறைவாசம், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக சிந்திக்கவும், செயல்படவும் வாய்ப்பாக அமைந்திருந்தது. இம்முறை அய்யா அவர்கள் சிறையில் இருந்தபொழுது அவர்களது தந்தையார் சிறையில் தன்னுடைய மகன் இருக்கிறான் என்றறிந்து மனம் வருந்தினார். தன் மனக் குறையைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இறைவன் எழுந்

தருளியிருக்கும் பல கோயில்களுக்குச் சென்றார். எனினும் மகன் மீது கொண்டிருந்த பாசம் அவரைச் சிறையில் சென்று காண வேண்டுமெனத் தூண்டியது. சிறைக்குச் சென்று மகனைக் கண்டு, மனம் வருந்தி அழுதார். தந்தைக்கும் மகனுக்கும் இடையே இருந்த பாசத்தின் அளவை யாராலும் அளவிட்டுக் கூறவியலாது. எவ்வளவுதான் மனத்தை அடக்கிக் கொண்டாலும் தந்தை அழுவதைப் பொறுக்க மாட்டாது மகனான அய்யா அவர்களும் அழுதார்கள்.

அய்யா அவர்கள் விடுதலையான சில நாட்களில் அவர்களின் தந்தை திரு. சுப்பிரமணியம் செட்டியார் இறந்து விட்டார். அய்யா அவர்கள் தான் சிறையில் இருந்த காரணத்தினால்தான் தன் தந்தையாருக்கு விரைவில் இறக்கக்கூடிய நிலை ஏற்பட்டது என்று வருந்தினார்கள். எனினும் அவர்களுக்கு நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்ற எண்ணமே மிகுதியாக இருந்தது.

பெரியவர்களுக்குச் சிறையிலிருக்கும் பொழுதும் சிந்தனைகள் தோன்றுகின்றன. சிறைவாசத்தின் போது நல்ல புத்தகங்களையும் நல்ல நண்பர்களையும் பெறு கிறார்கள். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட இன்னும் தங்களை எவ்வாறு அர்ப்பணிக்க வேண்டும் என்றுதான் சிறையில் இருந்த அனைவரும் நினைத்தார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலைதான் அய்யா அவர்களுக்குச் சிறையில் இருந்த பொழுது கிடைத்தது. சிறையில் கிடைத்த நண்பர்கள் திரு.என்.எம்.ஆர். சுப்பராமன், சர்தார் ஏ. வேதரத்தினம்பிள்ளை, திரு.கே. சந்தானம் ஆகிய மூவரும் இறுதிவரை அய்யா அவர்களுடன் இணைபிரியா நண்பர் களாக இருந்தார்கள். சிறையிலிருந்தாலும், உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டதற்காவும், தடை உத்தரவை மீறியதற் காகவும் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், சிறையிலடைக்கப்பட்ட செய்திகளையும், அந்நிய துணி பகிஷ்காரம், கள்ளுக்கடை மறியல் ஆகியவற்றில் மக்கள் ஈடுபட்டதையும் அறிந்து அய்யா அவர்களுக்கு ஒருபுறம்

சொல்லொண்ணாத் துயரமும், மறுபுறம் நாட்டுக்காக மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராடியதை எண்ணி மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அய்யா அவர்களுக்கு இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாக நினைத்து ஏற்கும் உள்ளம் இருந்தது. அதனால்தான் சுதந்திர வேள்வியில் குதிக்க முடிந்தது.

சிறையிலிருக்கும் பொழுது நல்ல நூல்களைப் படிக்கவும், நல்ல கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்கவும் நிறைய நேரம் கிடைத்தது. தான் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் காரணம் 'ஆண்டவன் அருள்' என்று ஆணித்தரமாகச் சொல்லும் அய்யா அவர்கள், சிறையில் உள்ளத்தைச் சிறந்த முறையில் வைக்கவும், ஆண்டவனின் அருளை அனுதினமும் பெறவும் அன்றாட வழிபாட்டிற்காக ஸ்ரீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திரு வுருவப் படங்களையும் எடுத்துச் சென்றார்கள்.

கிடைக்கின்ற நேரத்தைச் சீரான முறையில் செலவிட வேண்டுமென அய்யா அவர்கள், திருக்குறள், கம்ப ராமாயணம், ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் போன்ற நூல்களைப் படித்தார்கள். ஆழ்ந்து சிந்தித்து ஆன்மீக நெறியில் தொடர்ந்து வளரவும் தேசத் தொண்டினை அர்ப்பணமாகச் செய்யவும் மீண்டும் உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

நூல்கள் தான் ஒருவரின் சிறந்த நண்பர்கள் என்பதை அறிந்திருந்த அய்யா அவர்கள் நல்ல நூல்களை எழுதினார்கள். ''இந்தியப் பொருளாதார நூல்'' என்ற நூலை எழுதினார்கள். இத்தகைய நூல் தமிழில் வெளிவந்தது அதுவே முதல் முறையாகும். இதனையடுத்து அறியாமை இருளகற்றி அறிவு ஒளியைக் கொடுக்கும் கல்வியைக் குறித்து சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை உள்ளடக்கிக் ''கல்வி'' என்னும் நூலை எழுதினார்கள். இந்நூல் கல்வி உலகில் வாழும் அனைவரும் படித்து பயன் பெற வேண்டிய ஒன்றாகும்.

அய்யா அவர்கள் மூன்றாம் முறையாக 1941 ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு ஆறு மாதம் சிறை தண்டனைப் பெற்றார்கள். திருச்சி சிறை யிலிருக்கும் பொழுது ''திருக்கேதாரயாத்திரை'' என்ற நூலை எழுதினார்கள். இந்நூல் வடநாட்டில் அய்யா அவர்கள் மேற்கொண்ட யாத்திரையை விளக்குகிறது. கொங்கு நாட்டுத் தமிழ் மணமும், நகைச்சுவை உணர்வும் இந்நூலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. சிறந்த பிரயாண நூலாக இதனைப் பலரும் பாராட்டினர். அய்யா அவர்கள் 1942 ஆம் ஆண்டு நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற காரணத்தினால் நான்காம் முறையாக பதினைந்து மாதங்கள் வேலூர் சிறையில் அடைக்கப் பட்டார்கள். அய்யா அவர்கள் வேலூர் சிறையில் இருக்கும் பொழுது, சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளைத் தொகுத்து ''இந்திய பிரசங்கங்கள்'' என்ற தமிழ் மொழி பெயர்ப்பு நூலைத் தந்தார்கள். சிறையில் இருந்தாலும் கிடைத்த நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்பதற்கு அய்யா அவர்கள் எழுதிய நூல்களே சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

*''சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே*
*துஞ்சிடோம் — இனி அஞ்சிடோம்''*

*— பாரதியார்*

# 6. அண்ணல் காந்தியடிகளும் அய்யா அவினாசிலிங்கமும்

பாரதத்திருநாடு விடுதலையடைய வேண்டுமெனப் பாடுபட்டுத் தன்னை அர்ப்பணித்து, தாய்த்திருநாட்டின் மகன் ஒருவனால் கொல்லப்பட்ட அண்ணல் காந்தியடிகளுடன் பயணம் செய்யவும், அவரோடு உரையாடவும் அய்யா அவர்கள் விரும்பினார்கள். அவ்வெண்ணம் நிறைவேறும் நாளும் அய்யா அவர்களுக்குக் கிடைத்தது. காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டு, நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த விழைந்தார்.

காந்தியடிகள் மக்களை வெகுவாக பீடித்திருந்த தீண்டாமை நோய் நீங்க விடுத்த வேண்டுகோள் பல்லாயிரக் கணக்கான மக்களை நெக்குருகச் செய்தது. அவர் அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் செய்ய வேண்டுமென விரும்பினார். காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முனைந்தார். அரிசன முன்னேற்றத்திற்காக நாடு முழுவதும் பயணம் செய்து நிதிதிரட்ட விரும்பினார். காந்திஜியின் ஒவ்வொரு பயணத்திலும், ஒவ்வொரு கூட்டத்திலும் அரிசன நிதிக்கு ரூபாய் நோட்டுகள், வெள்ளி, செம்பு நாணயங்கள் என்று பெருந்தொகைகள் குவிந்தன. அரிசன சேவை ஒரு சமயக் கடமையாகும். அது அகிம்சை முறையில் அமைய வேண்டும் என்று கூறி, பெண்களிடம் அரிசன நிதிக்காகத் தங்கள் நகைகளை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். மாணவர்களிடம் அரிசன மக்கள் வாழும் பகுதிகளைத் தூய்மைபடுத்துமாறு அன்பு வேண்டுகோள் விடுத்தார். அரிசனங்களுக்கு உதவி செய்யவும் அவர்களின் நிலையை

ADU LIB
108915

உயர்த்தவும், அரிசன வார இதழ் ஒன்றை நடத்தி வந்தார். அரிசனங்கள் இறைவனின் மனிதர்கள் என்று உளமார எண்ணினார். எனவே அவர்களின் வாழ்வுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தாம் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தார். இந்த உண்ணாவிரதம் இந்திய நாட்டினை உலுக்கியது. உடனடியான மாற்றங்கள் ஓரளவு ஏற்பட்டன.

உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட காந்தியடிகள் நாடு முழுவதும் அரிசனமக்களின் சேவைக்காக சுற்றுப் பயணம் செய்தார். சென்ற இடங்களிலெல்லாம் அரிசனங்கள் நம்மைப் போன்றவர்கள், அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது, இருக்க முடியாது என்று சுட்டிக்காட்டி சேவைக்காக பணம் திரட்டினார். காந்தியடிகளின் பேச்சினைக் கேட்ட உள்ளங்களெல்லாம் நெகிழ்ந்தன. மக்கள் மகிழ்ந்து பணமும், பொருளும், வாரி வாரி வழங்கினார்கள்.

காந்தியடிகள் சென்னை, கர்நாடகம், கேரளா ஆகிய இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கேரளாவிலிருந்து தெற்குப் பகுதியின் வழியாகத் தமிழ் நாட்டிற்கு வந்தார். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களுக்குச் சென்றார். காந்தியடிகளின் வருகை மக்களிடையே புதிய உற்சாகத்தை அளித்தது. தொடர்ந்து பல நாட்கள் இரவு பகலாக பயணம் மேற்கொண்ட காந்தியடிகள் குன்னூரில் ஒருவாரம் தங்கியிருந்து ஓய்வுபெற எண்ணினார்.

காந்தியடிகளின் நீலகிரி, கோவை பயணங்களுக்கு அய்யா அவர்கள் பொறுப்பேற்றார்கள். அதனை, தான் பெற்ற பெரும்பேறாக கருதினார்கள். காந்தியடிகளோடு பயணம் செய்வது என்பது கடினமானது. ஆனால் அய்யா அவர்களுக்கோ எளிதாக இருந்தது. குன்னூரில் அமிர்தாஞ்சன் உரிமையாளர் பங்களாவில் தங்கியிருந்தார்கள். அங்கு உண்ட எச்சில் இலைகள் ஆங்காங்கே கிடப்பதைக் கண்ட காந்தியடிகள் தம் இருகைகளினாலும் எடுத்து இடத்தை

T4.44136AVIw 31N8 108915

சுத்தம் செய்து கொண்டிருப்பதை அறிந்த அய்யா அவர்கள் உடனே ஓடிச்சென்று மற்ற இலைகளையெல்லாம் எடுத்து சுத்தம் செய்தார்கள். அன்று காந்தியடிகள் மூலம் கற்றுக் கொண்ட அச்செயலை அய்யா அவர்கள் இறுதி வரை கடைபிடித்தார்கள்.

காந்தியடிகள் கோத்தகிரி, குன்னூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு பின் உதகை யில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். குன்னூரில் ஒரு வாரம் ஓய்வு எடுத்தார். அய்யா அவர்களுக்கோ, காந்தியடிகளுடன் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அதே நேரம் காலம் தவறாது கடமை செய்தல், காந்தியடிகளுக்குத் தேவையானவற்றைச் செய்தல் ஆகியவற்றைக் கண்ணும் கருத்துமாக கவனித்துச் செய்து வந்தார்கள். அண்ணல் காந்தியடிகளுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆசிரமத்திற்கும், கண்டல் மடத்திற்கும் அய்யா அவர்கள் சென்றார்கள்.

பிரயாணத்தின்போது குன்னூரிலிருந்து கோவைக்கு வரும் வழியில், சொக்கம்பாளையம் கிராமத்திற்குச் சென் றார்கள். அக்கிராமம் மிகச் சுத்தமாக இருந்ததோடு மக்கள் அனைவரும் தூய கதர் ஆடையை அணிந்திருந்தார்கள். அவ்வூரில் காந்தியடிகளின் பேச்சுகளைத் திரு சுப்ரி (சுப்ரமணியம்) அவர்கள் மொழிபெயர்த்தார்.

இந்தியாவின் 'கதர் தலைநகரம்' என்று காந்தியடி களினால் அழைக்கப்பட்ட திருப்பூரில், பெருந்திரளாக மக்கள் திரண்டிருந்து காந்தியடிகளைத் தரிசித்துப் பொன்னும், பொருளும் வாரி வாரி வழங்கினார்கள். அன்று இரவு திருப்பூரில் அய்யா அவர்களின் தமையனார் திரு டி. எஸ். கந்தசாமி செட்டியார் அவர்கள் இல்லத்தில் தங்கி யிருந்தது பெரும்பேறாக அமைந்தது. அந்த இல்லத்திற்கு 'காந்தி இல்லம்' என்ற பெயரே நிரந்தரமானது. அங்கிருந்து கோவையை நோக்கிப் பயணமானார்கள். அப்பொழுது வெயில் அதிகமாக இருந்தது. காந்தியடிகளுக்கு வெயில்

அதிகமாக இருக்குமே என்று வருந்திய அய்யா அவர்கள், திறந்த காரின் மேல்பகுதியை மூடி விடலாமே என்று கேட்டார்கள். காந்தியடிகளோ மக்களைப் பார்ப்பதுதான் நமக்கு முக்கியம் எனக்கூறி அதற்கு மறுத்து விட்டார்.

காந்தியடிகள் காரில் செல்லும் பொழுது அய்யா அவர்களிடம் மிக வேகமாக காரைச் செலுத்த வேண்டும் என்று கூறுவார்களாம். அய்யா அவர்கள் காரின் வேகத்தை அதிகப்படுத்த அஞ்சி, காந்தியடிகளிடம் இவ்வளவு வேக மாகச் சென்றால் விபத்து வந்து விடுமே என்று அச்சத்துடன் கூறினார்களாம். அதற்கு காந்தியடிகள் நாம் எப்படிச் சென்றாலும், ஆண்டவன் நம்மை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினால் அதனை யாராலும் மாற்ற இயலாது என்று கூறுவாராம். காந்தியடிகள் ஆண்டவன் மீது கொண்டிருந்த அபாரமான நம்பிக்கையை இது காட்டுகிறது.

அன்று இரவு காந்தியடிகள், ஒப்பணக்கார வீதியில் உள்ள அய்யா அவர்களின் இல்லத்தில் உணவருந்தினார். அவரது இல்லத்தார் அனைவரும் காந்தியடிகளின் திருவடி களில் வீழ்ந்து வணங்கி ஆசிபெற்றார்கள். அன்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அரிசனங்களுக்கு இழைக் கப்படும் அநீதிகளைக் கூறி, அவர்களுக்குச் சமஉரிமை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி நிதி கொடுக்கவும் வேண்டினார். அப்பொழுது ஏராளமான மக்கள் தாராளமாக நிதி வழங்கினார்கள்.

கூட்டம் முடிந்தபின் காந்தியடிகள் வித்யாலயத்தில் தங்குவதாக முடிவு செய்யப்பட்டது. வித்யாலத்திற்குச் செல்லும் வழியில் இரயில் பாதையின் கதவுகள் சாத்தப் பட்டிருந்தன. இதனை அறியாத கார் டிரைவர் வேகமாக ஓட்டிச் சென்றதினால் கார் மோதியது. அப்பொழுது அய்யா அவர்கள் மிகவும் பயந்து போனார்கள். காந்தியடிகள் அய்யா அவர்களைப் பார்த்து, கவலைப்படாதே என்று கூறி ஆறுதல் கூறினார். வித்யாலயத்தில் காந்தியடிகள் தங்கியிருந்ததைப் பெரும் பேறாகக் கருதி அனைவரும் அண்ணலின்

அடிகளில் வீழ்ந்து ஆசிபெற்றார்கள். காந்தியடிகள் அரிக்கன் விளக்கொளியில் கடிதங்களுக்குப் பதில் தம் கைப்படவே எழுதினாராம். எந்தப் பொருளையும் வீணாக்கக் கூடாது என்பதை காந்தியடிகள், கடிதங்களின் உறைகளில் பின் பக்கங்களை பதில் எழுதுவதற்கும், கட்டுரைகள் எழுது வதற்கும் பயன்படுத்திய விதமே எடுத்துக்காட்டும் என்று அய்யா அவர்கள் கூறினார்கள்.

காந்தியடிகளோடு அய்யா அவர்கள் பயணம் செய்யும் பொழுது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் நேரத்தை காந்தியடிகள் கேட்டுக் கொண்டு ஆழ்ந்து உறங்கிவிட்டு குறிப்பிட்ட இடம் வந்தடைந்தவுடனேயே எழுந்து விடுவாராம். காந்தியடிகள் இரவில் எவ்வளவு நேரம் கழித்து உறங்கச் சென்றாலும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து விடுவாராம். பிரார்த்தனையில் ஆழ்ந்து ஈடுபடும் காந்தியடிகள் ''என்னால் உணவின்றிப் பல நாட்கள் இருக்க முடியும். ஆனால் பிரார்த்தனையின்றி ஒருநாள் கூட உயிர்வாழ முடியாது'' என்று கூறுவாராம்.

காந்தியடிகள் வித்யாலத்திற்கு 7—2—1934ல் அடிக்கல் நாட்டினார். அன்று அய்யா அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அளவிடற்கரியது.

அதன்பின்னர் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கு காந்தி யடிகளோடு பயணம் செய்யும் வாய்ப்பும் அய்யா அவர் களுக்குக் கிடைத்தது. ஒவ்வொரு நிலையத்திலும் மக்கள் மகாத்மா காந்திக்கு ஜே என முழக்கமிட்டதைக் கேட்டு புல்லரித்துப் போனார்களாம் அய்யா அவர்கள்.

காந்தியடிகளோடு ஏற்பட்ட தொடர்பு அய்யா அவர் களுக்குப் புத்துணர்ச்சியையும் புதுத்தெம்பையும் அளித்தன. நாட்டுக்காகவும், தமிழுக்காகவும் பொதுச் சேவையில் ஈடுபட அய்யா அவர்களை இது மேலும் ஊக்குவித்தது.

*''வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா*
*நீ வாழ்க வாழ்க.''*

*— பாரதியார்*

# 7. அரசியல் பிரவேசம்

நாடு விடுதலையடையாத நிலையில், சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்காக, மத்திய மாநில சட்டமன்றங்களில் வலிமையும், ஆற்றலும், அறிவும், செயல்திறனும் கொண்ட அரசியல் குழு இருக்க வேண்டுமென்று அரசியலில் அனுபவமிக்க, அரசியல் தலைவர்கள் கருதினார்கள். அப்பொழுது நடைபெற இருந்த தேர்தலில் போட்டியிட வேண்டுமென முடிவு செய்து பம்பாய் நகரைச் சேர்ந்த புகழ் பெற்ற வழக்குரைஞர் திரு புலாபாய் தேசாய் தலைமையில் நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு நாடெங்கிலும் சென்று தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது.

சென்னையில் திரு இராஜாஜி அவர்கள் நாட்டுக்காக உழைக்கக் கூடிய ஆர்வம் மிக்க நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டியாக விளங்கினார்.

*''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்''.*

என்ற திருக்குறளுக்கேற்ப, எவரால் சிறந்த செயல்களைச் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்த்து, நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்க விழைந்தனர். இந்த அடிப்படையில், சென்னை தொகுதியிலிருந்து திரு.எஸ். சத்தியமூர்த்தியும், திருச்சி—தஞ்சை தொகுதியிலிருந்து டாக்டர் டி. எஸ்.எஸ். இராஜனும், மதுரை—திருநெல்வேலி—இராமநாதபுரம் தொகுதியிலிருந்து திரு.பி.எஸ். குமாரசாமி ராஜாவும், கோவை—சேலம்—வட ஆற்காடு தொகுதியிலிந்து அய்யா திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்களும் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தேர்தலில் கடும் போட்டியிருந்தும் அய்யா அவர்கள் பெரும் வெற்றி பெற்றார்கள்.

வெற்றியின் மத்தியில் அய்யா அவர்கள், தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் சிறப்புடன் செய்ய எண்ணி னார்கள். பெரியவர்களைக் காணவும் அவர்களின் ஆசியைப் பெறவும் விரும்பினார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட மத்திய சட்ட மன்ற உறுப்பினர்களுள் வயதில் சிறியவர், இளையவர், அய்யா அவர்களே. நாடாளுமன்ற அரசியல் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள். எனவே அவர்கள், வயதில் முதிர்ந்தவரும், அனுபவமிக்கவருமான திரு.ஆர்.கே. சண்முகம் செட்டியாரைக் கண்டு அவரிடம் யோசனைகளையும், ஆசியும் பெறச் சென்றார்கள். இங்ஙனம்,

*''தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையுள் எல்லாம் தலை''.*

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாய் அய்யா அவர்கள் திகழ்ந்தார்கள். திரு. சண்முகம் செட்டியார் அய்யா அவர்களைக் கண்ட மாத்திரத்தில் ஆச்சரியம் கொண்டார். தங்களுக்குள் கொள்கையின் அடிப்படையில் கருத்து வேற்றுமை இருப்பினும், அய்யா அவர்கள், அவரைக் காணச் சென்றது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அய்யா அவர்களின் பணிவு, அடக்கம், மரியாதை ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்த திரு. சண்முகம் செட்டியார், அய்யா அவர்களுக்கு ஆசி கூறியதோடு பல அறிவுரைகளையும் அளித்தார். ''சட்டமன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும், பல செய்திகளைப் பற்றி விவாதம் நடக்கும். ஆனால், அவற்றில் ஒன்றிரண்டைத் தேர்ந்தெடுத்து ஆழமாகச் சிந்தித்துச் சிறப்பாகப் பேச வேண்டும்'' என்று யோசனை கூறினார். இவற்றை அய்யா அவர்கள் கடைபிடித்து, நல்ல கருத்துக்களை எடுத்துக் கொண்டு, மக்களுக்கு நலன் விளைவிக்கக்கூடியது எது என்று ஆராய்ந்து அவற்றிற்காக வாதிட்டார்கள்.

1935 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டப்படி, மாநிலங்

களுக்கு ஆளுநர்களின் தலைமையில் தன்னாட்சி வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1937 ஆம் ஆண்டு நாடெங்கும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் காங்கிரஸ் கட்சி பெருவாரியாக வெற்றி பெற்று, மக்களின் நம்பிக்கைக்கேற்பவும், நாட்டு விடுதலைக்காவும், துன்பத் திலும், சுரண்டலிலும் அமிழ்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த கோடிக்கணக்கான மக்களின் துயர்துடைக்கவும் உறுதி மொழி எடுத்துக் கொண்டது.

அய்யா அவர்கள் மத்திய சட்டசபையில் இருந்தபொழுது, சென்னைச் சட்டமன்ற உறுப்பினர்களாக மதுரை காந்தி என்று அழைக்கப்பட்ட பெரியவர் திரு.என்.எம்.ஆர். சுப்ப ராமன் அவர்களும், உப்பு சத்தியாகிரகத்தில் சர்தார் என்ற பட்டம் பெற்ற திரு.ஏ. வேதரத்னம் பிள்ளை அவர்களும் இருந்தார்கள். 1938 ஆம் ஆண்டு மத்திய, மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் டில்லியில் நடை பெற்றது. பொதுசேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அய்யா அவர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ள டில்லிக்குச் சென்றார்கள். அப்பொழுது காந்தியடிகள் அரி சன சேவா சங்கத்தில் தங்கியிருப்பதை அறிந்து திரு. சுப்ப ராமன், திரு. வேதரத்னம் ஆகியோரோடு காந்தியடிகளைத் தரிசித்து அவர்களின் ஆசியைப் பெறச் சென்றார்கள். காந்தி யடிகள் அவர்களை கண்டு மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு மூவரையும் ஆசிர்வதித்தார். பெரியவரின் ஆசியைப் பெற்ற மனத்திருப்தியோடு மூவரும் தங்கியிருந்த இடத்தை அடைந் தனர். அய்யா அவர்கள் காந்தியடிகள் எழுதிய அரிசன இதழைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள். அதில், ''கோடிக்கணக்கான மக்கள் அரை வயிறு உணவு கூட இன்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் பிரதிநிதிகள் வாழவேண்டும். சிக்கனத்தைக் கடைபிடித்து, ஏழை மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எளிமையான வாழ்வு வாழ வேண்டும். தூய்மையுடனும், கண்ணியத்துடனும் வாழ வேண்டும். அதற்குப் பணம்

முக்கியமல்ல'' என்ற கருத்துக்களைப் படித்த அய்யா அவர்கள் இறுதிவரை தூய்மையோடும், பக்தியோடும் எல்லோரிடத்திலும் பிரியத்தோடும், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் காட்டாமலும் நடந்து வந்தார்கள். அய்யா அவர்களது வாழ்க்கை, பிறருக்குக் கைமாறு கருதாமல் உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.

அய்யா அவர்கள் மத்திய சட்டசபை உறுப்பினராக இருந்தபொழுது செய்த சேவை மகத்தானது. ஆங்கிலேயரின் நலனை மனத்தில் கொண்டு அரசு, பிரிட்டிஷ் பொருட்களுக்கு மூன்று சதவிகிதம் வரிச்சலுகை சட்டமன்றத்தின் அனுமதியின்றி அளித்தது. இதனை அறிந்த அய்யா அவர்கள் வெகுண்டெழுந்தார்கள். இதனை எதிர்த்து ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்கொண்டு வந்தார்கள். பலர் இந்த தீர்மானத்தை ஆதரித்தார்கள். இந்தியப் படையை இந்திய மயமாக்க வேண்டும் என்பது பற்றிய விவாதங்களையும் அய்யா அவர்கள் முன்கொண்டு வந்தார்கள். தாய்த்திரு நாட்டினைக் காக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய மக்களைக் கொண்ட இந்தியப்படையை இந்தியமய மாக்குவதில் என்ன தவறு என்று ஆணித்தரமாக வாதாடினார்கள். பலர் அய்யா அவர்களோடு சேர்ந்து இதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள். அதோடு மட்டுமல்லாமல் இதற்கென அமைக்கப்படும் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார்கள். பதினைந்து ஆண்டுகளுக்குள் இந்தியப்படை இந்தியமயமாக்கப்பட வேண்டுமென அய்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லதோர் பலனைக் கொடுத்தது. இன்று நம்படை, தேசீய மயமாக்கப்பட்டு நம்வீரர்கள் நாட்டைக் காக்கத் தங்கள் உயி

ரையும் தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள் அதற்கு அன்றே வழிகோலியவர்கள் அய்யா அவர்கள் என்று நினைக்கும்பொழுது பெருமையாக உள்ளது.

*''வேத முடையதிந்த நாடு – நல்ல*
*வீரர் பிறந்ததிந்த நாடு,*
*சேதமில் லாதஹிந்து ஸ்தானம் – இதைத்*
*தெய்வமென்று கும்பிடடி பாப்பா.*

*– பாரதியார்*

# 8. அண்ணல் காந்தியடிகளின் அறைகூவலை ஏற்றல்

1940 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாட்னாவில் நடந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், ''இந்திய மக்கள் முழு சுதந்திரத்தைத் தான் ஏற்றுக் கொள்ளுவார்கள்'' என்று காங்கிரஸ் கட்சி பிரகடனப்படுத்தியது. இந்தத் தீர்மானம் பின்னர், மார்ச் மாதம் ராம்நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் சர்தார் வேதரத்தினம் பிள்ளை, திரு. என். எம்.ஆர். சுப்பராமன் மற்றும் சுதந்திர வேள்வியில் ஈடுபட விரும்பிய பல நண்பர்களோடு அய்யா அவர்களும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தின் தலைவரான சுபாஷ் சந்திர போஸ் அவர்கள், ஒன்றரை ஆண்டு காலமாக ஒரு பக்கம் செயற்குழு உறுப்பினர்கள் தீர்மானங்களை நிறைவேற்றி அறிக்கைகள் விடுத்ததும், மறுபக்கம் காந்தியடிகள் தலைமையில் வெளியிடப்பட்ட வேறுவகையான கருத்துகளும், அறிக்கைகளும் சாதாரண மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தின என்று கூறினார்.

இந்நிலையில், மக்களுடைய குழப்பத்தை நீக்கி, அனைவரும் ஒன்றுபட்டு இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபட வேண்டுமென்று, காங்கிரஸ் கட்சி தனிநபர் சத்தியாகிரக இயக்கத்தைத் தொடங்கியது. இந்த இயக்கத்தில் மத்திய, மாநில சட்டசபையின் உறுப்பினர்கள் பலர் தீவிரமாக ஈடுபட்டனர். அதே போன்று பல்வேறு மாநிலங்களிலிருந்து முதலமைச்சர்களும், ஏனைய அமைச்சர்களும் தங்கள் பதவியிலிருந்து விலகித் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர். அய்யா அவர்களும் இதில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டு மூன்றாவது முறையாகச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இம்முறை அய்யா அவர்களின் சிறைவாசம் ஆறு மாதங்களாகும்.

1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் காங்கிரஸ் சபை கூடியது. அப்பொழுது தலைவர்கள் மக்கள் தீவிரமாகச் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்க வேண்டுமென ஆவேச மாகக் கூறினார்கள். இதனைச் செவிமடுத்த அகில இந்திய காங்கிரஸ் குழு, நாடு தழுவிய அறப்போராட்டத்தை அகிம்சை வழியில் நடத்த அனுமதியளிக்கவேண்டும் என்றும் அதற்கு காந்தியடிகள் தலைமை தாங்க வேண்டுமென்றும் தீர்மானித்தது.


காந்தியடிகள் பேசும்போது, ''உங்களுக்குச் சுருக்கமான மந்திரம் ஒன்று சொல்கிறேன். அந்த மந்திரம் தான் 'செய் அல்லது செத்துமடி'. கடவுளையும் மனச்சாட்சியையும் சான்றுகளாக வைத்து இச்சூளுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். சுதந்திரம் அடையும் வரை ஓய்வதில்லை யென்றும் அதனை அடையும் முயற்சியில் உயிரையும் பணயம் வைக்க தயங்கமாட்டோம் என்றும் உறுதி பூணுங்கள்'' என்று ஒவ்வொரு சொல்லையும் ஆணித்தரமாக கூறினார். கூட்டத்திலிருந்த அத்தனைபேரும் கொதித் தெழுந்தனர்.

அனைவரும் சுதந்திர வேள்வியில் குதிக்க வேண்டுமென்ற இத்தீர்மானம் நிறைவேறியவுடன், அடுத்த நாள் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலின் முன் தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தேசியக் கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தப் போகிறோம் என்ற எண்ணமே அய்யா அவர்களுக்கு பேருவகையை அளித்தது. ஆனால் அப்பொழுது கொடியேற்றும் முன்னரே காந்தியடிகளும், செயற்குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டார்கள். அந்த செய்தி அய்யா அவர்களுக்கு வருத்தமாக இருந்தாலும், மனத்திலே உறுதி ஏற்பட்டது. என்ன ஆனாலும் சரி கொடியை ஏற்றியே தீர வேண்டும்

என்று தீர்மானித்தார்கள். எனவே பம்பாய் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்ற அய்யா அவர்களும் பலரும் கொடி வணக்கத்திற்குக் கூடியிருந்தார்கள். இதனைக் கண்ட காவல்துறை அதிகாரி உடனே கலைந்து செல்ல வேண்டும் என்றும் இல்லையெனில் கடுமையான விளைவுகள் நேரிடும் என்றும் மிரட்டினார். இந்த மிரட்டலுக்கு ஒருவரும் அஞ்சவில்லை.

அஞ்சாநெஞ்சம் கொண்ட மக்களைக்கலைக்க ஆங்கிலேய அரசு கண்ணீர்ப்புகை குண்டுகளைப் போட்டது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அய்யா அவர்கள் தரையிலே படுத்துக்கொண்டார்கள். எழுந்து பார்க்கும்போது தடியடி நடந்தது. இனிமேல் வாளா இருக்கலாகாது என்று அய்யா அவர்கள் கோவைக்குத் திரும்பி வந்தார்கள். மக்களைத் திரட்ட தயாரானார்கள். பகல் நேரங்களில் மக்களைச் சந்தித்தால் கைது செய்யப்படக்கூடும். ஆகவே மாலை நேரங்களில் பல பகுதிகளுக்கும் சென்று தலைவர்களையும் தொண்டர்களையும் சந்தித்து, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்கிற அவசியத்தை வலியுறுத்திக் கூறி, ''வெள்ளையனே வெளியேறு'' என்ற இயக்கத்தில் அனைவரும் சேர வேண்டுமென எடுத்துரைத்தார்கள். அய்யா அவர்களின் அறை கூவலை ஏற்றுக் கொண்டு கோவை மாவட்டத்தில் பலர் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கத் தயாரானார்கள். அய்யா அவர்கள் தாம் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பம்பாய்க்குப் புறப்படுமுன் 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் வித்யாலயம் சென்று ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது 'விசாரணையின்றி கைது செய்யலாம்' என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டார்கள். இங்ஙனம் மீண்டும் சிறைவாசத்தை அய்யா அவர்கள் அனுபவித்தார்கள்.

அரசாங்கம், நாடு முழுவதும் காங்கிரஸ்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தது. சட்டம், நீதி, தர்மம் ஆகிய



சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானத்துடன் அய்யா அவர்கள் அருகில்
டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ்

வற்றிற்கு எதிராக மக்கள் தண்டிக்கப்பட்டார்கள். முதலில் பாதிக்கப்பட்டவர்கள் காந்தியடிகளும், செயற்குழு உறுப் பினர்களுமேயாவார்கள். 1942—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9—ஆம் தேதி அதிகாலையில் காந்தியடிகளும், அவர்களது சகஊழியர்களும் தங்கியிருந்த பம்பாயிலுள்ள பிர்லா மாளிகைக்கு காவல் துறையினர் வந்து கைது ஆணையைக் காந்தியடிகளிடம் காட்டி கைது செய்வதாகக் கூறினார்கள். மகாதேவதேசாய், கஸ்தூரிபாய், சரோஜினி நாயுடு ஆகியோருடன் காந்தியடிகளைப் பூனாவிலிருந்து ஆகாகான் மாளிகைக்குக் கொண்டு சென்றனர். நாடு முழுவதும் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் காங்கிரஸ்காரர்கள், சிறந்த தலைமையில்லாமல் தவித்தனர். மக்கள் கோபம் கொண்டனர். கண்மூடித்தனமான செயல்—களில் ஈடுபட்டனர். மக்களின் செயல்களை அறிந்த ஆங்கிலேய அரசாங்கம் கொதித்தெழுந்தது. மக்களை ஈவு இரக்கமின்றிக் கொடுமைக்குள்ளாக்கியது. பெண்கள் கற்பழிக்கபட்டார்கள். மக்கள் தாக்கப்பட்டார்கள். பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

சென்னை மாகாணமும் இதற்கு விதி விலக்கல்ல. முக்கிய காங்கிரஸ் தலைவர்களும் சிறையில் அடைக்கப் பட்டனர். அய்யா அவர்களும் சிறை சென்றார்கள். அப்போது அவர்களோடு சிறையில் இருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர்தார் வேதரத்னம் பிள்ளை, என்.எம்.ஆர். சுப்பராமன், கே. சுப்ரமணியம் (சுப்ரி), ம.பொ.சிவஞானம். ஒ.பி.ராமசாமி செட்டியார், ஒ.வி. அளகேசன் ஆவார்கள்.

சில நாட்களுக்குப் பின், திருப்பூர்குமரன், திரு பி.எஸ். சுந்தரம் மற்றும் பலரும் கைகளில் கொடிகளை ஏந்திக் கொண்டு, ''மகாத்மா காந்திக்கு ஜே'' என்றும், ''பாரதமாதா வுக்கு ஜே'' என்றும் கோஷமிட்டுக் கொண்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்றார்கள். அப்பொழுது காவல் துறையினர் கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி எச்சரித்தனர். காவல்துறையின் எச்சரிக்கைக்கு மக்கள்

செவிமடுக்கவில்லை. கோபம் கொண்ட காவல் துறையினர் கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். திருப்பூர் குமரனைத் தலையில் அடித்து நொறுக்கினார்கள். திருப்பூர் குமரன் கையில் வைத்திருந்த கொடியை நழுவவிடாமல் அந்த இடத்திலேயே வீரமரணம் அடைந்தார். இப்போராட்டத்தில் மாணவர்களும் பெண்களும் பெருமளவில் பங்கு கொண்டனர்.

அய்யா அவர்கள் சிறையிலிருந்த இந்த சமயத்தில் மகாத்மா காந்தியடிகள் மூன்று வாரகாலம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார். காந்தியடிகளுக்கு உண்ணாவிரதம் இருந்து உயிர்விடுவது நோக்கமல்ல; மாறாகத் தண்ணீருடன் பழச்சாறுகள் கலந்து உண்டு, இன்னல்களைச் சகித்துக் கொண்டு எப்படியேனும் விடாமுயற்சியுடன் போராடிச் சுதந்திரம் பெற்றே தீரவேண்டும் என்பதுதான் நோக்கம். இது அய்யா அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. எழுபது வயதைத் தாண்டிய காந்தியடிகளின் உடலுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை நினைத்து வருந்தினார்கள். அவரது உடல் நலம் பெற வேண்டி இறைவனிடம் வேண்டி னார்கள். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வேண்டுவோர் தம் வேண்டுகோளைச் செவிமடுத்து ஆண்டவன் அருள் புரிவான் என்பதை அய்யா அவர்கள் நன்கு அறிந்திருந் தார்கள். அய்யா அவர்களின் மன்றாடல் உடனே கேட்கப் பட்டது. காந்தியடிகள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் என்பதை அறிந்ததும் அய்யா அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

> *''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்*
> *அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே''*
>
> *— பாரதியார்.*

# 9. புண்ணிய தலங்களைத் தரிசித்தல்

அய்யா அவர்கள், இமயமலையின் உச்சியில் இருக்கின்ற, புண்ணிய தலங்களான திருக்கேதாரம், பத்ரிகாசிரமம் ஆகியவற்றிற்குச் செல்ல விழைந்தார்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் வண்மை கொண்ட அய்யா அவர்கள் 1937 ஆம் ஆண்டு சிம்லாவிலிருந்து தன் புனித பயணத்தை மேற்கொண்டார்கள். அடுத்தநாள் அல்மோராவை அடைந்தார்கள். அய்யா அவர்களுடன் சுவாமி ஞானானந்தர், சுவாமி ருத்ரானந்தர் ஆகிய இருவரும் சென்றார்கள். மூவரும் அல்மோராவிலிருந்து பேருந்தில் 'கரூட்' என்ற இடத்தை அடைந்தார்கள். கரூட்டிலிருந்து தான் கால்நடையாக இமயமலை மீது ஏறிச் செல்லவேண்டும்.

ஆண்டவன் உருவாக்கிய வானளாவிய உயரங்கொண்ட மலைப்பகுதியில் கண்ட இயற்கைக் காட்சிகள் அய்யா அவர்கள் உள்ளத்தை கொள்ளை கொண்டன. மலைச்சாரலில் ஓடும் ஆறுகளின் ஓசையும், அழகும், அய்யா அவர்களை வியப்பில் ஆழ்த்தின. அவர்கள் அங்கு முதலில் பார்த்த நதி பிண்டாரிகங்கா ஆகும். இதனைக் கடந்து சென்று பிண்டாரிகங்கா அலகநந்தாவுடன் சங்கமமாகும் கர்ணப்பிரயாகையை அடைந்தார்கள். இந்த கர்ணப் பிரயாகை கஹர்வால் மாவட்டத்தில் இருக்கிறது. இங்குதான் திருக்கேதாரம், பத்ரிகாசிரமம் ஆகிய இரு புண்ணிய தலங்களும் இருக்கின்றன.

கர்ணப்பிரயாகையில் யாத்திரிகை செல்லும் பயணி களுக்கு உதவும் வண்ணம் சத்திரங்களைக் கட்டி அன்னம் வழங்கிவந்தவர் பாபா காளி கம்பளிவாலா. காளி என்பது அவரின் இயற்பெயர். எப்பொழுதும் கம்பளியை அணிந்திருந்தபடியால் 'கம்பளிவாலா' என்றும்,

எல்லோருக்கும் உதவிசெய்து வந்ததனால் அனைவராலும் அன்புடன் 'பாபா' (தந்தை) என்றும் அழைக்கப்பட்டார்.

கர்ணப் பிரயாகையிலிருந்து தெற்கே 25 கிலோமீட்டர் தூரத்தில் ருத்ரப்பிரயாகை உள்ளது. இங்குதான் அலகநந்தா மந்தாகினியுடன் சங்கமமாகிறது. வழிநெடுகிலும் ஆற்றின் ஓட்டம், அய்யா அவர்களின் மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. சில இடங்களில் அமைதியாகவும், சில இடங்களில் ஆரவாரமாகவும் மந்தாகினி ஓடுகிறாள். அலகநந்தாவும், மந்தாகினியும் சங்கமமாகும் காட்சி கண்டுகளிக்கத்தக்கது. உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் மலைப்பாறைகளுக்கு இடையே இரண்டு நதிகளும் புரண்டோடி ருத்ரவேகத்துடன் மோதுகின்றன. கேதார்நாத், பத்ரிநாத் செல்லுவதற்கு இந்த இடத்திலிருந்து வழி பிரிகிறது.

முதலில் அய்யா அவர்கள் கேதார்நாத் சென்ற காரணத்தினால் மந்தாகினி கங்கையைத் தொடர்ந்து சென்றார்கள். ருத்ரப்பிரயாகையிலிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் அகஸ்திய முனி என்ற தலம் இருக்கிறது. அகஸ்திய முனிவர் இங்குதான் தவம் செய்தார் என்ற எண்ணம் நிலவுகிறது. அதனைத் தொடர்ந்து அடைந்த இடம் குப்த காசியாகும். இந்த அழகான ஊர் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1667 மீட்டர் உயரத்திலிருக்கிறது. குப்த என்பதற்கு மறைந்த என்பது பொருளாகும். இமயத்தில் மறைந் திருப்பதால் இப்பெயர் பெற்றது போலும். இங்குள்ள கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விசுவநாதர். இங்கு கோவில் பூஜை செய்யும் அந்தணர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்பதை அறிந்த அய்யா அவர்கள், எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். இங்கு நடைபெறும் பூஜைமுறை தென்னாட்டுசிவன் கோவில்களில் நடைபெறும் பூஜை முறைகளை ஒத்திருந்தது. அதனைத் தொடர்ந்து உகிமடம் என்னும் இடத்தை அடைந்தார்கள். அங்கிருந்து வடபுறத்தில் பார்க்கும்பொழுது கேதார்நாத் சிகரம் தென்படுகிறது.

காலையில் கதிரவனின் இளஞ்சுடர் சிகரத்தின் மீது படும் காட்சி அய்யா அவர்கள் மனத்தைக் கவர்ந்தது. ''இதோ நான் இங்கு இருக்கிறேன், வாருங்கள்!' என்று கனிவுடன் அழைப்பது போல் இருக்கிறது என்று அய்யா அவர்கள் கூறினார்கள்.

அங்கிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ராம்பூர் என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கிருந்து, கடல் மட்டத்திலிருந்து சுமார் 2333 மீட்டர் உயரத்திலிருக்கும் திரியுக நாராயணம் என்னும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். இங்கு வேள்வித் தீயொன்று தொடர்ந்து எரிந்து கொண்டேயிருந்தது. திரியுக நாராயணத்தில் எழுந் தருளியிருக்கும் இறைவனை வழிபட்டுப் பின் பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஐந்து கிலோமீட்டர் சென்று கௌரி குண்டம் என்ற இடத்தை அடைந்தார்கள்.

கௌரிகுண்டத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருந்த ஜங்கல்சட்டி என்ற இடத்தை அடைந்தார்கள். அன்று இரவு அங்குத் தங்கியிருந்தார்கள். ஜங்கல்சட்டியிலிருந்து 11 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் கேதார்நாத் செல்ல எண்ணினார்கள். காலையில் எழுந்து இறைவனைக் கண்டு களிக்கப் போகிறோம் என்று எண்ணி மனத்தில் மகிழ்ச்சி, உள்ளத்தில் உற்சாகத்துடனும், 'கேதார்நாத் சுவாமிக்கு ஜே' என்று ஆரவாரமிட்டுக் கிளம்பிச் சென்றார்கள். வழி நெடுக ஆறு ஓங்காரமிட்டு ஓடிக் கொண்டிருந்தது. மலையின் உச்சியில் நீர் உறைந்து பனிக்கட்டியாக இருந்தது. உறைபனி மூடிய சிகரங்களின் உச்சியில் மேகங்கள் படர்ந்து கிடந்தன. இக்காட்சி, மேகம், நீர், பனிக்கட்டி ஆகிய மூன்றும் அடிப்படையில் நீராக இருப்பதுபோல வேறுவேறு பெயர் களோடு, வேறுவேறு உருவங்களோடு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் ஒருவனே. எனவே மக்களிடையே இருக்கும் வேற்றுமையை ஒழித்து இறைவனை உணர்வதே மெய்ஞானம். இஞ்ஞானத்தை ஆண்டவன் அருளினால்தான் பெறமுடியும் என்று

உணர்த்துவது போல் இருந்ததாக அய்யா அவர்கள் உணர்ந்தார்கள். கேதார்நாத்தில் நான்கு நாட்கள் தங்கி யிருந்து, கேதார்நாதனை உள்ளம் உருக வழிபட்டு மன நிறைவோடு, கேதார்நாத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அய்யா அவர்கள் வாழ்க்கையில் கேதார்நாத் பயணம் ஒரு மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது.

அய்யா அவர்கள் கேதார்நாதனைத் தரிசித்த நிறைவுடன் அடுத்த புண்ணியதலமான பத்ரிகாசிரமம் செல்ல விழைந் தார்கள். உகிமடத்தை அடைந்து, அங்கிருந்து குவாலியகாட் போய் சேர்ந்தார்கள். பின் பனியாகுண்டு என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் சோடா சோப்தா என்னும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். இங்குதான் துங்கநாத்திற்கு வழிபிரிகிறது. ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் துங்கநாத்தை அடைந்தார்கள். கோவிலுக்குச் சென்று துங்கநாதனை வழிபட்டு, வெளியே வந்து இறைவன் படைத்த இயற்கை காட்சிகளின் எழிலைக் கண்டுகளித்து, சிறிது நேரம் தங்கி இளைப்பாறி பயணத்தை மீண்டும் தொடர்ந்தார்கள்.

துங்கநாத்திலிருந்து சுமார் ஆறு கிலோமீட்டர் சென்று ஜங்கல்சட்டியை அடைந்து, மீண்டும் ஆறு கிலோமீட்டர் நடந்து மண்டல்சட்டியை அடைந்து, அங்கிருந்து 12 கிலோமீட்டர் சென்று சாமோலியைச் சேர்ந்தார்கள். சாமோலிக்கு, 'லால்சங்கம்' என்று வேறொரு பெயரும் உண்டு. சாமோலியிலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பிபல்கோடியை அடைந்து, அங்கிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் கருடகங்கா நதியை அடைந்தார்கள். கருடகங்கா ஆற்றிலிருந்து ஒருகல்லை எடுத்துச் சென்று பூஜை செய்தால் பாம்புகளின் தொல்லை இருக்காது என்பதைத் தெரிந்து கொண்ட அய்யா அவர்கள் அங்கிருந்து ஒரு கல்லை எடுத்துக் கொண்டு வந்து, பாம்புகள் தொல்லை செய்து கொண்டிருந்த வித்யாலயத்தில் வைத்திருந்தார்கள்.

இதற்கடுத்தாற்போல் குலாப்சட்டி என்ற இடத்தை அடைந்தார்கள். குலாப்சட்டியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் சென்றால் குமார்சட்டி உள்ளது. அங்கிருந்து 20 கிலோமீட்டருக்கப்பால் ஜோஷிமடம் இருக்கிறது. பத்ரி போகும் வழியில் ஜோஷிமடம் முக்கியமான ஓர் ஊர். ஆதிசங்கரர் மேற்கே துவாரகை, கிழக்கே பூரி, தெற்கே சிருங்கேரி ஆகிய இடங்களில் மடங்களைக் கட்டியதுபோன்று வடக்கே ஜோதிர்மடத்தைக் கட்டினார். இந்த மடத்தின் பெயரே ஊருக்குப் பெயராகி அதுவே ஜோஷிமடம் என்றாகிவிட்டது. ஜோஷிமடத்திற்கு அருகிலேயே அலகநந்தாவும் விஷ்ணு கங்காவும் சங்கமமாகும் காட்சி மிக அழகாக இருந்ததாக அய்யா அவர்கள் கூறினார்கள்.

ஜோஷிமடத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் பாண்டுகேசுவரமும், அதனைத் தொடர்ந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் ஹனுமான் சட்டியும், அதனைத் தொடர்ந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் பத்ரிநாத்தும் இருக்கிறது. அலகநந்தாவின் கரையில் அழகாக அமைந்திருக்கும் பத்ரிகாசிரமத்தை அடைந்தால், பயணிகள் ஒருவருக் கொருவர் 'பத்ரி விசால்கி ஜே' என்று கூறி வரவேற்பார் களாம். ''அப்பனே, ஆனந்தவடிவனே, உன் பொற்பாதத்தை அடையப் பெற்றால், இனிப்பெறத்தக்கது ஒன்றுமில்லை'' எனப் பக்தியால் தம்மை மறந்து பாடிச் செல்லும் பக்தர்களுக்கு ஏற்ற இடம் பத்ரிகாசிரமம்.

பத்ரிகாசிரமத்தில் காணப்படும் வெந்நீர் ஊற்று பக்தகோடிகளுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட வரப்பிரசாத மாகும். பத்ரிகாசிரமத்தின் முக்கிய சிகரத்திற்கு நீலகண்டம் என்று பெயராகும். அய்யா அவர்கள் நான்கு நாட்கள் இங்குத் தங்கியிருந்து ஆண்டவனை மனதார வணங்கி, அவன் அருளைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பத்ரிநாத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கி ஆண்டவன் அருளை அபரிமிதமாகப் பெற்ற

அய்யா அவர்கள், பத்ரிகாசிரமத்திற்கு வடக்கே சுமார் 53 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் சதபந்த் செல்ல விரும்பினார்கள். அங்கு செல்வது ஆபத்தானது. மிகக்கடினமானது என்பதை அறிந்தும் எப்படியும் செல்ல வேண்டுமென விரும்பினார்கள். ஆண்டவன் அருள் நமக்கு இருக்கும் பொழுது இன்னல்கள் நேரா, ஆபத்துக்கள் நெருங்கா என்று முழுநம்பிக்கையுடன் பயணம் மேற் கொண்டார்கள். போகும் வழியில் கிராமங்களோ, சத்திரங்களோ கிடையாது. சில இடங்களில் பாறைகள் சில சேர்ந்து குகைகள் உண்டாகி இருக்கும். அப்படிப்பட்ட குகைகளில் ஒன்றுக்கு 'இலட்சுமிவனம்' என்று பெயர். அன்று இரவு அங்குதங்கி, மறுநாள் காலையில் புறப் பட்டார்கள். இயற்கை காட்சியைக் கண்டு களித்தார்கள். உறைபனியால் மூடியிருந்த மலைகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. அடுத்து சக்கர தீர்த்தம் என்று சொல்லப் படும் குகையில் அன்று இரவு தங்கியிருந்தார்கள். குடிப்பதற்கு நீர் வேண்டுமானால், பனிக்கட்டியை உருக்கித் தான் எடுக்க வேண்டும். மலைமீது ஏறுவதற்குப் பல இன்னல்களைக் கடந்து சதபந்த் அடைந்தார்கள். பலர் சாதிக்க முடியாததை இறைவன் இன்னருளால் சாதிக்க முடிந்ததை எண்ணி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். அங்கிருக்கும் சதபந்த் சாதுவைக் காண விரும்பினார்கள். அங்கு சென்று அவரைக் கண்டு, ஆண்டவன் பிள்ளைகளை ஆண்டவன் எப்படியும் காப்பாற்றுவான் என்பதற்கு அந்த சாது அங்கு வாழ்ந்த விதமே மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. அவரை வணங்கி அவரின் ஆசிபெற்று அங்கிருந்து புறப்பட்டார்கள்.

சாதுவைச் சந்தித்துவிட்டு, அய்யா அவர்கள் பயணம் மகிழ்ச்சியுடன் முடிவுற்ற நிறைவுடன் திரும்ப ஆரம்பித்தார்கள். சக்கரதீர்த்தக் குகையை அடைந்து, அன்றிரவு அங்குத் தங்கியிருந்து, அலகநந்தாவிற்கு வடகரையின் வழியாக இறங்கினார்கள். முதலில் பார்த்த இடம் அழகாபுரியாகும்.

அதனை அடுத்து வசோதாரா என்ற நீர்வீழ்ச்சியை அடைந்தார்கள். வழிநெடுக இயற்கை அன்னையின் எழில்மிகு காட்சிகளைக் கண்டு, மகிழ்ந்து பத்ரிகாசிரமத்தை அடைந்தார்கள்.

பத்ரிகாசிரமத்தைத் தொடர்ந்து, பயணத்தை மேற்கொண்டு, கோயமுத்தூருக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லையற்ற இன்பம், மனநிறைவு ஆண்டவன் படைப்பை அனுபவித்த மகிழ்ச்சி, ஆண்டவன் கருணை இருக்கும் பொழுது எதையும் சாதிக்க முடியும் என்ற உறுதி ஆகியவற்றை இந்தப் பயணம் அய்யா அவர்களுக்கு கொடுத்தது என்று எழுதியிருக்கிறார்கள்.

*அன்பு மிகுந்ததெய்வ முண்டு — துன்பம்*
*அத்தனையும் போக்கிவிடும் பாப்பா*

*— பாரதியார்.*

# 10. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் தரிசனம்

நாடு விடுதலை பெற வேண்டும். மக்களெல்லாம் விடுதலை பெற்ற சுதந்திரத் திருநாட்டில் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு பாடுபட்டார்கள் அய்யா அவர்கள். அவர்கள் ஆன்மீக நெறியிலும் சிறந்து விளங்கினார்கள். ஆண்டவனை வழிபடாத நாளெல்லாம் வீண் என்றே எண்ணினார்கள்.

*''எல்லா உயிர்க்கும் இனியன செய்க!*
*நல்லன நாடுக! நல்லினஞ் சேர்க!*
*அன்பே செய்மின்! அறவழி நடமின்!*
*இன்பமாகும் எல்லா உயிர்க்கும்மே!''*

என்ற சுத்தானந்த பாரதியின் வாக்குக்குச் சான்றாக நடந்த அய்யா அவர்கள் இமய மலையிலுள்ள பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய புண்ணியத் தலங்களுக்குச் சென்று திரும்பினார்கள். இந்த புனித யாத்திரை அய்யா அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையையும், மன உறுதியையும், தைரியத்தையும், அன்பையும், பிறருக்குச் சேவை செய்யும் நல்லெண்ணத்தையும் கொடுத்தது.

நான்காம் முறை சிறை வாசத்தின் கடைசியில் அய்யா அவர்களின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. சிறையிலிருக்கும் பொழுது தொடர்ந்து இருமல் ஏற்பட்டது. இரவிலும் இருமல் நிற்கவில்லை. தனக்குத் தூங்கமுடியவில்லையே என்று அய்யா அவர்கள் சிறிதும் எண்ணியதே கிடையாது. ஆனால் சிறையில் இருக்கும் மற்றவர்களின் தூக்கத்தைத் தனது இருமல் கெடுத்துவிட்டதே என்றுதான் எண்ணி வருந்தினார்கள்.

*''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு''*

என்னும் திருக்குறளின் வழி நடந்த அய்யா அவர்கள் பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் எண்ணி வருந்தி னார்கள். அச்சமயங்களில் திரு சுப்ரி அவர்கள் உதவி செய்ததை அய்யா அவர்கள் எப்பொழுதும் நன்றியோடு நினைவு கூர்வார்கள்.

மருத்துவர்கள் அய்யா அவர்களைச் சோதித்துப் பார்த்து, மருந்துகள் கொடுத்தனர். அவையொன்றும் பலனளிக்க வில்லை. ஆண்டவனையே நம்பியிருந்த அய்யா அவர்களின் உடல் தான் மெலிந்தது. ஆனால் உள்ளமோ வலிமை நிறைந்திருந்தது. 'நின் கடன் அடியேனையும் தாங்குதல்' என்பதை மனத்தில் கொண்டு இறைவன் எப்படியும் காப்பான் என்ற நம்பிக்கையோடிருந்தார்கள். அவர்களால் எழுந்து நடக்க முடியவில்லை, படிக்க முடியவில்லை. தாம் நடத்தி வந்த திருக்குறள் வகுப்புகளையும் நடத்த முடியவில்லை.

சிறையிலிருந்து அனுமதி பெற்று, வித்யாலயம் சென்ற அய்யா அவர்கள், குழந்தைகளையும், ஊழியர்களையும் பார்த்த பொழுது மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் வித்யாலயத்தைப் பற்றிய கவலை அதிகமாகியது. 1943ஆம் ஆண்டு வித்யாலயத்தின் பொருளாதார நிலை பாதிக்கப் பட்டதால் நன்கொடை திரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. அய்யா அவர்கள் இந்நிலையிலும் வித்யாலய குரு பூஜையை பக்தர்கள், அன்பர்கள், நல்லுள்ளம் கொண்ட நண்பர்கள் ஆகியோர் துணையுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடி னார்கள். வித்யாலயத்தின் செலவுகள் அதிகமாயின. அவற்றைச் சமாளிக்க கட்டணம் செலுத்திப் படிக்க விரும்பிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அச்சமயம் அய்யா அவர்களை, உடல் நலத்தைக் கவனிக்கும் படி நண்பர்களும், உறவினர்களும், வித்யாலயத்தின் ஊழியர்களும் விரும்பி கேட்டுக் கொண்டார்கள். எனவே அய்யா அவர்களின் நண்பரும் மோசஸ் ஞானாபரணம் மருத்துவமனையின் நிறுவனருமான டாக்டர் எஸ்.குருபாதம் அவர்களின் ஆலோசனையின்படி காசநோய்க்கு மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டார்கள். ஆண்டவன் அருளைப் பெற்ற அய்யா அவர்களுக்குக் காசநோய் அறிகுறி இல்லையென அறிந்து அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினர். அனைவரும் அய்யா அவர்களிடம் உடம்பைப் பேணிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர்.

அய்யா அவர்களுக்கு வித்யாலயத்தில் தொழிற் பகுதி ஒன்று தொடங்க வேண்டுமென்ற ஆசை வெகுநாட்களாக இருந்து வந்தது. 1944 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாளுக்கு முந்திய நாளில் அய்யா அவர்களின் நண்பர்களில் ஒருவர், அய்யா அவர்களின் நீண்ட நாள் கனவை நனவாக்க எண்ணி, கடைசல் இயந்திரமும் துளைபோடும் கருவியும் அன்பளிப்பாகக் கொடுத்தார். இவற்றைக் கொண்டு அடுத்த நாள் தொழிற்பகுதியைத் தொடங்கினார்கள்.

இதற்கு முன்பு சில நாட்களாகவே அய்யா அவர்களின் உடல்நிலை ஆஸ்துமாவினால் கடுமையாக பாதிக்கப் பட்டிருந்தது. அதனால் அய்யா அவர்கள் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார்கள். மூச்சுவிடக் கூட அவர்களால் முடியவில்லை. வலியும், பலவீனமும் அய்யா அவர்களை மிகவும் பாதித்தன. அய்யா அவர்களால் அமர்ந்திருக்கவோ அல்லது படுத்திருக்கவோ முடியவில்லை. வாழ்க்கையே வெறுத்து விடும் நிலை ஏற்பட்டது. அந்நிலையிலும் அவர்களுக்கு வித்யாலயத்தைப் பற்றிய கவலை அதிகமாக ஏற்பட்டது.

அப்போது நடுநிசி நேரம் மணி இரண்டு. அந்நேரத்தில் வியாதி கடுமையாகவே, அய்யா அவர்கள் மூச்சுத் திணறி னார்கள். துன்பத்தைக் கொடுக்கும் ஆண்டவன் அதனைத் தாங்கிக்கொள்ளும் சக்தியையும் கொடுத்து, அதற்கு மேலாக நம்பிக்கையையும் கொடுப்பான் அல்லவா? ஆம் அய்யா அவர்கள் அப்படிப்பட்ட அற்புதக் காட்சியைக் கண்டார்கள்.

*''வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ*

*வேண்டும் அயன்மாலுக்கு அரியோய்நீ வேண்டி எனைப் பணி கொண்டாய்*

*வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்*

*வேண்டும் பரிசொன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே''*

என்ற மாணிக்கவாசகரின் பாடலின்படி அய்யா அவர்கள் ஆண்டவன் விருப்பப்படி நடக்கட்டும் என்று எண்ணி னார்கள். அன்று அய்யா அவர்களுக்கு ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் காட்சி அளித்தருளினார்.

அய்யா அவர்களுக்கு அது பெருமிதத்தைக் கொடுத்தது. அதனை அய்யா அவர்கள் கூறியது போன்றே இங்கு கொடுக் கிறேன். ''அனைத்தையும் நீயே செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று குனிந்திருந்த அய்யா அவர்களின் முகத்தை நிமிர்த்தி, ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்டார். இந்த அற்புதக்காட்சி எவ்வளவு நேரம் நீடித்திருந்தது என்று அய்யா அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இனம் புரியாத அமைதி அப்பொழுது அவர்களுக்கு உண்டாயிற்று. மூச்சுத் திணறல் குறைந்து அய்யா அவர்கள் நன்கு தூங்கி யுள்ளார்கள். இந்தக் காட்சியே அய்யா அவர்களுக்கு, தம் பணியில் தொடர்ந்து ஈடுபட புது சக்தியையும், வல்லமை யையும் அளித்துள்ளது.

இக்கால கட்டத்தில்தான் காந்தியடிகள் நிபந்தனை யின்றி விடுதலை செய்யப்பட்டார். காந்தியடிகள் ஜின்னாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி இந்தியா விடுதலை பெறுவதே முதல் நோக்கமாக இருக்க வேண்டும். பின்னர் நாட்டைப் பிரிப்பதைப் பற்றி சிந்திக்கலாம் எனக் கூறினார். இதை ஏற்றுக் கொள்ளாத ஜின்னா தனியே பிரிந்து முஸ்லீம் லீக் கட்சியைத் தோற்றுவித்தார். காங்கிரஸ் கட்சியும் முஸ்லீம்லீக்கும் இரு கட்சிகளாகத் தேர்தலில் போட்டியிட்டன. அதில் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றுப் பெரும்பான்மை இடத்தைப் பெற்றது.

*''செய்யுந் தொழிலுன் தொழிலேகாண்*
*சீர்பெற் றிடநீ யருள்செய்வாய்''*

*— பாரதியார்*

# 11. சேவா கிராமத்தில் காந்திடிகளுடன்

அய்யா அவர்கள், காந்தியடிகளோடு தமக்குக் கிடைத்த உறவைப் புனிதமாகக் கருதினார்கள். சான்றோர்களின் நட்பு கிடைக்குமானால் அதனைப் பெரிதெனக் கருதிப் போற்றி வந்தார்கள்.

*''அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை*
*திறனறிந்து தேர்ந்து கொளல்''.*

என்னும் திருக்குறளுக்கிணங்க நல்லார்களின் நட்பினை, அன்பினைத் தேடி அடைந்தார்கள். ''பிறர் உங்களிடம் எப்படி நடக்க வேண்டுமென நீங்கள் நினைக்கின்றீர்களோ அது போன்றே நீங்கள் பிறரிடம் நடந்து கொள்ளுங்கள்'' என்ற பொன்மொழிக்கிணங்க அய்யா அவர்கள் தன்னைப்போல் பிறரையும் நேசிக்கும் நெறியாளராக விளங்கினார்கள்.


பள்ளி மாணவராக இருந்தபொழுதே அய்யா அவர்கள் காந்தியடிகளை முதன் முதலில் பார்த்திருக்கிறார்கள். பொதுக் கூட்டத்தில் பேசிய மகானைத் தூரத்திலிருந்து பார்த்த அய்யா அவர்கள், எளிமை, நேர்மை, அகிம்சை ஆகிய குணக்குன்றாக நின்ற காந்தியடிகள் மீது தன்னையுமறியாமல் அன்பு கொண்டார்கள். அன்று தொடங்கிய உறவு இறுதிவரை நிலைத்து நின்றது.

அய்யா அவர்கள் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் நழுவ விடாமல், காந்தியடிகளைத் தரிசித்து ஆசி பெற்றுப் புத்துணர்ச்சி கொண்டு புதுப் பொலிவுடன் காரியங்களில் ஈடுபட்டார்கள். தேச விடுதலைக்காகப் பாடுபட்டாலும் சரி, அல்லது வித்யாலயத்தின் வளர்ச்சிக்காக

உழைத்தாலும் சரி, எந்நிலையிலும் அண்ணல் காந்தியடிகளின் ஆசியைப் பெற்றுக் காரியங்களில் ஈடுபட்டு, வெற்றியையும் பெற்றார்கள். 1934 ஆம் ஆண்டு காந்தியடிகள் வித்யாலயத்திற்கு வருகை புரிந்த பொழுதுதான் அய்யா அவர்கள் மகாத்மாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். அய்யா அவர்கள் மத்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் ஆண்டுக்கு இருமுறை டில்லிக்குச் செல்லும் பொழுதெல்லாம் வார்தாவிற்குச் சென்று அங்கு காந்தியடிகள் தங்கியிருந்த சேவா கிராமத்திற்குச் செல்வார்கள்.

காந்தியடிகள், அய்யா அவர்களிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்கள். அண்ணல் காந்தியடிகள் ஒவ்வொரு முறையும், அய்யா அவர்களிடம், வித்யாலயத்தின் முன்னேற்றத்தைப் பற்றியும், சட்டசபையின் பணிகள் பற்றியும் விசாரித்தார்கள். அய்யா அவர்களும் காந்திஜி கேட்கின்ற கேள்விகளுக்கு மிகவும் மரியாதையுடன், ஆனால் தெளிவாகவும், தைரியத்துடனும் பதில் அளித்து வந்தார்கள். சேவாகிராமம் சென்றதினால் அன்னை கஸ்தூரிபாயையும், அண்ணலுடன் இருந்த மகாதேவ்தேசாயையும் சந்திக்கின்ற வாய்ப்பினையும் பெற்றார்கள். அன்னை சாரதாதேவியின் அருளை அபரிமிதமாகப் பெற்றிருந்த அய்யா அவர்களுக்கு அன்னை கஸ்தூரிபாயின் அன்பும், பாசமும் கிடைத்ததில் ஆச்சரியமில்லை.

காந்தியடிகளின் நெருங்கிய நண்பர்களான திரு. ஜம்னாலால் பஜாஜ், திரு. ஜாகீர்உசேன், திரு. ஜெ.சி. குமரப்பா, திரு. பரதன், திரு. கிஷோரிராவ், மஷ்ருவாலா, மீராபென் தக்கர்பாபா, கொன்டா வெங்கடப்பய்யா போன்ற பெரியோர்களைச் சந்திக்கவும், அவர்களோடு நட்பு கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார்கள். இந்த நட்புகள் அனைத்தையும் அய்யா அவர்கள் பெரிதும் போற்றி வந்தார்கள். ஒருமித்த கருத்துடையவர்கள் ஒன்று சேர்வதில் வியப்பில்லை.



குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஜாகிர்உசேனுடன்
அய்யா அவர்கள்

இந்திய துணைக்கண்டத்தின், ஒரு மூலையிலிருந்த சேவா கிராமம் காந்தியடிகளினால் இந்தியாவின் ஒரு முக்கியத்தலமாகக் கருதப்பட்டது. இந்தியாவின் தனிப் பெரும் தலைவர் காந்திஜியின் அறிவுரைகளைப் பெற அயல் நாட்டு பிரமுகர்கள், பலநாட்டுப் பத்திரிக்கை நிருபர்கள் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் பணியாற்றிய ஆளுநர்கள், முதலமைச்சர்கள், ஊழியர்கள், தேச சேவையில் ஈடுபட்ட தொண்டர்கள் அனைவரும் சேவாகிராமம் சென்றனர்.

சேவாகிராமத்தில் காந்தியடிகள் வாழ்ந்த குடிசை, மண்ணால் கட்டப்பட்டது. மேற்கூரையும் கையால் செய்யப்பட்ட மண்ணோடுகளால் வேயப்பட்டது. அவர் அமர்ந்திருக்க உதவிய பாயில்தான் உறங்கினார். வசதிகள் எளிமையாக இருந்தன. ஆனால் யாவும் மிகத் தூய்மையாக இருந்தன.

அய்யா அவர்களிடம் காந்திஜி காட்டிய அன்பும், பரிவும் அற்புதமானவை. காந்தியடிகள் பேசுவதைக் கேட்டு நேரம் போவது தெரியாமல் அய்யா அவர்கள் தன்னை மறந்திருந்த நாட்களும் உண்டு. கோடைகாலத்தில் ஒருமுறை அய்யா அவர்கள் காந்தியடிகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாகபுரிக்கு அருகிலிருந்த வார்தாவில் வெயில் மிகக் கடுமையாக இருந்தது. காந்தியடிகள் தரையில் பாய்விரித்துப் படுத்துக்கொண்டு, தன் தலை மீதும், உடல் மீதும் ஈரத்துண்டுகளினால் போர்த்தியிருந்தார். அய்யா அவர்களைக் கண்ட காந்தியடிகள் ''வா! அவினாசி, எப்படியிருக்கிறாய்?'' என்று அன்போடு கேட்டார்.

ஆனால் அய்யா அவர்களுக்கோ, காந்தியடிகள் தலையிலும், உடலிலும் கட்டுப் போட்டிருந்ததைப் பார்த்து மிகுந்த கவலை உண்டாயிற்று. ''ஏன் இந்த கட்டுகள்?'' என்று விசாரித்தார்கள். அப்பொழுது காந்திஜி வாய்விட்டுக் கொல்லென்று சிரித்து ''வெப்பத்தைத் தணித்துக் கொள்ள நான்

பயன்படுத்தும் குளிர்சாதனம் இவை'' என்றார். அய்யா அவர்களுக்கோ ஆச்சரியம் பெருகியது.

மேலும் காந்தியடிகள், ''ஓர் ஈரத்துண்டைத் தலையிலும், உடலிலும் வைத்து, அதன்மீது களிமண்ணைப் பூசி, மற்றொரு துணியினால் மூடவேண்டும். அதன் மீது அவ்வப்பொழுது தண்ணீரைத் தெளிக்க வேண்டும்'' என்று கூறி வெப்பத்தைக் குறைக்கும் தனது குளிர்சாதனத்தைச் செய்து காட்டினார். தாய்த்திருநாட்டின் தனிப் பெருந் தலைவராக விளங்கிய காந்தியடிகள் இங்ஙனம் சிக்கனத்தை அறிவியல் வழியில், மேற்கொண்டதை அறிந்த அய்யா அவர்கள், அதனை எண்ணி வியந்ததோடு மட்டுமல்லாமல், தானும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள்.

காந்தியடிகளுக்கு நிறையபேர் கடிதங்கள் எழுதுவார்கள். அண்ணலும் வந்த கடிதங்கள் அனைத்திற்கும் தன் கைப்படவே பதில்கள் எழுதி அனுப்புவார். பதில்களும் இரத்தினச் சுருக்கமாக இருக்கும். பதில்களைக் கார்டுகளிலோ அல்லது தனக்கு வந்த கடிதங்களின் பின்பக்கங்களிலோ எழுதி அனுப்புவார். இந்திய நாடு வறுமை மிக்கது. ஆயிரக்கணக்கான மக்கள் விவசாயிகள். அப்படிப்பட்ட நாட்டில் வாழும் தான் மட்டும் பணக்காரர்களைப் போல் வாழ்வது சரியல்ல என்பதைக் காந்தியடிகள் நினைத்து அதன்படி நடந்து வந்தார். அய்யா அவர்களும் காந்தியடிகளின் கடிதங்களைப் பெற்றிருக்கிறார்கள். அய்யா அவர்களும் மற்றவர்கள் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதினார்கள். பதில்களும் மிகச் சுருக்கமாக ஆனால் தெள்ளத் தெளிவாக இருக்கும். அய்யா அவர்கள் காந்தியடிகளுடன் பழகிய காலந்தொட்டு அவர்களிடம் பார்த்த நல்ல குணங்களைத் தாம் எடுத்துக் கொண்டு தன் வாழ்க்கையில் கடைபிடித்து வந்தார்கள். அவற்றைப் பற்றி 'நான் கண்ட மகாத்மா' என்ற புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்கள்.

காந்தியடிகள் தம்மைக் காண வருகின்றவர்களின் வசதிகளை நன்கு கவனித்துக் கொள்ளுவார். 1944 ஆம் ஆண்டில் குளிர்காலத்தில் அய்யா அவர்கள் காந்தியடிகளைக் காண சேவாகிராமத்திற்குச் சென்றார்கள். அங்கு எல்லோரும் குளிப்பது போல குளிர்ந்த நீரில் அய்யா அவர்கள் குளித்ததினால் ஏற்கனவே இருந்த ஆஸ்துமா நோய் அதிகரித்து மிகவும் துன்பப்பட்டார்கள். இதையறிந்த காந்தியடிகள் அய்யா அவர்களைப் பார்த்து ''இங்கு வெந்நீர் எளிதில் கிடைக்குமே, அதனை விடுத்து ஏன் குளிர்ந்த நீரில் குளித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்'' என்று மனித நேயத்துடன் கேட்டார்.

சேவாகிராமத்தில் நடந்த மற்றொரு நிகழ்ச்சியையும் இங்கு நினைவு கூர்வது பொருத்தமாகும். எரவாடா சிறையில் காந்தியடிகளோடு இருந்த பாராசூர் சாஸ்திரி அடிகளைக் காணவந்தார். அவர் தொழு நோயாளி. பல மருத்துவமனைகளுக்குச் சென்றும் குணமாகாமல், வட இந்தியாவில் ஹரித்துவாரத்திலிருந்து காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால் பதில் கிடைப்பதற்கு முன்பே, காந்தியடிகளைக் காணச் சேவாகிராமம் வந்துவிட்டார். அந்நேரம் காந்திஜி உலாவப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். காந்தியடிகளைக் கண்ட சாஸ்திரி அடிகளை வீழ்ந்து வணங்கினார். காந்தியடிகள் தம்மைக் காணவந்தவர் பீடிக்கப்பட்டிருந்த நோயை அறிந்திருந்தார். சேவாகிராமத்தில் அவரைத் தங்க வைப்பதும் முடியாத காரியம் என உணர்ந்தார். இதனை அறிந்த பாராசூர் சாஸ்திரி காந்தியடிகளிடம், ''நான் உங்களைத் தரிசித்து விட்டேன். உங்களிடம் கொடுப்பதற்கு ஹரித்துவாரத்தில் நூற்ற நூல், இம்மூட்டையில் உள்ளது. என் ஆசை நிறைவேறி விட்டது. இன்றிரவு தொலைவிலுள்ள மரத்தடியில் தங்கிவிட்டு, காலையில் ஹரித்துவாரம் சென்றுவிடுகிறேன்'' என்று சொன்னார். பின் காந்தியடிகள் கனுகாந்தியிடம் அவருக்கு உணவு கொடுக்கச் சொல்லிவிட்டு உலாவச்

சென்றார். பின் மாலைப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு, சீக்கிரமாகவே படுக்கைக்குச் சென்றுவிட்டார்.

படுக்கையில் காந்தியடிகளுக்குத் தூக்கம் வரவில்லை. பாராதூர் சாஸ்திரியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். எப்படியாவது உதவிசெய்ய வேண்டுமென எண்ணினார். நாட்டு விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு சிறையில் அடைபட்டு இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்ட சாஸ்திரிக்கு உதவி செய்ய வேண்டும் என்று துடித்தார்.

அதிகாலையில் எழுந்து விட்டார். அவர் எண்ணமோ வெளியில் படுத்துக் கொண்டிருந்த பாராதூர் சாஸ்திரியைப் பற்றியே இருந்தது. காலை பிரார்த்தனையில் கலந்து கொண்ட பின்பு, அங்கு கூடியிருந்த ஆசிரமவாசிகளுக்கு அருளுரை வழங்கினார். பின் தமக்கு நேரிட்ட பிரச்சினையைப் பற்றி விளக்கிக் கூறினார். தொழுநோயை காரணம்காட்டி ஆசிரமத்தை விட்டு வெளியே அனுப்புவது ஆண்டவரை அனுப்புவது போன்றது. அதேநேரம், ஆசிரமவாசிகள் அவரை ஆசிரமத்தில் தங்கவைக்க இசைவு அளிக்காத போது அவரை எப்படி ஆசிரமத்தில் வைத்துக் கொள்ளமுடியும்? என்று கேட்டார். உடனே ஆசிரமவாசிகள் அவர் ஆசிரமத்தில் தங்குவதற்கு இசைவு தெரிவித்தனர். காந்தியடிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. இந்தச் சத்தியசோதனையிலும் காந்தியடிகள் வெற்றி கண்டார். தீண்டத்தகாதவர்களும் தீண்ட அஞ்சும் ஒருவருக்கு உதவி செய்ய நல்வாய்ப்பை அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

காந்தியடிகள் தன் குடிசைக்கு அருகிலேயே இன்னொரு குடிசை அமைத்து, இரவும் பகலும் பாராதூர் சாஸ்திரியை நன்கு கவனித்துக் கொண்டார். அவரைத் தினமும் தன் கைகளினாலே சுத்தம் செய்தார். உணவுகளைச் சரியாகக்

கொடுக்கிறார்களா என்று கவனித்தார். அனுதினமும் அவரோடு உரையாடினார். தீண்டத்தகாதவர்களும் தீண்ட முடியாத நோயினால் அல்லலுற்ற பாராசூர் சாஸ்திரியின் நோய்நீக்கும் மருத்துவராக விளங்கினார் காந்தியடிகள்.

இந்நிகழச்சியைக் கண்ட அய்யா அவர்களின் உள்ளம் நெகிழ்ந்தது. காந்தியடிகளின் செயலைக் கண்டு பூரித்தார் கள். ஏழைக்கு ஏழையாய், தொண்டனுக்கும் தொண்டனாய் விளங்கிய காந்தியடிகளின் வாழ்க்கை அய்யா அவர்களை மிகவும் கவர்ந்ததால், ஏழைகளுக்கு உதவ வேண்டும், நோயுற்றோர்களின் நோய் நீங்க வழிவகுக்க வேண்டும் எல் லோரும் இன்புற்றிருக்கப் பாடுபட வேண்டும் என சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

*''நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்*
*நேர்உறக் கண்டுளந் துடித்தேன்*
*ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்*
*சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''*

*— இராமலிங்க சுவாமிகள்*

# 12. தாய்த்திருநாடு சுதந்திரம் பெற்றபோது

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'' என்று சுதந்திரம் பெற வேண்டியும், ஆடிப் பாடி வாழவும், எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு என்று, எங்கு நோக்கினும் நாடு முழுவதும் மக்கள் சுதந்திரம் பெற வேண்டுமென்ற வேட்கையோடு அய்யா அவர்கள் பணி செய்தார்கள். அந்த வேளையில் 1944 ஆம் ஆண்டு மே மாதம் சிறையில் இருந்த காந்தியடிகள் எவ்வித நிபந்தனை யும் இன்றி விடுதலை செய்யப்பட்டார் என்ற செய்தி அனை வருக்கும் மகிழ்ச்சியையும் வியப்பையும் அளித்தது. ஆனால் காந்தியடிகளுக்கோ, காங்கிரஸுக்கும் முஸ்லீம்லீக்கிற்கும் இடையே தோன்றிய அரசியல் கருத்து வேறுபாடுகளும், மோதலும் எல்லையற்ற வருத்தத்தை அளித்தது. இவர்களுக் கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதே அண்ணல்காந்தியின் முதல் நோக்கமாக இருந்தது.


திரு.சி. இராஜகோபாலாச்சாரியார் இரு கட்சிகளுக்கு மிடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியில் ஈடு பட்டார். நாடு சுதந்திரம் பெற மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும் என்று எண்ணுகின்ற நேரத்தில் நாட்டுக்குள்ளே பெரிய பிளவு ஏற்பட்டுக் குழப்பங்கள் தோன்றுவது காந்தியடிகளுக்குச் சொல்ல முடியாத வேதனை யை அளித்தது. காந்தியடிகள் முஸ்லீம்லீக் தலைவரான ஜின்னாவிடம், "நாடு சுதந்திரம் அடைய காங்கிரஸுடன் முஸ் லீம்லீக் ஒத்துழைக்க வேண்டும். பின்னரே தனிநாடு அமைப்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். பெரும் பான்மையான சீக்கியர்களும், இந்துக்களும் வசிக்கும் கிழக்கு பஞ்சாபின் பகுதிகளையும், பெரும்பான்மை

இந்துக்கள் வசிக்கும் மேற்கு வங்காளத்தின் பகுதிகளையும், பாகிஸ்தானுடன் இணைக்கக் கூடாது. அப்பகுதிகளில் வாழும் மக்களின் கருத்துக்களைக் கண்டறிய வேண்டும்'' என்று கூறினார். ஆனால் திரு. ஜின்னா அவர்களோ இவற்றில் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் பேச்சு வார்த்தைகளினால் எந்த முடிவும் ஏற்படவில்லை.

அப்பொழுது இந்தியாவின் அரசு பிரதிநிதியாக திரு. வேவல் பிரபு பொறுப்பேற்றிருந்தார். நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரச் சீர்கேட்டை அறிந்த அவர் 1943 ஆம் ஆண்டு இருகட்சித் தலைவர்களின் மாநாட்டை சிம்லாவில் கூட்டி, இருகட்சிகளின் சார்பில் மத்திய அரசை அமைப்பதற்கு 12 பேர் அடங்கிய பட்டியலைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். காங்கிரஸ் கட்சி இதனை ஏற்றுக் கொண்டு, காந்திஜி பெயர் பட்டியலைக் கொடுத்தார். ஆனால் முஸ்லீம் லீக் சார்பில் திரு. ஜின்னா இந்த நிபந்தனையை மறுத்து விட்டார்.

1944 ஆம் ஆண்டு இங்கிலாந்தை ஆண்டு வந்த கன்சர் வேடிவ் கட்சி, தேர்தலில் தோல்வி அடைந்து, அதன் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் ஆட்சியை இழந்தார். இவர்தான் அண் ணல் காந்தியடிகளை, 'அரை நிர்வாண பக்கிரி' என்றும், ''இவரைச் சமாளிப்பது கடினம்'' என்றும் கூறியவர். வெற்றி வாகை சூடிய தொழிற்கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்று அதன் தலைவர் அட்லி பிரதமரானார். அட்லி தலைமை யிலான அரசு இந்தியாவிற்கு உடனே சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றும், இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை மத்திய, மாநிலச் சட்ட சபைகளுக்கான தேர்தல் முடிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமெனவும் கருதியது. இதன் அடிப்படையில் வேவல் பிரபு அவர்கள் 1945 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவில் தேர்தல் நடக்கும் என்று அறிவித்தார்.

தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியும், முஸ்லீம்லீக் கட்சியும் போட்டியிட்டன. காங்கிரஸ் கட்சி 102 இடங்களில் 57



முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களுடன் அய்யா அவர்கள்

இடங்களைப் பெற்றுப் பெரும்பான்மையான இடத்தைப் பெற்றது. இது காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்குப் பெரும் வெற்றியாக அமைந்தது. அதேபோன்று முஸ்லீம் மக்கள் நிறைந்திருந்த பகுதிகளில் முஸ்லீம்லீக் கட்சிக்கு வெற்றி கிடைத்தது. வங்காளத்தில் முஸ்லீம்லீக்கும், பஞ்சாப்பில் முஸ்லீம்கள் இந்துக்கள் சீக்கியர்கள் அடங்கிய கூட்டும், உத்திரப்பிரதேசம், பீகார், அஸ்ஸாம், மத்திய பிரதேசம், பம்பாய், ஒரிசா, சென்னை ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியும் ஆட்சிகளை அமைத்தன.

அய்யா திரு.தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் மத்திய சட்டசபைக்கு கோவை மாவட்டம் பல்லடம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள். அய்யா அவர்களின் வெற்றி கோவை மாவட்ட மக்களுக்கு, ஏன் சென்னை மாகாண மக்களுக்கே பெருமகிழ்ச்சியை அளித்தது. சென்னை மாகாண அரசில் அமைச்சர்களாக தமிழகத்தைச் சேர்ந்த அய்யா அவர்கள், திரு.பி.எஸ். குமாரசாமிராஜா, திரு. டேனியல் தாமஸ், திரு.எம். பக்தவத்சலம் ஆகியோரும், ஆந்திராவைச் சேர்ந்த திரு. கோபால் ரெட்டி, திரு. காலா வெங்கட்ராவ், திரு.எச். சீதாராம ரெட்டி, பிக்கின்னி திரு. வெங்கட்ராமன் ஆகியோரும், மலபாரிலிருந்து திரு.கே. மாதவமேனனும், தென் கன்னடத்திலிருந்து திரு.கே.ஆர் கரந்த்தும் பொறுப்பேற்றார்கள். அய்யா அவர்கள் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.

1946 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கம், பெதிக் லாரன்ஸ், சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், எம். அலெக்சாண்டர் ஆகிய மூவர் அடங்கிய தூதுக்குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்பி, முக்கிய அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாட்டை முஸ்லீம்லீக் கட்சியைத் தவிர, ஏனைய கட்சிகள் ஆதரித்தன. ஜின்னாவோ பாகிஸ்தான் தனிநாடாக வேண்டுமென வற்புறுத்தினார். இதே ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேருவை இடைக்கால அரசு அமைக்கும்படி ஆங்கிலேய

அரசின் பிரதிநிதி கூறினார். சர்தார் வல்லபாய்பட்டேல், டாக்டர் இராஜேந்திர பிரசாத், ஆசப்அலி, சி. இராஜ கோபாலாச்சாரியார், சரத்சந்திரபோஸ், ஜான்மத்தாய், சர்தார் பல்தேவ்சிங், ஜகஜீவன்ராம், டாக்டர் சபாத் அஹமதுகான், சையத் அலி ஜாகீர் ஆகியோருடன் இடைக்கால அரசு அமைக் கப்பட்டது. அடிக்கடி ஏற்பட்ட உட்பூசலின் காரணமாக இவ்வரசு சரியாகச் செயல்பட முடியவில்லை.

இடைக்கால அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு, ஆகஸ்ட் 16ஆம் நாள் நேரடி நடவடிக்கை நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று ஜின்னா மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். கல்கத்தா மற்றும் வங்காளத்தின் பல்வேறு பகுதிகளில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே கலவரங்கள் நடந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் இருதரப்பிலும் கொல்லப்பட்டனர். அப்பொழுது டில்லிக்குச் சென்ற அய்யா அவர்கள் திரும்பி வரும்வழியில் கல்கத்தாவிற்குச் சென்றார்கள். கங்கை ஆற்றில் பல சடலங்கள் மிதப்பதைக் கண்டு உள்ளம் நொந்து போனார்கள். நாடு சுதந்திரம் அடைய ஒற்றுமையாகப் பாடுபட வேண்டும். கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திர வேள்வியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்று எண்ணிய அய்யா அவர்களுக்கு, மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு மடிந்தது வருத்தத்தை அளித்திருக்கும்.

இந்தச் சூழ்நிலையில், ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆளச்சிறிதும் விரும்பவில்லை. இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டன் பிரபு பொறுப் பேற்றார். உடனே அவர் அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். மாநில ஆளுநர்களின் மாநாட்டைக் கூட்டி நிலவரங்களை அறிந்தார். ஆளுநர்களனைவரும் பிரி வினை என்ற சூழ்நிலை அமையுமேயானால் நாடு சீரழிந்து விடும் என்று கூறினார்கள். மவுண்ட்பேட்டன் பிரபுவும்,



பாரதத்தின் முதல் பிரதமர் மாண்புமிகு ஜவஹர்லால் நேருவுடன் அய்யா அவர்கள்

நாட்டின் நிலைமையை நன்குணர்ந்து உடனே இந்தியா விற்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என ஆங்கிலேய அரசுக்கு, சிபாரிசு செய்தார்.

இந்தியத் தலைவர்களுடன் மவுண்ட்பேட்டன் பிரபு பேசி, பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக் கொள்ளுமாறும் இல்லையெனில் இந்தியத் திருநாட்டில் பல்லாயிரக்கணக் கான மக்கள் வீணாக மடிய நேரிடும் என்றும் எச்சரித்தார். இந்த யோசனையைத் தலைவர்களாகிய இராஜேந்திர பிரசாத் அவர்களும், நேருஜியும் ஒத்துக் கொண்டனர். காந்தியடிகளுக்கு இப்பிரிவினை கசப்பாக இருந்த போதிலும் ஒத்துக் கொண்டார். இதன்படி, ஆங்கிலேய நாடாளுமன்றம் இந்திய சுதந்திரச் சட்டத்தை இயற்றியது.

ஆகஸ்ட் மாதம் 14–15 ஆகிய நாட்களுக்கு இடை யிலான நள்ளிரவில் இந்தியஅரசு இராஜேந்திரபிரசாத் தலை மையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. பிரதமர் ஜவஹர்லால் நேரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தேச சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென அறைகூவல் விடுத்தார்.

**நேருஜி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி :**

> *''சுதந்திரமும் அதிகாரமும் பொறுப்பு வாய்ந்தவை. அப்பொறுப்பு இச்சட்டசபையிலும் கொடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைவதற்கு நாம் மிகவும் பாடுபட்டோம். பலர் சிறை சென்றோம். இந்த இன்னல்களின் துயரம் நம் உள்ளங்களில் பசுமையாக இருக்கிறது. எனினும் கடந்தகாலம் முடிந்துவிட்டது. எதிர்காலம் நம்மை அழைக்கிறது. எதிர்காலத்தில் நமக்கு ஒய்வு இல்லை. நாம் எடுத்துள்ள உறுதிமொழிகளையும், குறிப்பாக இன்று எடுக்கும் உறுதிமொர்ழிகளையும் செயல்படுத்த கடுமையாக உழைக்க வேண்டும். இந்தியாவிற்கு தொண்டு செய்வது என்பது இன்னல்பட்டுக் கொண்டிருக்கும் இலட்சக்*

*கணக்கான மக்களுக்குத் தொண்டு செய்வதேயாகும். ஏழ்மை, அறியாமை, நோய், ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றைப் போக்க வேண்டுமென்பதே இதன்பொருளாகும். ஒவ்வொருவரின் கண்ணீரையும் துடைக்க வேண்டுமென்பதே மகாத்மா காந்தி அவர்களின் பேராவலாகும். நம் கனவுகள் யாவும் நனவாக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும்''.*

*''இந்நன்னாளில் நம் எண்ணங்கள் முதலில் சுதந்திரத்தின் சிற்பியை நோக்கிச் செல்கின்றன. தேசத்தந்தை சுதந்திரம் என்னும் சுடரை ஏற்றி நம்மைச் சுற்றியிருந்த இருளைப் போக்கினார். நாம் மட்டுமின்றி, இனிவரப்போகும் சந்ததியாரும் இந்தியத் தாயின் தலைமகனான அண்ணல் காந்தியடிகளின் செய்திகளை உள்ளங்களில் பதித்துக் கொள்வோமாக. அவரது நற்பண்புகளான தெய்வபக்தி, தேச பக்தி, நம்பிக்கை, வலிமை, உழைப்பு, விடாமுயற்சி, அஞ்சாமை, பணிவு, துணிவு, பகைவர்களுக்கு அருளும் நன்னெஞ்சம் ஆகியவற்றை நாம் கடைப்பிடிப்போமாக. எத்தனை பெரிய புயல் வீசினாலும், சூறாவளி அடித்தாலும் சுதந்திர ஜோதியை நாம் அணைய விடக்கூடாது''.*

வங்காள அமைச்சர்கள் காந்திஜியிடம் வாழ்த்துக்களைப் பெறவந்தார்கள். காந்தியடிகள் அவர்களிடம், ''இன்று நீங்கள் முட்கிரீடம் சூடிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்புகளை மிகவும் கவனத்துடன் செய்ய வேண்டும். நீங்கள் மிகவும் பொறுமையுடனும், பணிவுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். கிராமங்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் சேவை செய்ய உங்களை அர்ப்பணியுங்கள். கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக'' என்று கூறினார்.

காந்தியடிகள் அரிசன வார இதழில், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கடமைகளைப் பற்றி எழுதியுள்ளார். அவற்றில் சில :

*''அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அச்சமின்றித் தம் கடமைகளை ஆற்றவேண்டும். அவர்கள் தங்கள் பதவிகளையும், அதிகாரங்களையும், துறக்க எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமே தங்கள் பதவிகளையும், அதிகாரங்களையும் பயன்படுத்த வேண்டும். பதவியும், அதிகாரமும் அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே அறநெறிகளிலிருந்து பிறழ்வது நாட்டைத் தாழ்த்திவிடும். அமைச்சர்கள், தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகளைத் தங்கள் சொந்தப் பணிகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது''.*

*''தங்கள் வாழ்க்கையை எளிமையாக அமைத்துக் கொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். அமைச்சர்கள், எளிய வாழ்க்கையும், கடின உழைப்பும் உடையவர்களாக இருப்பதுபோல தங்கள் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களும் எளியவாழ்க்கை வாழும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நீதியும், நியாயமும் எளிதில் கிடைக்க வேண்டும். கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்யும்படி கல்விமுறை அமைய வேண்டும். காவல்துறையினர் மக்களின் நண்பர்களாக இருக்க வேண்டும்''.*

சென்னையில் சுதந்திரதினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காந்தியடிகளின் திருவுருவப் படங்கள் அலங்கரித்த மேடையில் சுதந்திரத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. உயரமான கொடிக்கம்பங்கள் நடப்பட்டு தலைவர்களினால் மூவர்ண தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன. அய்யா அவர்கள் பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டு, உயர்கல்வி நல்கி வந்த அரசினர் ராணிமேரிக் கல்லூரியிலும் கலந்து கொண்டு தேசியக் கொடியேற்றிச்

சுதந்திர இந்தியாவில் வாழும் ஒவ்வொருவரும் நாட்டுக்காக பணிசெய்ய தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று உருக்கமாக உரையாற்றினார்கள்.

இந்தியா முழுவதும் சுதந்திரத்தை மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், காந்தியடிகளோ கல்கத்தா கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்பும், ஆதரவும் கொடுத்துக் கொண்டிருந்தார். அமைச்சர்களுக்குத் தன் நல்லாசிகளை வழங்கி, நாடு நலம் பெற உழைக்க வேண்டும் என்று வாழ்த்தினார்.

> *''இலட்சிய வாழ்வுக்குப் பெரிது பணமல்ல அதிகாரமல்ல; சேவைதான் பெரிது. தூய்மைதான் பெரிது. கடமையைச் செவ்வனே செய்வதுதான் பெரிது''.*
>
> *— அய்யா தி.சு. அவினாசிலிங்கம்*

# 13. தேசத் தந்தையின் மறைவினால் ஏற்பட்ட தொய்வு

அய்யா திரு.தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் வாழ்க்கையை எழுதிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில், தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகளின் மறைவு இங்கு என்ன தொடர்புடையது என்று வாசகர் நினைக்கலாம். நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, இந்திய நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, ஒரு குடையின் கீழ் ஒரு நோக்கத்தோடு நடத்திச் சென்ற தலைவருக்கும், நாடு சுதந்திரம் பெறப் பலமுறை சிறை சென்று நாட்டுக்காக உழைத்த அய்யா அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததல்லவா? தேசத்தந்தையின் மறைவு அய்யா அவர்களை எவ்வளவு பாதித்தது என அறிந்து கொள்ளுவது அவசியமாகும்.

நாடு முழுவதும் இந்து, முஸ்லீம் கலவரம் அதிகமாக இருந்தது. ஒற்றுமையோடு, சகோதர பாசத்தோடு வாழ்ந்து வந்த மக்கள் ஒருவருக்கொருவர் பகைமை பூண்டு, இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதி இந்தியாவாகவும், முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதி பாகிஸ்தானாகவும் பிரிய வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. ஆங்கில அரசிடமிருந்து பாரத தேசத்தை விடுவிக்க எண்ணிய காந்தியடிகளுக்கு உள்நாட்டில் பூசல் ஏற்பட்டது மிகுந்த துயரத்தை அளித்தது.

பாகிஸ்தான் இந்திய நாட்டிலிருந்து பிரிக்கப்படுவதை காந்தியடிகள் ஒருநாளும் விரும்பவில்லை. 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காந்தியடிகளின் முயற்சிக்குச் சோதனை காலம் ஏற்பட்டது. அதுகுறித்து காந்தியடிகள், ''சர்தார்

வல்லபாய் பட்டேலும் ஜவஹர்லால் நேருவும் கூட என் அரசியல் கணிப்பை தவறு என்று எண்ணிவிட்டார்கள். இப்பொழுது நான் தனியாக இருக்கிறேன். சோதனைகள் ஏற்படும் காலங்களில் சோர்வடையாமல் அவற்றை எதிர்த்து நிற்கும் சக்தியை எனக்கு ஆண்டவன் அளிக்க வேண்டும். என் மனத்தில் பட்டதைத் தான் சொல்லுவேன். இவர்கள் நினைப்பது போல் செய்ய நேரிடுமாயின், நம் உயிரைக் கொடுத்துப் பெற்ற சுதந்திரம் இருண்டதாகத் தான் முடியும். அந்த நிலையைப் பார்ப்பதற்கு நான் உயிரோடு இருக்கக் கூடாது'' என்று கூறியதாக திரு. தெண்டுல்கர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மனக்குழப்பம் நிறைந்த அந்தச் சூழலில் காந்தியடிகள், ''மக்கள் என் மேல் கொண்ட மிகுந்த அன்பின் காரணமாக நான் கொண்டிருக்கும் மனக்குழப்பத்தை அறிந்து என்னை காசிக்கோ, இமயமலைக்கோ சென்று வரும்படி கூறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்கு மக்களின் இன்னல்கள் நீக்கப்படுமோ, நசுக்கப்பட்டவர்கள் கரையேற்றப்படுவார்களோ, அதுதான் நான் தவம் புரியும் இமயமலை என்று கூறுகிறேன்'' என்று கூறினார்.

அய்யா அவர்கள் கல்வியமைச்சராக இருந்த பொழுது வால்மீகி குடியிருப்பில் வசித்த காந்தியடிகளை சந்திக்கச் சென்றார்கள். அப்பொழுது காந்தியடிகள் அய்யா அவர்களிடம், ''அவர்கள் என் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் என் கொள்கைகளைப் பின்பற்றுவதில்லை. எனக்கு வயதாகி விட்டதென கருதுகிறார்கள். நான் நீண்ட காலம் உயிரோடு வாழ விரும்பவில்லை'' என்று தன் மனத்தில் இருந்ததை அப்படியே கூறியிருக்கிறார். இச்செயல் அய்யா அவர்கள் மீது காந்தியடிகளுக்கு இருந்த மகத்தான எல்லையற்ற நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

இந்த கட்டத்தில் டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மகாத்மாவை மிகவும் பாதித்தன. இரு பிரிவு மக்களிடை

யேயும் பிரிவினை நீண்டது. பாகிஸ்தானில் இந்துக்களைப் படுகொலை செய்தனர். பெருந்துன்பத்திற்குள்ளாக்கினர். மக்களுக்காகவே உயிர் வாழ விரும்பிய காந்தியடிகள், 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் தேதி முதல் கால வரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாக, ஜனவரி மாதம் 12 ஆம் தேதி மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது கூறினார். இதனைக் கேட்ட பலரும் அதிர்ச்சியுற்று வருந்தினர்.

மக்கள், காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொள்வதைத் தடுப்பதற்குத் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர். டாக்டர் இராஜேந்திர பிரசாத் தலைமையில் பல இனத்தவரும் சேர்ந்த 130 பேர் கொண்ட குழு காந்தியடிகள் கூறிய நிபந்தனைகள் அடங்கிய பிரகடனத்தை ஏற்று கையெழுத்திட்டு அனுப்பினார்கள். அதன் அடிப்படையில் காந்தியடிகளும் தன் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தபொழுது. அவரைக் காண அய்யா அவர்கள் டெல்லியில் பிர்லா மாளிகைக்குச் சென்றார்கள். அச்சமயம் காந்தியடிகளை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்பதை அறிந்த அய்யா அவர்கள் வெளியிலிருந்தே அவரைப் பார்த்தார்கள். அப்பொழுது ஆண்டவனிடம் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நிலையில் காந்தியடிகள் முகம் மிகவும் பிரகாசமாக இருந்ததைக் கண்டார்கள். இந்த சந்திப்பு தான் காந்தியடிகளுடன் அய்யா அவர்கள் கொண்ட இறுதிச் சந்திப்பு.

பாகிஸ்தானிலிருந்த இந்துக்கள் இந்தியாவிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். எனவே, அவர்களுக்கு முஸ்லீம்கள் மீது காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், காந்தியடிகள், இந்திய அரசாங்கம், பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காது நிறுத்தி வைத்திருந்ததை அறிந்து அதனை உடனே கொடுக்க

வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இதன் காரணமாக இந்துக்களுக்குக் காந்தியடிகள் மீது வெறுப்பு ஏற்பட்டது.

காந்தியடிகள் பிரார்த்தனைக்கு வந்த பொழுது, ‘காந்தி ஒழிக’ என மக்கள் குரல் எழுப்பினர். மற்றொரு நாள் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் குண்டு வீசப்பட்டது. ஆண்டவன் புண்ணியத்தால் யாருக்கும் ஒரு தீங்கும் ஏற்படவில்லை. டாக்டர் சுசிலா நய்யார் ‘ஐயோ’ என அலற, காந்தியடிகள், ‘‘பிரார்த்தனைக் கூட்டத்தில் கிடைக்கும் சாவைக் காட்டிலும் சிறந்த சாவு வேறொன்றும் இருக்க முடியாது’’ என்று கூறி அனைவரையும் அமைதிப்படுத்தினார். இந்நிழ்ச்சியைப் பாராட்டிய திருமதி மவுண்ட்பேட்டனிடம் காந்தியடிகள், ‘‘இதனைத் துப்பாக்கி பயிற்சி என்றுதான் நான் எண்ணினேன். என்னை யாரேனும் சுட்டால், அதனை அஞ்சாமல் ஏற்றுக்கொண்டு ராமநாமத்தை உச்சரித்தவாறு உயிர் துறந்தால் உங்கள் பாராட்டுக்குத் தகுதியுடைய வனாவேன்’’ என்று கூறினார்.

விதி சதி செய்த ஜனவரி 30–ஆம் தேதியன்று மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தைப் பாதுகாப்பு கருதிப் பிர்லா மாளி கையின் உள்ளேயே வைத்துக் கொள்ளலாம் என பட்டேல் கேட்டுக் கொண்டார். மகாத்மா அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. உடனே, காவல்துறையினர் மக்களை சோதனை செய்து பிரார்த்தனைக்கு அனுப்புவதற்கு அனுமதி கேட்டார்கள். அண்ணல் காந்தியடிகள் அதற்கும் அனுமதி மறுத்துவிட்டார். ‘‘நான் உயிர் வாழ வேண்டுமென ஆண்டவன் நினைத்தால் நான் வாழ்வது உறுதி. இல்லையெனில் என்னை யாராலும் காப்பாற்ற முடியாது. சாவைக் கண்டு அஞ்சுபவன் கோழை. பிறந்த யாவரும் ஒருநாள் இறப்பது உறுதி. நான் இந்த உடலால் வாழவில்லை. என் செய்திகளில் வாழ்கிறேன். நீங்கள் என் செய்தியின்படி வாழுங்கள்’’ என்று கூறிவிட்டுப் பிரார்த்தனைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அக்கூட்டத்தில் நாதுராம் கோட்சே காந்தியடிகளை வணங்கினான். கையிலுள்ள துப்பாக்கியினால் மூன்று முறை சுட்டான். காந்தியடிகள் ''ஹரே ராம்'', ஹரே ராம்'', ஹரே ராம்'' என்று மூன்று முறை சொல்லி உயிர்விட்டார். இச்செய்தி நாடு முழுவதும் காட்டுத்தீ போல பரவியது. நாடே துயரத்தில் ஆழ்ந்தது. நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மகத்தான ஜோதி அன்று அணைந்தது.

இச்செய்தி, சென்னை மாகாணத்தில் கல்வியமைச்சராக விளங்கிய அய்யா அவர்களுக்கு எட்டியது. அப்பொழுது அய்யா அவர்கள், காந்திஜி தன்னிடம் 1934—ஆம் ஆண்டு கோயமுத்தூர் மாவட்டத்திற்கு வந்திருந்தபொழுது கூறிய கதையை நினைத்துப் பார்த்தார்களாம். அக்கதையில் ''ஒரு மனிதன் தேங்காய் வாங்கச் சென்றானாம். கடையில் விசாரித்த பொழுது ரூ.1 என்றும் மொத்த வியாபாரிகளிடம் சென்றால் மலிவாகக் கிடைக்கும் என்றும் கடைக்காரன் கூறினானாம். உடனே அவன் மொத்த வியாபாரியிடம் சென்று விசாரித்த பொழுது, மொத்த வியாபாரி ஒரு தேங்காய் 75 பைசா என்றும் தென்னந்தோப்பு இருப்ப வரிடம் சென்று கேட்டால் இன்னும் மலிவாகக் கிடைக்கும் என்றும் கூறினானாம். உடனே அவன் தோட்டக்காரனிடம் சென்று கேட்டபொழுது 50 பைசா என்றும் மரத்தில் ஏறி நீயே பறித்துக் கொண்டால் 25 பைசாதான் என்றும் கூறினானாம். மிகவும் மகிழ்ந்த அந்த மனிதன் மரத்தில் ஏறி கீழே விழுந்து இறந்து போனானாம்'' என்று கூறிவிட்டு அவினாசி என் முடிவும் அப்படிப்பட்டது தான். சுலபமாக வெகுவேகமாக மக்களுக்கு நான் பல நன்மைகளைச் செய்ய விழைகிறேன். என்னை எவனாவது சுட்டுக் கொன்று விடுவான் அல்லது தூக்கிலிடுவான்'' என்று கூறினாராம். அய்யா அவர்களோ காந்தியடிகளிடம், ''இப்படிச் சொல்லாதீர்கள்'' என்று வேண்டிக் கொண்டார்களாம். அய்யா அவர்கள் காந்தியடிகளின் மறைவைக் கேட்டவுடன் இந்த நிகழ்ச்சியை எண்ணிப்பார்த்து எவ்வளவு தீர்க்க

தரிசனமாகக் கூறியுள்ளார் என்று அவர் சொன்னவற்றை நினைத்து நினைத்து வருந்தினார்கள்.

காந்தியடிகளின் அஸ்தி நாட்டின் பல புண்ணிய நதிகளில் கரைக்கப்பட்டது. கங்கை, யமுனை நதிகள் சங்கமமாகும் இடத்தில் இந்தியப் பிரதமர் நேருஜி அவர்களால் கரைக்கப்பட்டது. அஸ்திக் கலசங்களில் ஒன்று சென்னைக்கு வந்தது. அது இராஜாஜி மண்டபத்தில் மக்கள் பார்வைக்கென வைக்கப்பட்டது. திரு. பக்தவத்சலம், அஸ்தியை இராமேசுவரத்தில் கரைத்தார். தென்னகத்தின் புண்ணிய நதிகளில் ஒன்றான காவிரியாற்றில் திரு.டி.எஸ்.எஸ். இராஜன் அவர்களுடன் அண்ணல் காந்தியடிகளின் அஸ்தியைக் கரைக்கும் புண்ணிய பேற்றினை அய்யா அவர்கள் பெற்றார்கள்.

காந்தியடிகள் 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் இறந்தபின், பிப்ரவரி மாதம், புதுடில்லியில் தலைமையகத்திலும் அனைத்து மாநிலங்களிலும் கிளைகளைக் கொண்ட அறக்கட்டளை ஒன்று 'காந்தி நினைவு நிதி' என்ற பெயரில் நிறுவ தீர்மானிக்கப்பட்டது. நாடெங்கும் இந்த நினைவு நிதிக்காக பதின்மூன்று கோடி ரூபாய் திரட்டப்பட்டது. அதில் தமிழ்நாட்டின் பங்காக ரூ.65 லட்சம் கிடைத்தது. தமிழ்நாட்டின் 'காந்தி நினைவு நிதி' செயலராக திரு என்.எம்.ஆர். சுப்பராமன் நியமிக்கப் பட்டார். தமிழக காந்தி நினைவு நிதியின் தலைமையகம் மதுரையில் செயல்பட்டது.

திரு என்.எம்.ஆர். சுப்பராமன் காந்தியடிகளிடம் எல்லையற்ற மதிப்புக் கொண்டவர். நேர்மையானவர். எளிமையானவர். எடுத்த காரியத்தை நிறைவேற்றும் துணிவு கொண்டவர். அவரை, அய்யா அவர்கள் காந்தியடிகளின் நூல்களை எல்லாம் தொகுத்து, அவற்றைத் தமிழில் 17 தொகுதிகளாகக் கொண்டுவரும் பொறுப்பை, காந்தி நினைவு நிதி ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்

கொண்டார்கள். அய்யா அவர்களின் அன்பு கட்டளையை தமிழ்நாடு காந்திநினைவு நிதிக்குழுவும், திரு என்.எம். ஆர். சுப்பராமனும் ஏற்றுக் கொண்டனர். இக்குழு அய்யா அவர்களை தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும்படி வேண்ட, அய்யா அவர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். 1955 ஆம் ஆண்டு அய்யா அவர்கள் தலைவராகவும், திரு ஜி. வெங்கடாசலபதி செயலராகவும், திருவாளர்கள் என்.எம்.ஆர். சுப்பராமன், பெருந்தலைவர் காமராசர், சர்தார் ஏ. வேதரத்னம், சி. சுப்ரமணியம். எம். பி. பெரியசாமித் தூரன், எம். அருணாசலம், ஆர். விநாயகம். எல்.என். கோபாலசாமி, என். இராமசாமி ஆகியோர் உறுப்பினர்களாகவும் கொண்டு பணியைத் தொடங்கினர்.

*''எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன*
*பொருத்தமோ*

*இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்கெய்தும்*
*பொருத்தமோ''*

*— திருவருட்பா*

# 14. ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தின் முதல் பத்தாண்டுகள்

வித்யாலயத்தில் முதன் முதலில் ஓர் அரிசன மாணவன் சேர்க்கப்பட்டது மக்கள் மத்தியிலே வித்யாலயத்தைப் பற்றி நல்ல எண்ணத்தை எழுப்பவில்லை.

*சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறி முறையில் மேதினியில்*
*இட்டார் பெரியார் இடாதார் இழி குலத்தோர்*
*பட்டாங்கில் உள்ளபடி*

என்ற ஔவையார் பாடலுக்கேற்ப சாதி, சமய வேறு பாடற்ற கல்வி நிலையமாகவே வித்யாலயம் விளங்க வேண்டுமென்று அய்யா அவர்கள் விரும்பினார்கள். எனவே பலருடைய எதிர்ப்பையும் அச்சமயத்தில் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏழைக் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறையுள், புத்தகங்கள், நோட்டுகள், பென்சில், பேனா ஆகிய யாவும் கொடுக்க வேண்டும் என்று கருதினார்கள். இவற்றைச் சமாளிக்க ஒரே வழி நன்கொடை திரட்டுவது தான் என்று முடிவு செய்தார்கள்.

பெரிய குடும்பத்தில் பிறந்து, பணக்கார பரம்பரையில் வளர்ந்து, புகழ் தரும் கல்வியைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவரான அய்யா அவர்கள் பிறர் நலம் கருதி ஏழை எளிய மக்களின் மேல் எல்லையில்லாத அக்கறை கொண்ட காரணத்தினால் அம்மக்கள் நன்கு வாழத் தம்மையே தியாகம் செய்தார்கள். எனவே பலரிடம் நன்கொடை பெறத் தானே சென்றார்கள். பெரிய பெரிய பணக்காரர்களிடம் சென்றால் அவர்கள் பணத்தைக் கொடுப்பதுடன் வேறு எதிர்ப்பார்ப்பு



பக்தி சொற்பொழிவில் கலந்து கொண்டபோது அருகில் சுவாமி சோமானந்தர்,
டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ், தமிழ்க்கடல் இராம சொக்கலிங்கம் அவர்கள்

களுடன் இருப்பார்கள் என நினைத்த அய்யா அவர்கள் நடுத்தர வகுப்பினரை நாடி, அவர்கள் அளித்த சிறு தொகையையும் உள்ளன்போடு பெற்றுக் கொண்டார்கள். இன்னல்கள் தான் ஒருவருக்கு நற்பண்பைக் கொடுத்துக் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதைத் தன் அனுபவத்தின் மூலமாக அய்யா அவர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்.

நல்ல அரசன் குடி மக்களைக் கண்ணுங்கருத்துமாக வளர்ப்பது போலவும், பெற்ற தாய் குழந்தையை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பது போலவும் வித்யாலயத்தின் ஆரம்ப கால வளர்ச்சியில் அய்யா அவர்கள் முழுக் கவனத்தையும் செலுத்தினார்கள். வித்யாலயத்தின் கொள்கையை அனைவரும் புரிந்து கொள்ளச் செய்து, நேர்மையுடனும், உண்மையுடனும் உழைக்கும் ஊழியர்களைத் திரட்டிச் சிறந்ததொரு பாரம்பரியத்தை உருவாக்கி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார்கள். பொதுமக்களிடமும், சக ஊழியர்களிடமும், மாணவர்களிடமும், அன்புடனும், பாசத்துடனும் இருந்தார்கள்.

கிராமங்கள் தான் இந்திய நாட்டின் முதுகெலும்பாக விளங்குகின்றன என்பது அண்ணல் காந்தியடிகளின் கருத்து. அய்யா அவர்களும் நகர மக்களைக் காட்டிலும் கிராமமக்கள் கல்வி அறிவு பெற வேண்டுமென விரும்பினார்கள். பாமர மக்கள் கல்வியறிவு பெறும் அளவிற்குத் தான் ஒரு நாடு முன்னேறியதாகக் கருதப்படும் என்பது சுவாமி விவேகானந்தரின் வீரமொழி. இதன் அடிப்படையில் அய்யா அவர்கள் கிராமங்களில் வாழும் பாமர மக்களின் கல்விக் கண்ணைத் திறக்க, பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டிப்புதூர், அத்திப்பாளையம் ஆகிய இடங்களில் இரவுப் பள்ளிகளை நடத்திக் கல்விக்கெனச் சிறந்த சேவை செய்தார்கள். அய்யா அவர்கள் தொடங்கிய இச்சேவையை வித்யாலய மாணவர்கள் செம்மையுடன் தொடர்ந்து செய்தார்கள். அய்யா அவர்கள் சக ஊழியர்களிடமும், மாணவர்

களிடமும் சினங்கொள்ளாது உணர்ச்சி வசப்படாது அனை வரையும் அன்போடு ஆதரித்து அரவணைத்து வந்தார்கள்.

*''நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று*
*பண்பின் தலைப்பிரியாச் சொல்''*

*''இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''*

என்ற திருக்குறள்களுக்கு ஏற்ப எப்பொழுதும் இனிய சொற்களைப் பேசி எல்லோரும் அய்யா என்று அன்புடன் அழைக்கும் பேற்றினைப் பெற்றார்கள்.

அய்யா அவர்கள், வித்யாலயத்தில் பணிபுரியும் ஊழியர் களின் பணியைப் பாராட்டி ஊக்குவித்தார்கள். அவ்வப் போது பயன்மிக்க நல்ல அறிவுரைகளைக் கூறினார்கள். தாம் வழிபடும் தெய்வங்களான ஸ்ரீ ராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவி ஆகியோரின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வித்யாலயத்தில் கல்வி அளித்து வந்தார்கள். மனிதனை நன் மனிதனாக்குவதும், நற்பண்புகளை வளர்ப்பதுமே கல்வி யின் நோக்கமாகும் என்பதை அறிந்த அய்யா அவர்கள் வித்யாலயத்தில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பண் போடு வளர, மனிதனை மனிதனாக்கும் கல்வியைக் கற்றுக் கொடுக்க வழி செய்தார்கள். கண்டிப்போடும் கனிவோடும் மாணவர்களை நடத்தினார்கள்.

பிற உயிர்களையும் தன்னுயிர் போல் நேசிக்கும் அய்யா அவர்கள், வித்யாலயத்தில் பயிலும் மாணவர்கள், பணி புரியும் ஆசிரியப் பெருமக்கள் யாவரும் சேவை மனப் பான்மை கொண்டிருக்க வேண்டுமெனப் பெரிதும் விரும் பினார்கள். அதனால் தான் வித்யாலயம் வெறும் ஏட்டுக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் கல்வி நிறுவனமாக அமை யாது, ஆன்மீகத்தில் மக்களை ஈடுபடுத்தும் கல்விக்கூட மாகவும் திகழ்கிறது. பல்வேறு பயிற்சிகளை அளிக்கும்

பயிற்சிக் கூடமாகவும் வித்யாலயம் விளங்குகிறது. அய்யா அவர்களின் தலைமையில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா, கிராம ஊழியர்களுக்கான கோடைகாலப் பயிற்சிப் பள்ளி, ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி, கிராம ஊழியர்களின் மாநாடு ஆகிய அனைத்தும் பயிற்சியில் பங்கு பெற்றோர், பயிற்சியை அளித்தவர்கள் அனைவரும் பாராட்டும் வகையில் நடந்தேறின.

மாணவர்களுக்குத் தகுந்த தொழிற்கல்வி அளிக்க வேண்டுமென விரும்பிய அய்யா அவர்களுக்கு காந்தியடிகள் ஆதாரக் கல்வித் திட்டத்தை வித்யாலத்தில் அமுலாக்கியது மகிழ்ச்சி அளித்தது. இதனைப் பற்றி விவாதிக்க 1937 ஆம் ஆண்டு வார்தாவில், காந்தியடிகளின் தலைமையில், மாநிலக் கல்வி அமைச்சர்களுக்கும், தலைசிறந்த கல்வியாளர்களுக்கும் அகில இந்திய தேசியக் கல்வி மாநாடு நடந்தது. அம்மாநாட்டில் அய்யா அவர்களும் கலந்து கொண்டு தம் கருத்துக்களைக் கூறினார்கள். வித்யாலயத்தில் 1934 ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் நாள் தொழிற்கல்வி கூடத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டது. 1937ஆம் ஆண்டு வித்யாலயம் ஓர் உறைவிட உயர்நிலைப்பள்ளியாக உயர்ந்தது. 1938–ஆம் ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் என்னும் பெயரில் அஞ்சலகம் தொடங்கப்பட்டது. பின் பல கட்டிடங்கள் உருவாயின. மீனாட்சி மண்டபம் கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து விருந்தினர் இல்லம் கட்டப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக வித்யாலயம் வளர்ந்து வந்தது.

நல்ல பள்ளிகள் உருவாக வேண்டுமானால் அவற்றை நடத்திச் செல்லுவதற்கு நல்லாசிரியர்கள் வேண்டும். எனவே அய்யா அவர்கள் நல்லாசிரியர்களை உருவாக்கக் கூடிய ஆதாரப் பயிற்சி பள்ளியும், அதற்கு முதற்படியாக மாதிரி தொடக்கப்பள்ளியும் தொடங்க எண்ணினார்கள். காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளி 1942 ஆம் ஆண்டு சுதந்திரப் புரட்சி மிகத் தீவிரமாக இருந்த நேரத்தில்

தொடங்கப்பட்டது. அப்பொழுது அய்யா அவர்கள் பம்பாய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு வித்யாலயம் வந்தார்கள். வந்ததும் காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளி கட்டிடத் திறப்பு விழாவை நடத்தினார்கள். திறப்பு விழா முடிந்த அன்றே கைது செய்யப்பட்டார்கள்.

அய்யா அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி, ஆசிரியர்களிடம் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, மாணவர்களிடம் கொண்டிருந்த உறவு, இவையே வித்யாலயம் ஓங்கி வளரக் காரணங்களாய் விளங்கின. இறைவனிடம் பக்தி கொண்ட அய்யா அவர்கள் இறைவனது அருள் வடிவங்களாக மக்களைக் கண்டார்கள். கல்வி தரும் ஆசிரியர், அதைப் பயிலும் மாணவர்கள் அனைவரும் அய்யா அவர்களின் பார்வையில் இறைவனின் வடிவங்களாகத் தோன்றினார்கள்.

*''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே*
*அன்பெனும் கரத்தமர் அமுதே*
*அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே*
*அன்புருவாம் பரசிவமே''*

*— திருவருட்பா*

# 15. கல்வி அமைச்சராக

*"கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே"*

என்கிறது கொன்றை வேந்தன். நாடு சுதந்திரம் அடைந்த பின்பு, தாய்த்திருநாட்டு மக்களெல்லாம் ஆனந்தம் அடைந்தனர். ஒவ்வொரு மாநிலமும் ஆட்சி அமைக்க ஆரம் பித்தது. அப்போதைய சென்னை மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சராக அய்யா அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். கல்விமேல் பற்றுக்கொண்டவரும் குறிப்பாக கிராம மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டுமென எண்ணங் கொண்ட வரும் இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் மகளிர் கல்வி பெற்று மேம்பாடடைய வேண்டுமென்ற தணியாத ஆர்வம் கொண்டவருமான அய்யா அவர்களுக்கு, கல்விப் பொறுப்பு கொடுக்கப்பட்டது மிகமிகப் பொருத்த மாக அமைந்தது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எண்ணி தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுடன் கல்வி அமைச்சராகச் செயல்படத் துவங்கினார்கள். கல்வியில் அய்யா அவர் களுக்கு இருந்த ஆர்வத்தின் காரணமாகவும், சுவாமி விவே கானந்தரின் சொற்படி, மனிதனை உருவாக்கும் கல்வி நம் நாட்டு மக்களுக்குத் தேவை என்பதை மனத்தில் ஏற்றுக் கொண்ட காரணத்தினாலும் மகாத்மா காந்தியடிகளின் வேலை வாய்ப்புக் கல்வியைச் சிந்தையில் கொண்ட வராதலாலும் அய்யா அவர்கள், நாட்டு மக்களுக்கு நல்லதை விளைவிக்கும் கல்வித் திட்டத்தைத் தீட்டிச் செயலாக்க எண்ணினார்கள்.

சென்னை மாகாணத்தின் சட்டசபை 1949 ஆம் ஆண்டு கூடியது. அப்பொழுது வரவு செலவுத் திட்டம் விவாதிக்கப்

பட்டது. அடுத்து கல்வி பற்றிய மானியக் கோரிக்கையை அய்யா அவர்கள் சட்டசபைக் கூட்டத்தில் முன்வைத்து விவாதித்தார்கள். அச்சமயம் கல்வித் திட்டத்தில் கொண்டு வர வேண்டிய தேவையான மாற்றங்களை அய்யா அவர்கள் எடுத்துரைத்தார்கள். அக்கூட்டத்தில் குழந்தைகளுக்கு நற்பண்புகளையும், நம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியை அளிக்க வேண்டும் என்றும் தங்கள் வாழ்க்கைத் தேவைக்குத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளும் தொழிற்கல்வியை அளிக்க வேண்டும் என்றும் மாணவனின் அறிவாற்றலை வளர்த்து, அவன் சமுதாயத்திற்குப் பயன்படும் குடிமகனாகத் திகழுவதற்கேற்ற கல்வியை அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

இந்தச் சீர்திருத்தங்களைப் பற்றி ஆராய சிறந்த கல்வி யாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழு நன்கு ஆராய்ந்து அதன் பரிந்துரையை அரசுக்கு அனுப் பியது. அதன்படி வாழ்க்கைக்கான கல்வி, சமூக உணர் வினை வளர்க்கும் கல்வி, குழந்தைகளுக்குக் குடிமைப்பயிற் சிக்கான அறிவும் பயிற்சியும் அளிக்கும் கல்வி, பெண்களுக் குரிய கடமைகளிலும் பொறுப்புகளிலும் பயிற்சி அளிக்கும் மனையியல் கல்வி, அனைத்திற்கும் மேலாக தூய்மை, பக்தி, நற்பண்பு ஆகியவற்றை வளர்க்கும் கல்வி அளிக்க வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப்பரிந்துரைகளின்படி நடுநிலைப் பள்ளிகளில் செயல்முறைக் கல்வியும் மேல்நிலைப் பள்ளிகளில் பொறி யியல், வேளாண்மை, செயலர் பயிற்சி, போதனைப் பயிற்சி, மனையியல், கைத்தொழில் போன்ற தொழிற்கல்வியும் அளிக்கப்பட்டன. பெண்களுக்கான மனையியல் கல்வி யோடு அதன் தொடர்பான குழந்தை வளர்ப்பு, மனை நிர்வாகம், மனை அலங்காரம், உடை பாதுகாப்பு போன்ற வாழ்க்கை கல்வியைக் கற்றுக் கொடுக்கவும் வழி வகுக்கப்பட்டது.

முதியோர் கல்வி, வயது வந்தோர் கல்வி போன்ற முறைசாராக் கல்வியைக் கற்றுக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உடல் ஊனமுற்றோருக்கும், மனவளர்ச்சி குன்றியோருக்கும் தனிப்பட்ட கல்வி அளிக்க வேண்டு மெனச் சிந்தித்து அதன் தொடக்கமாக மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தனியாக பள்ளிகளைத் திறக்க ஏற் பாடுகள் செய்யப்பட்டன. அது மட்டுமன்றி மும்மொழிக் கொள்கை அமுல்படுத்தப்பட்டது. அதோடு கூட ஒவ்வொரு பகுதியின் வட்டார மொழி முதல் மொழியாகவும் இந்துஸ்தானி, வடமொழி, அரபு, பாரசிகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இரண்டாவது மொழியாகவும், ஆங்கிலம் மூன்றாவது மொழியாகவும் கல்வித் திட்டத்தில் இடம் பெற்றன.

பள்ளிகளை ஏற்படுத்துவதாலோ, அங்கு மக்களுக்குப் பயன்தரும் பாடங்களைக் கற்றுத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்வதாலோ மட்டும் கல்விப்பணி சிறக்காது. கல்விக் கண் களைத் திறக்கும் ஆசிரியப் பணியை அறப்பணி என நினைத்து, மாணவ, மாணவியரின் நலனில் அக்கறை கொண்டு உழைக்கும் ஆசிரியர்களின் நிலையை உயர்த்து வதும் அவர்களை மகிழ்விப்பதும் கல்விப்பணி சிறக்க வழி வகுக்கும் என எண்ணினார்கள். இந்த எண்ணம் எழுந்த வுடனே தமிழகத்தின் அனைத்து நிலைகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆசிரியர்களின் சம்பளம் ஒவ்வொரு மாதமும் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் தேர்வுகள் எழுதித் தங்கள் தகுதியை உயர்த்தி, அதன்மூலம் பணி உயர்வு பெறவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

அதோடு மட்டுமல்லாமல், நிதி உதவி பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக் கும் ஒரே மாதிரியான சம்பளம் வழங்க வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டது. தனியார் பள்ளிகளில் பணி

புரியும் ஆசிரியர்களுக்கும் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான அகவிலைப்படி வழங் கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தகு மாற்றங்களினால் அய்யா அவர்கள் அனைத்து ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார்கள்.

வயதுவந்தோர் கல்விக்குரிய முக்கிய சாதனங்களுள் ஒன்றாக, மாநிலம் முழுவதும் நல்ல நூல் நிலையங்கள் அமைக்க, நூலகச் சட்டம் ஒன்றை இயற்ற அய்யா அவர்கள் பொறுப்பேற்றார்கள். இதுதான் இந்தியாவில் முதன் முறையாக இயற்றப்பட்ட நூலகச் சட்டமாகும். உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் நூலகங்களுக்கு நிதிஉதவி அளித்து ஊக்குவிப்பது அரசின் நோக்கமாகும். எனவே மாநிலம் முழுவதும் வயதுவந்தோர் பள்ளிகள் திறக்கப்பட்டன. இதற்கென வயதுவந்தோர் கல்வி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். வயதுவந்தோர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தனி பயிற்சி அளிக்கப் பயிற்சி பள்ளிகள் திறக்கப்பட்டன. மாநிலம் முழுவதும் கிராமியக் கல்லூரிகள் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத்தகு கல்லூரிகள் நிதி உதவிபெறும் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன.

அய்யா அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபொழுது நாமக்கல் கவிஞர் திரு வி. இராமலிங்கம்பிள்ளை – தமிழ், மகாகவி வள்ளத்தோல் நாராயணமேனன் – மலையாளம் ஆகியோருக்கு அரசவைக் கவிஞர் விருது வழங்கப்பட்டது.

கல்வி இதழான 'புதிய கல்வி' என்ற இதழ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்பட்டது. அய்யா அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த பொழுது தான், தேசிய மாணவர் படையின் இளநிலைப்பிரிவு தொடங்க அனுமதி

அளிக்கப்பட்டது. மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக வளர இது வழி வகுத்தது.

சிறு வயதிலிருந்தே அய்யா அவர்களுக்கு நாட்டுப்பற் றோடு தாய் மொழிப் பற்றும் மிகுந்திருந்தது. அதன் பயனாக தமிழில் கலைக்களஞ்சியம் உருவாக அய்யா அவர்கள் கார ணமானார்கள். சாதாரண மக்களும் பல்வேறு துறைகளின் கருத்துக்களைத் தாய் மொழியாம் தமிழில் கற்றுக் கொள்ளும் வண்ணம் எழுந்த படைப்பே தமிழ்க்கலைக் களஞ்சியமாகும். அய்யா அவர்களின் முயற்சியால் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1946 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்திய நாட்டில் நோபல் பரிசு வாங்கும் அளவிற்கு விஞ் ஞானிகள் உருவாகாமல் இருப்பதற்குக் காரணம் தாய்மொழி வழிக் கல்வி பெறாமையே என்பது அய்யா அவர்களின் கருத்து. இக்கழகத்தின் தலைமைப் பொறுப்பை அய்யா அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். இக்கழகம் அறிவியல் மற்றும் பிற துறைகளில் தமிழ் வழி எழுதப்பட்ட சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கவும், தாய் நாட்டிலும் பிறநாடுகளிலும் விழாக்கள் நடத்தவும் ஏற்பாடு செய்தது. அய்யா அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும் என்பதற்குச் சான்றுதரும் வகையில் இன்றும் தமிழ் வளர்ச்சிக் கழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழில் கலைக்களஞ்சியப் பணி 1948 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அய்யா அவர்களின் காலத்தில்தான் முதல் முறையாக இந்திய மொழி ஒன்றில் கலைக்களஞ்சியம் உரு வாகும் நிலை ஏற்பட்டது. இத்தகு முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்று இன்று எல்லோரும் பயனடையச் செய்த அய்யா அவர்களுக்குத் தமிழகமும், தமிழக மக்களும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

வெளிநாடுகளிலும், நம் நாட்டின் பல்வேறு பகுதி களிலும் அய்யா அவர்கள் பயணம் செய்திருக்கிறார்கள்.

நல்ல புத்தகம் சிறந்த நண்பன் என்பதை அறிந்த அய்யா அவர்கள் அங்கெல்லாம் பல சிறந்த புத்தகங்களை வாங்கிப் படித்து இன்புற்று பிறரையும் இன்புறச் செய்தார்கள். அப் பொழுது குழந்தைகளுக்கென்று பல சிறந்த நூல்கள் இருப்பதையும், கலைக்களஞ்சியங்கள் இருப்பதையும் அறிந்து நம் குழந்தைகளுக்கும் இது போன்ற கலைக் களஞ்சியம் அமைக்க வேண்டுமென எண்ணினார்கள்.

*எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்*
*திண்ணிய ராகப் பெறின்*

என்பதற்கேற்ப திண்ணிய நெஞ்சமும் எண்ணியதை நிறைவேற்றும் வல்லமையும் கொண்ட அய்யா அவர்கள், திரு. பெரியசாமித்தூரனின் உதவியோடு குழந்தை–களுக்கான கலைக்களஞ்சியத்தை எழுதும் பணியில் ஈடுபட்டார்கள். இக்கலைக்களஞ்சியம் எளிய நடையில், சிறந்த கருத் துக்களைக் கொண்டதாய் குழந்தைகளின் மனத்தில் எளிதில் பதியக் கூடியதாய், பட விளக்கங்களோடு அமைய வேண்டும் என்று எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். வெற்றியும் பெற்றார்கள்.

அய்யா அவர்கள் சென்னை மாகாணத்தின் கல்வி அமைச்சராக இருந்தபொழுது, தமிழுக்கு அரிய சேவை செய் தார்கள். கட்டிடத்தைக் கட்டும் தொழிலாளி நல்ல தரமுள்ளவராக, கட்டுவதில் திறமையுடையவராக இருந்தா லொழிய கட்டிடம் நல்ல கட்டிடமாக அமையாது என்பதை அறிந்த அய்யா அவர்கள் தமிழ்மொழியை வளர்க்க வேண்டு மானால், தமிழ்மொழியை நன்கு கற்றுக் கொடுக்க வேண்டு மானால், தமிழாசிரியர்கள் மக்கள் மதிக்கக்கூடிய நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அவர்கள் நிலையை உயர்த்த விரும்பினார்கள்.

அன்று தமிழகத்தில் தமிழாசிரியர்களின் நிலை பரிதாபமாகவே இருந்தது. ஆங்கில ஆசிரியர்களும், ஏனைய

ஆசிரியர்களும், வகுப்பாசிரியர்களாக விளங்கினார்கள். ஆனால், தமிழாசிரியர்களுக்கு அந்த வாய்ப்பளிக்கப்படவில்லை. அதோடுமட்டுமல்லாமல், தமிழாசிரியர்களுக்கு ஏனைய ஆசிரியர்களைப்போல சம்பளமோ, சம்பள உயர்வோ, பதவி உயர்வோ, மற்ற சலுகைகளோ கிடையாது. இதனால் தமிழாசிரியர்களைக் கல்வியுலகம் மட்டமாகக் கருதியது. அய்யா அவர்களை இந்நிலை பெரிதும் பாதித்தது. இந்த நிலையை நீக்குவதற்கு அய்யா அவர்கள் சபதமேற்றார்கள். தமிழாசிரியர்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்காவிடில், அவர்களை உயர்த்தாவிடில், தமிழ் வளர்ச்சி பெறும் என்று எண்ணுவது ஒரு கனவாகவே அமையும். அய்யா அவர்கள், சென்னை மாகாண அரசில் தமிழாசிரியர்களுக்கு, மற்ற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியமும், மற்ற சலுகைகளும் கிடைக்க வழிவகுத்தார்கள். தமிழாசிரியர்களுக்குப் பரிசு அளிப்பதற்காக ஏற்பாடுகள் செய்தார்கள். கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களை, முதல் அரசவைக் கவிஞராக நியமித்தார்கள்.

தமிழாசிரியர்கள் அனைவராலும் மதிக்கப்பட்டார்கள். அதேநேரத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முறையாக சிறந்த தமிழ்ப்பேராசிரியர் விருது வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை மாகாணத்தின் கல்வி அமைச்சராக அய்யா அவர்கள், தமிழாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்களைப் போல் சமமாக கருதப்படுவார்கள் என்று ஆணை பிறப்பித்தார்கள். தமிழாசிரியர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றைப் பெற்றார்கள். பள்ளி தலைமையாசிரியர்களாக, கல்லூரி முதல்வர்களாக, பல்கலைக்கழக துணைவேந்தர்களாக பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. பல பள்ளிகளில் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டன. அய்யா அவர்கள் செய்திருக்கிற இச்சேவையைத் தமிழுலகம் என்றும் மறவாது, அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

*''நாடு விடுதலை பெற்றதன்பின்*
*நம் தமிழ்நாட்டில் பிறந்தவரே*
*ஏடு பயிலும் சிறுவர்களே*
*இனிய நல்வாழ்வினைப் பெற்றிடுவீர்''*

*— அழ. வள்ளியப்பா*

# 16. தமிழ்க் கலைக்களஞ்சியம்

சிறு வயதிலிருந்தே அய்யா அவர்களுக்கு நாட்டுப் பற்றுடன் தாய்மொழிப்பற்றும் மிக்கிருந்தது. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் என்றும் அழியாதவை. ஈடு இணையற்றவை. இதேபோல் இன்றைய அறிவியல் உலகின் தேவைகளுக்கு ஏற்பத் தமிழ் சிறந்த அறிவியல் மொழியாகவும் வளர வேண்டும். இதனால் சாதாரண மக்களும் அறிவியல் கருத்துக்களைத் தங்கள் தாய்மொழியாம் தமிழில் அறிந்து கொள்ள முடியும். இந்த எண்ணம் தான் அய்யா அவர்களை தமிழ்க் கலைக்களஞ்சியம் உருவாக்கத் தூண்டியது.

ஒரு நல்ல கலைக்களஞ்சியத்தில் மனிதனின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சாதனைகள் பற்றிய முக்கிய கருத்துக்கள் இருக்கவேண்டும். கலை, பண்பாட்டு, அறிவியல் துறை கருத்துக்களும் இடம்பெற வேண்டும். எளிய இனிய தமிழில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட வேண்டும். விலை குறைவாக இருக்க வேண்டும். அறிஞர்கள், வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், பதிப்பாசிரியர்கள், கலைஞர்கள் ஆகிய அனைவரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். நூல் வெளியிட முதலீட்டுத் தொகை வேண்டும். கருத்துக்களுக்கேற்பச் சித்திரங்கள் இடம்பெற வேண்டும். கலைக்களஞ்சியத்திற்கு குறிப்பகராதியும் மிகவும் தேவை.

இப்பணி மிகவும் கடுமையானது. எனினும் தமிழ் வளர வேண்டுமானால் இது மிகவும் அவசியம் என்று எண்ணிய அய்யா அவர்கள் கலைக்களஞ்சியம் உருவாக்க வேண்டு—மென விரும்பினார்கள். இந்தப்பணிக்கு 1947ஆம் ஆண்டு ரூ.18லட்சம் செலவாகுமெனக் கணக்கிடப்பட்டது. கல்வித்

துறைக்கென ஒதுக்கப்பட்ட ரூ.60 கோடியில் இப்பணிக்கென அரசு இவ்வளவு பெரிய தொகையை அளிப்பது முடியாத காரியம் என்று பலர் நினைத்தனர். ஆனால் அய்யா அவர்கள் மத்திய அரசின் துணையோடும் பொதுமக்களின் உதவி–யோடும் கலைக்களஞ்சியம் உருவாக்க துணிந்து செயல்பட்டார்கள்.

இந்நோக்கத்துடன் 1946 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. அய்யா அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் சி.ஆர். சீனிவாசன், டி.கே. சிதம்பரநாத முதலியார் துணைத்தலைவர்களாகவும், கல்கி ஆர். கிருஷ்ணமூர்த்தி செயலாளராகவும், திரு எஸ்.ஆர்.எம்.டி. அண்ணாமலைச் செட்டியார் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். டாக்டர் என். மகாலிங்கம் உள்ளிட்ட பல உறுப்பினர்களும் அக்குழுவில் இருந்தனர். கல்கி அவர்களின் மறைவிற்குப் பின், பேராசிரியர் கே. சுவாமி நாதனும் அவருக்குப் பிறகு, திரு எம்.பி. பெரியசாமித் தூரனும் பொறுப்பேற்றார்கள்.

தமிழ்க்கலைக்களஞ்சியப் பணி 1948ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ரூ.12லட்சம் செலவில் பத்து தொகுதிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டது. ஆகஸ்ட்மாதம் 15 ஆம் தேதி சுதந்திரதினத்தன்று அய்யா அவர்கள் நன்கொடை அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். இரண்டு மாதங்களில் 1½லட்சம் வசூலிக்கப்பட்டது. அய்யா அவர்களுக்கோ உற்சாகத்தோடு நம்பிக்கையும் பிறந்தது. மாநில அரசு ரூ. 5லட்சம் நிதிஉதவியைத் தவணை முறையிலும், மத்திய அரசு ரூ.3லட்சம் நிதிஉதவியைத் தவணை முறையிலும் அளிக்க முன்வந்தன. மீதமுள்ள தொகையைத் தமிழ் வளர்ச்சிக் கழகமே ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1949 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் தமிழ்க் கலைக் களஞ்சியப்பணி தொடங்கப்பட்டது. அவ்விழாவில் அய்யா அவர்கள் தலைமை தாங்க, அன்னாள் சென்னை பல்கலைக்

கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் தொடங்கிவைத்தார். திரு பெரியசாமித்தூரன் முதன்மை ஆசிரியராகவும், திரு திரிகூட சுந்தரம்பிள்ளை இணை ஆசிரியராகவும் பொறுப்பேற்றனர்.

தமிழ்க் கலைக்களஞ்சியப் பணி ஆரம்பிப்பதற்கு முன் எப்படி பணியை ஆரம்பிக்க வேண்டுமென ஆலோசிக்கப் பட்டது. அதன்படி, தமிழ்க்கலைக்களஞ்சியம் ஆங்கிலத்தில் இருப்பதுபோலவே அகரவரிசையில் உருவாக்க வேண்டும். இன்றைய அறிவியல், தொழில் முன்னேற்றங்கள் ஆங்கிலத்தில் கற்றுக் கொடுக்கப்படுவதால், தமிழில் ஏற்கனவே இருக்கும் சொற்களையும், தொடர்களையும் அப்படியே பயன்படுத்தலாம். புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய அகில உலகச்சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். கலைச்சொற்கள் கண்டுபிடிக்க பல்வேறு அறிவியல் துறைகளிலும் பணியாற்றத் துணைக்குழுக்கள் அமைக்கப் பட்டன. மனையியல் துறையில் பொறுப்பேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஒவ்வொரு துறையிலும் இடம்பெற வேண்டிய கட்டுரைகளின் தலைப்புகள், கலைச்சொற்கள், குறியீடுகள் ஆகியவற்றை இக்குழு முடிவு செய்தது. வெளி நாடுகளைப் பற்றிய கட்டுரைகளை எழுதுவதற்கு டில்லி, சென்னை, மும்பை போன்ற பெரிய நகரங்களில் உள்ள அயல்நாட்டுத் தூதரகங்களின் உதவியை நாடவும், தூதரகங்கள் இல்லாத நகரங்களில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான அறிஞர்கள் கட்டுரை எழுத கேட்டுக் கொள்ளப்பட்டனர். அறிவியல், தொழில்நுட்ப அறிஞர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. கலைக்களஞ்சியத்தின் அளவு, தொகுதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு தொகுதிக்கும் இருக்க வேண்டிய பக்கங்கள் ஆகியவை தீர்மானிக்கப்பட்டன.

கலைக்களஞ்சியத்தின் பணி தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடந்துவந்தது. இந்திய மொழிகளில் ஒன்றில்

இத்தகு முயற்சி மேற்கொள்ளுவது இதுவே முதல் முறையாகும். நிர்வாகக்குழு, பதிப்பாசிரியர் குழு, கலைச்சொல் குழு, துணைக்குழுக்கள் ஆகியவை தத்தம் பணியைத் திறம்பட செய்தன. 1954 ஆம் ஆண்டு கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி வெளியானது. பல்வேறு இடையூறுகளுக் கிடையே கலைக்களஞ்சியத்தின் முதல்தொகுதி வெளியானது குறித்து அய்யா அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். தொடர்ந்து ஊக்கமுடன் உழைத்ததால் 1963 ஆம் ஆண்டுக்குள் ஒன்பது தொகுதிகள் வெளிவந்தன.

அனுபந்தத்துடன் சேர்த்துப் பத்துத் தொகுதிகள் வெளியிட வேண்டுமென அய்யா அவர்கள் எண்ணினார்கள். 1968 ஆம் ஆண்டு அனுபந்தம், குறிப்பகராதி ஆகியவற்றுடன் பத்தாவது தொகுதி வெளிவந்தது.

அய்யா அவர்கள், வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுதெல்லாம் புத்தகக் கடைகளுக்குச் செல்வது வழக்கம். அக்கடைகளிலிருக்கும் குழந்தைகளுக்கான புத்தகங்கள், ஆங்கிலக் கலைக்களஞ்சியம் ஆகியவற்றைக் காணும் போதெல்லாம் நம் குழந்தைகளுக்கும் கலைக்களஞ்சியம் வேண்டுமே என்று ஏங்கினார்கள். திரு பெரியசாமித் தூரன் குழந்தை இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். எனவே அவரின் உதவியோடு அய்யா அவர்களின் நெடுநாளைய ஆசை நிறைவேறும் காலம் வந்தது. தமிழ்க்கலைக் களஞ்சியப்பணி முடிவுற்றவுடன், குழந்தைகள் கலைக் களஞ்சியப்பணி ஆரம்பமாகியது.

குழந்தைகள் கலைக்களஞ்சியம், வண்ணப்படங்கள் நிறைந்ததாகவும், எளிய நடையிலும், குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்ற வண்ணமும் அமைய வேண்டுமெனத் திட்டமிட்டார்கள். தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் நிர்வாகக் குழுவே குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் நிர்வாகக் குழுவாகச் செயல்பட்டது. அய்யா அவர்களின் தலைமையில் திரு சி. சுப்ரமணியம்,

திரு என்.டி. சுந்தரவடிவேலு ஆகியோரைத் துணைத்தலைவர்களாகவும, திரு எம்.பி. பெரியசாமித் தூரனைச் செயலர் மற்றும் பதிப்பாசிரியராகவும் கொண்டு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் அய்யா அவர்கள் என்னையும் ஒரு உறுப்பினராக நியமித்தார்கள். அதனை நான் மிகச் சிறப்பாக எண்ணிச் செயல்பட்டேன். குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி 1968 ஆம் ஆண்டும், பத்தாம் தொகுதி 1975 ஆம் ஆண்டும் வெளிவந்தன. இப்பத்துத் தொகுதிகளும் தமிழகக் குழந்தைகளுக்குச் சிறந்த பரிசாக அமைந்தது கண்டு அய்யா அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். பெருமிதம் கொண்டார்கள். மனநிறைவு அடைந்தார்கள்.

*''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலை*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''*
*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்''*

*— பாரதியார்*

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN (DEEMED UNIVERSITY) AVINASHILINGAM COIMBATORE 380
108915
LIBRARY
T4·4413 6 AVIw
31N8

# 17. தமிழ்த் தொண்டு

**நா**டு விடுதலை பெற வேண்டுமெனச் சிறை சென்ற அய்யா அவர்களுடைய நாட்டுப் பற்று வியக்கத்தக்கதாக இருந்தது. தேசம் அழைத்திடின் நீசம் அகற்றிட நேர்மையாய் தொண்டுகள் ஆற்றிட எண்ணி நாட்டுக்காகத் தன்னையே அர்ப்பணித்துச் சுதந்திரம் வாங்கித் தந்த தலைவர்களில் அய்யா அவர்கள் ஒப்பற்ற ஒருவராவார்கள். அச்சமயத்தில் ஆற்றலின் உறைவிடமான சக்தியின் புதல்வனாகவே அனைவரும் அய்யா அவர்களைக் கண்டார்கள்.

அய்யா அவர்களுக்குத் தாய்மொழி மீது இருந்த ஈடுபாடு அளவிடற்கரியது. ''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்று தாய்மொழியாம் தமிழைப் போற்றி அதை வளர்ப்பதையே தன் தலையாய நோக்கமாகக் கொண்டு அதற்காகச் செயல் பட்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். ''தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'' என்பதற்கிணங்க, தான் தமிழன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொண்டார்கள்.

அய்யா அவர்கள் சென்னை மாகாணத்தின் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பல நற்காரியங்களைத் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் செய்தார்கள். மனிதனின் இன்னல்கள், நம்பிக்கைகள், சாதனைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைத் தமிழில் வெளியிட வாய்ப்பு வேண்டுமென நினைத்து, தமிழ்வளர்ச்சிக் கழ கத்தை நிறுவி விடாமுயற்சியின் பயனாய் தமிழ் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டார்கள்.

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்*

என்ற திருக்குறளுக்கேற்ப எவ்வளவு அரிய காரியங்—களாக இருந்தாலும், அய்யா அவர்கள் முழுமையாகச் செய்து முடித்தார்கள்.

தமிழில் எழுதுகின்றவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று நினைத்து, தமிழில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்திப் பலரும் தமிழில் நூல் எழுத ஆக்கமும், ஊக்கமும் அளித்தார்கள். தமிழ் விழாக்களை மதுரை, திருவாரூர், கோவை, சென்னை, டில்லி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தி; தமிழைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வழிவகுத்தார்கள். ஆங்கில அரசின் ஆதிக்கத்தில் ஆங்கில மொழியின் மேலுள்ள மோகத்தில் மூழ்கியிருந்த தமிழ்மக்களைத் தட்டியெழுப்பித் தாய்த்தமிழுக்குரிய இடத்தை அளிப்பதற்கு இந்த முயற்சிகள் பெரிதும் உதவின. அய்யா அவர்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காகத் தனியாகக் கலைக்களஞ்சியம் உருவாக்க எண்ணினார்கள். கலைச் செல்வங்கள் யாவையும் நம் நாட்டில் குவித்திட எண்ணி, நம்நாட்டில் வளரும் குழந்தைகளின் அறிவு வளர வேண்டாமா? அவர்களுக்கும், மேலை நாட்டுக் குழந்தைகளுக்கு இருப்பது போன்ற வசதிகளைச் செய்துதர வேண்டாமா? இளம்பிஞ்சு உள்ளங்களில் நல்ல கருத்துக்களும், எண்ணங்களும் அறிவியல் மனப்போக்கும் இருந்தால் தானே, நல்லவர்களாக, வல்லவர்களாக, சான்றோர்களாக வளர வழிகிடைக்கும் என்று சிந்தித்துக் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தை உருவாக்கினார்கள்.

அய்யா அவர்கள் வாழ்க்கையில் ஆண்டவன் வழி—பாட்டுக்குப் பெரிய இடம் இருந்தது. அன்றாடம் அதிகாலையில் எழுந்து இறைவனை வழிபடுவார்கள். அதற்குப்பின் தியானத்தில் ஈடுபடுவார்கள். நல்ல கருத்தாழமிக்க வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் பல நூல்களைப் படித்தார்கள். தமிழ் இலக்கியத்தில், பக்தி இலக்கியத்தை அடுத்து, அய்யா

அவர்களின் மனத்தில் நிறைந்து இருந்தது திருக்குறள்தான். திருக்குறளின் கருத்துக்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவும் என்று நம்பி தினமும் படித்தார்கள். அய்யா அவர்கள் சிறையில் இருக்கும் பொழுதும் திருக்குறளை ஆழ்ந்து படித்தார்கள். கற்றபடி நின்றார்கள். பிறரும் நிற்க வழிகாட்டினார்கள். தாம் பெற்ற இன்பம் அனைவரும் பெற வேலூர் சிறையில் இருக்கும் பொழுது திருக்குறள் வகுப்பு களை மற்ற சிறைக் கைதிகளுக்கு நடத்தினார்கள்.

தமிழில் புலமை பெற வேண்டுமானால் திருக்குறள் போன்ற நூல்களைக் கற்று அவற்றின் வழி நிற்க வேண்டும்; வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குவது திருக்குறள் என்பது அய்யா அவர்களின் தீர்க்கமான கருத்தாகும். தமிழ் மக்களை மனதார நேசிப்பதற்கும், தமிழ் மக்களின் வறுமையை நீக்குவதற்கும் ஒருவர் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவதே உண்மையான தமிழ்ப்பற்றாகும் என வாழ்ந்து காட்டியவர்கள் அய்யா அவர்கள்.

இவ்வளவு சிறப்புமிக்க திருக்குறளை ஒவ்வொரு மாண வனும், மாணவியும் தன் சிறுவயது முதற்கொண்டே கற்றுக் கொள்ள வேண்டுமென நினைத்தார்கள். அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்கள் திருக்குறளைப் பாடமாகக் கற்க வேண்டுமென விரும்பினார்கள். இளஞ்சிறார்களின் உள்ளங்களில் நல்ல கருத்துக்களைக் கொடுத்து விட்டோ மானால் அக்கருத்துக்கள், அவர்கள் மனத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்து வாழ்க்கையை நெறிப்படுத்த வழிவகுக் கும் எனத் திட்டவட்டமாகத் தெளிந்தார்கள். எனவே கல்வி அமைச்சராக இருந்தபொழுது, மாணவச் செல்வங்கள் திருக் குறளைப் பொருள் உணர்ந்து படிக்கவும், மனப்பாடம் செய்யவும் பாடத்திட்டத்தில் வழிவகை செய்து பலரும் பயனடையப் பாதை வகுத்துக் கொடுத்தார்கள். இந்த அரிய சாதனைக்காக தமிழ் கூறு நல்லுலக மக்கள் இன்றும் அய்யா அவர்களை நினைவு கூர்ந்து நன்றிக் கடன் செலுத்தி வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை.



முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனுடன் அய்யா அவர்கள்

அதோடு மட்டுமல்லாமல், திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை வெளியிட நினைத்தார்கள். நினைத்ததை முடிக்கும் ஆற்றல் கொண்ட அய்யா அவர்கள் திரு. கி.வா.ஜ அவர்களின் துணையோடு திருக்குறள் ஆராய்ச்சியை மேற் கொண்டார்கள். ஆழ்ந்த தமிழ் அறிவும், இலக்கியப் புலமையும் கொண்ட திரு கி.வா.ஜகந்நாதன் அவர்கள் 1953 ஆம் ஆண்டு திருக்குறள் ஆராய்ச்சி பணியை ஏற்றுக் கொள்ள திரு.நா. மகாலிங்கம் அவர்கள் அத்தகு செயலுக்குப் பொறுப்பு ஏற்றார்கள். இந்த நூலின் பணிகளை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நூல் 1963 ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா நினைவுப் பதிப்பாக வெளியிடப்பட்டது. திருக்குறளுக்கென தனி அகராதியும், ஆராய்ச்சிக்குப் பொருளகராதியும் கொண்டு விளங்குவது இந்நூலின் தனிச்சிறப்பாகும். தகுந்த மேற்கோள்கள் காட்டப்பட்டுப் பல்வேறு உரை ஆசிரியர்களது உரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

காந்தியடிகளின் மேல் பற்றுக்கொண்ட சான்றோர் களால் காந்தி நினைவு நிதி அறக்கட்டளை நிறுவப்பட்டது. அதற்கு திரு.என்.எம்.ஆர். சுப்பராமன் மாநிலக் குழுவின் தலைவரானார். அவர் காந்தியடிகளைப் பற்றிய நூலைத் தமிழில் வெளியிட எண்ணினார். காந்தியடிகளோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்ற அய்யா அவர்கள் 1955 ஆம் ஆண்டு காந்தியடிகளைப் பற்றி நூல் எழுதும் குழுவின் தலைவராகச் செயல்பட்டார்கள். இந்நூற்பதிப்பு 17 தொகுதிகளைக் கொண்டது. தென்னாப்பிரிக்கா, அகிம்சை, சத்திய சோதனை, நலவாழ்வு, கதர், கிராம கைத் தொழில், கலை, பொருளாதாரத் தொடர்புகள், தீண்டாமை ஒழிப்பு, சத்தியாகிரகம், சமூக ஒற்றுமை, கடவுளும் சமயமும், பகவத்கீதை, அரசுக்கு எழுதிய கடிதங்கள், கிராம சுயராஜ்யம், மற்றவர்களுக்கு எழுதிய கடிதங்கள், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு என 16 தலைப்புகளில் தொகுக்கப்

பட்டது. 17 ஆம் தொகுப்பு குறிப்பகராதித் தொகுப்பாகப் பிரித்தெழுதப்பட்டது. இதன் முதல் தொகுதியை அய்யா அவர்களும், திரு. என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களும் நானும் எழுதினோம்.

பயணக் கட்டுரையாக அய்யா அவர்கள் எழுதி வெளியிட்ட ''திருக்கேதார யாத்திரை'' என்னும் புத்தகம் இமாலயப் பயணம் மேற்கொள்வோர் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும், மனத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்களையும் விளக்குவதோடு, அருமையான காட்சிகளையும் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந்நூலில் அய்யா அவர்கள் வெள்ளிப்பனிமலையின் மீதுலாவி, தான் பெற்ற இறை காட்சியை அனுபவித்து எழுதியுள்ள பாங்கு அனைவரையும் படிக்கத் தூண்டவல்லது.

மனித வாழ்க்கையின் நடைமுறையையும், இறையுணர்வையும், நிலையாமைக் கருத்துக்களையும் விளக்குகின்ற வகையில் அமைந்தது ''வாழ்க்கைத் தத்துவம்'' என்ற நூல். குழந்தைகளை வளர்க்கும் முறை, தெய்வீக உணர்வை உருவாக்குதல், அன்புடன் பழகுதல், அவர்கள் போக்கிலே விட்டு சுதந்திர உணர்வை வளர்த்தல் போன்ற கருத்துக்களைக் கொண்டது – 'குழந்தை வளர' என்ற நூலாகும். அன்பு, தியாகம், எளிமை, இன்சொல், பணிவுடைமை, சேவை மனப்பான்மை ஆகிய பண்புகளை உள்ளடக்கியது ''அன்பின் ஆற்றல்'' என்ற அரிய நூலாகும். சுயசரிதமாக அமைந்துள்ளது ''அருளின் ஆற்றல்'' என்ற நூல். இத்தகு சிறந்த தமிழ் நூல்களை எழுதி, தமிழன்னைக்கு அழகு சேர்த்துத் தமிழ்ப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அய்யா அவர்கள் தமிழன்னையின் ஒப்பற்ற தவப் புதல்வராக விளங்கினார்கள்.

*''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை''*

*– பாரதிதாசன்*

# 18. பக்திச் சிறப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாய் உயர்ந்த அய்யா அவர்கள் சிறுகுழந்தையாக இருக்கும் பொழுதே ஆண்டவனிடம் நிறைந்த பக்தி கொண்டிருந்தார்கள். சிறுவயது முதற்கொண்டே ஆண்டவனைச் சிக்கெனப் பிடிக்க விரும்பிய அய்யா அவர்கள் தன்னை ஈன்றெடுத்த அன்னை கோவிலுக்குச் செல்லும் பொழுதெல்லாம், உடன் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்கள். திருப்பூரில் தன் பள்ளி வாழ்க்கையிலும், பின்னர் சென்னையில் கல்லூரிகளில் படிக்கின்ற போதும் ஆண்டவனைத் தினமும் வழிபடும் பழக்கம் தொடர்ந்தது.

அய்யா அவர்கள் சென்னையில் தன் உயர் கல்வியைத் தொடர்ந்த பொழுது, அவர்களின் நெருங்கிய நண்பர் திரு. சின்னு, (பின்னாளில் சுவாமி சித்பவானந்தர் என்று அழைக்கப்பட்டவர்) ஸ்ரீராமகிருஷ்ணர் மடத்திற்கு அய்யா அவர்களை அழைத்துச் சென்றார். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்களான சாதுக்கள் பலர் ஆண்டவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதைக் கண்டு அய்யா அவர்கள் அவர்களைப் போல வாழவிரும்பினார்கள். ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அன்று முதல் அய்யா அவர்களின் இறுதி மூச்சு வரை, இம்மண்ணுலகை விட்டு மறைந்து விண்ணுலகை அடைந்த வரை, நாள்தோறும் நாங்கள் நலனுடன் வாழ எங்களை வாழ்த்திக் கொண்டிருக்கும் வரை, ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தராகவே விளங்கினார்கள்.

அய்யா அவர்கள், ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயத்திலும், சாரதாலயத்திலும் ஒரு கட்டடம் கட்டுவதாக இருந்தாலும் முதலில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாமணி தேவியார் இருவருக்கும் பூஜை செய்து, அவர்

களின் அருள் பெற்று அதன்பின்னர் தான் வேலையைத் தொடங்குவார்கள். அய்யா அவர்கள் செய்த வழிபாடு இக்கல்வி நிறுவனங்களில் இப்பொழுதும் நடந்து வருகிறது. இனி மேலும் தொடர்ந்து நடைபெறும் என்பது உறுதி.

தான் செய்கின்ற அனைத்துச் செயல்களுக்கும் ஆண்டவன்தான் உறுதுணையாக இருக்கிறான் என்ற நம்பிக்கை கொண்டவர்கள், தொட்ட காரியங்களெல்லாம் அவன் அருளால் துலங்கும் என்று எண்ணினார்கள். ஆண்டவனை சிக்கெனப் பிடித்தவர்களுக்கு எந்தக் குறையும் வராது என்று நம்பினார்கள். ''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும், ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'', என்று அனைவருக்கும் அன்புசெய்யும் உள்ளம் தனக்கு வேண்டுமென வேண்டியவர்கள்.

அய்யா அவர்கள் ''எந்தக் காரியத்தை நாம் மேற்கொண்டாலும், ஆண்டவனுக்கு அர்ப்பணித்துச் செய்கின்ற பொழுது, நமக்கு வெற்றி கிடைக்கும். இடையில் நேரிடும் இன்னல்களெல்லாம் மறைந்து விடும்'' என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர்கள்.

*''வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென், மால்வரையும்*
*தானம் துளங்கித் தலைதடுமாறிலென், தண்கடலும்*
*மீனம் படிலென், விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு*
*ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே''*

என்ற அப்பர் பெருமான் திருவாக்கினை வாழ்க்கையில் கடைபிடித்தவர்கள் அய்யா அவர்கள்.

ஆசிரியப் பெருமக்கள், மாணவியர் ஆகியோரிடம் பேசும் பொழுதும் இந்த இறைபக்தியைப் பற்றிக் கூறிக் கொண்டேயிருப்பார்கள். பக்தி மூலம் மனத்தை ஒருமை படுத்திப் பிறரும் வாழவழி வகுத்துக் கொடுத்தார்கள். தேவார, திருவாசகப் பாடல்களில் அய்யா அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

அப்பர் பெருமானின் பாடல்களைப் படித்துப் படித்து இன்புறுவார்கள். அப்பர் பெருமான் சிவபெருமானிடம் கொண்டிருந்த எல்லையற்ற பக்தியையும், பற்றையும் படித்து உள்ளம் நெக்குருகுவார்கள். 'அஞ்சுவயாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்ற தேவாரப் பாடல் வரியை அடிக்கடி நினைவு கூர்ந்து ஆண்டவன் நம்மோடிருக்கும் பொழுது நமக்கு அச்சம் என்பது கூடாது என்று வலியுறுத்து வார்கள்.

அய்யா அவர்கள் ''நாம் நல்ல காரியங்கள் செய்ய விழை யும் பொழுது நமக்கு எதிர்ப்புகள் வரும் துன்பங்கள் வரும் தொல்லைகள் வரும், தோல்விகள் நேரிடும். எது வந்தாலும் ஆண்டவன் அருளோடு நாம் காரியங்களைச் செய்யும் பொழுது அவை ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும்'' என்று எண்ணியவர்கள்.

*சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்*
*கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்*
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்ற தேவாரப் பாடலை அடிக்கடி சொல்லி ஆண்டவனிடம் அயராத நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஓர் இடர்பாடும் வராது என்று கூறுவார்கள்.

ஆண்டவனின் அடியவர்கள், இம்மனிதப் பிறவி நிலை யற்றது என்று உணர்ந்து நிலையற்ற இம்மனிதப் பிறவியை

விடுத்து நிலைத்த இறைவனோடு இரண்டற இணைந்து விட விரும்புவார்கள். ஆனால் திருநாவுக்கரசர் கூறியது போன்று இறைவனின் திருநடனம் காண, மனிதப்பிறவியும் வேண்டும் என்று நினைத்தவர்கள் அய்யா அவர்கள்.

*''குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயில் குமிண்சிரிப்பும்*

*பனித்த சடையும் பவளம்போல்*
*மேனியில் பால்வெண்ணீறும்*

*இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்*
*காணப்பெற்றால்*

*மனித்த பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே''*

என்ற நாவுக்கரசர் பாடலைத் தினமும் படித்து இன் புற்றவர்கள். அய்யா அவர்கள் மனிதப் பிறவியிலேயே இறை வனின் திருநடனத்தைக் காண முடியுமாயின் மனிதப் பிறவியையும் விரும்பி ஏற்கலாம் என்ற கருத்துடையவர்கள். பிரார்த்தனையின்போது மாணவியரிடம் இப்பாடலைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள்.

அய்யா அவர்கள் ஏட்டுக் கல்வியால் மட்டும் ஒருவனை மனிதனாக்க முடியாது, அவன் கல்லூரியில் கல்வி கற்கும் பொழுதே ஆன்மீக கல்வியும் அளிக்கப்படல் வேண்டுமென விரும்பினார்கள். எனவே தான், அய்யா அவர்கள் நிறுவிய இரு கல்வி நிறுவனங்களிலும் ஆன்மீகத்தை அளிக்கின்ற கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கும், கடைபிடிப்பதற்கும் ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக விளங்க, வேண்டிய வசதி களைச் செய்து கொடுத்தார்கள். இக்கல்வி நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையுடன் தொடங்கப் படுகின்றன. முன்னாள் மாணவியர் பலர் இப்பிரார்த்தனை யின் பயனை முழுமையாகப் பெற்றமையால் தம் குழந்தை களையும் இக்கல்வி நிறுவனங்களில் சேர்க்கவே விரும்பு–கிறார்கள். அய்யா அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறந்த

நாள், அன்னை சாரதாதேவியின் பிறந்த நாள், சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் ஆகிய விழாக்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாட வழிவகுத்துத் தந்தார்கள். அதில் மாணவியர், ஆசிரியர், பொதுமக்கள் அனைவரும் ஈடுபடும் வாய்ப்பினையும் அளித்தார்கள். வித்யாலயத்தில் 1936 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழாவும், 1953 ஆம் ஆண்டு அன்னை சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழாவும் நடைபெற்றன. வித்யாலத்தில் அன்னையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அனைவரும் சென்று ஆண்டவனை வழிபடத் தக்க ஆலயம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடந்தது.

வித்யாலயத்தில் அன்னையின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி 101 மணி நேரம் அகண்ட பஜனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1953 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் நாள் அதிகாலை 4.15 மணிக்கு தொடங்கப்பட்ட அகண்ட பஜனை 13 ஆம் நாள் மாலை 6.30 மணிக்கு நிறைவுற்றது. பஜனையில் தேவாரம், திவ்வியப்பிரபந்தம், திருவருட்பா, திருப்புகழ் முதலியவற்றை வித்யாலயா நிறுவனங்களின் மாணவர்களும் பக்தி இசைக் குழுவினரும் பாடினர்.

நாடு முழுவதும் 1963 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும், வித்யாலயத் திலும் இருந்த அனைவரும் பக்தி சிரத்தையுடனும் ஆர்வத் துடனும் இவ்விழாவில் கலந்து கொண்டு இறையருளைப் பெறும் வண்ணம் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவை யொட்டி மாணவர்கள் மத்தியில் எழுச்சியை உண்டுபண்ணும் வண்ணம் சுவாமி விவேகானந்தரின் கல்வித் தத்துவம் என்ற ஆங்கில நூலும், திருக்குறள் ஆராய்ச்சி என்ற தமிழ் நூலும் வெளியிடப்பட்டன. 'கல்வியில் ஆன்மீகப் பண்புகள்' என்ற பொருளில் மூன்று நாள் கருத்தரங்கும் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பள்ளி,

கல்லூரி மாணவர்களிடையே ஆன்மீகப் பண்புகளை வளர்க்கும் முறைகள் ஆலோசிக்கப்பட்டன. அருட்கொடையை அறிந்து கொள்ள கல்லூரி மாணவர்களுக்கிடையே சுவாமி விவேகானந்தரைப் பற்றிய கட்டுரைப் போட்டி, நாடகப் போட்டி, இசைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

நூற்றாண்டு விழாவினையொட்டி மனையியல் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் அஞ்சா நெஞ்சத்தையும் ஆன்மீக ஆற்றலையும் போற்றும் வண்ணம் நூற்றாண்டு விழா நினைவு அரங்கமாக சுவாமி விவேகானந்தர் அரங்கு கட்டப்பட்டது. கோவை மற்றும் கோவையைச் சுற்றியுள்ள நூறு பள்ளிக்கூடங்களில் சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும் பற்றிய சிறப்புரைகள் நடத்த அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி ஏற்பாடு செய்தது. அய்யா அவர்களின் ஆலோசனையின்படி 'சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும்' பற்றிய நூல் ஒன்றினையும் நான் எழுதினேன். அய்யா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் ஆண்டவனை வழிபட வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு ஆண்டும் அன்னை விழா, குருமகராஜ் விழா, சுவாமி விவேகானந்தர் விழா முதலானவை சிறப்பாக நடந்தேறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

*''வலிமை யுடையது தெய்வம் — நம்மை*
*வாழ்ந்திடச் செய்வது தெய்வம்''*

*— பாரதியார்*

# 19. ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை, அன்னைவிழா

கல்வி என்பது வெறும் கருத்துக்களைத் திணிப்பதன்று. கற்கும் கருத்துக்கள் மனிதனை மனிதனாக்குகின்றனவாய், க்கம் கொடுப்பனவாய், ஒழுக்கம் தருவனவாய் இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது போல ஏட்டுக் கல்வியினால் பயன் நிறைந்திருக்காது. மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்கின்ற கல்வியை அளிக்க வேண்டும். மாணவர்களின் எல்லாவகையான வளர்ச்சி களையும், வளர்க்கக்கூடிய பல திட்டங்களை வித்யாலயம் தீட்டி, செயல்படுத்தி வருகின்றது.

கல்வி நல்ல மனிதர்களை உருவாக்கவேண்டும். மனித நேயம் பேணுதல், பண்பு காத்தல், அறிவுடன் அன்பு கொள்ளுதல் போன்றவற்றையும் கற்றுக் கொடுக்கவேண்டும். மாணவர்கள், சிந்தனை திறன் மிக்கவர்களாக, அறிவாற்றல் மிகுந்தவர்களாக, பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைச் சிந்திக்கும் தெளிவும் ஆற்றலும் மிக்கவர்களாக உருவாக்கும் கல்வி அளிப்பதே நாட்டுக்குச் செய்யும் சிறந்த சேவை என்பதை அய்யா அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஏனெனில் எதிர்கால இந்தியா இன்றைய இளைஞர்கள் கையில் இருக்கிறது என்பது அய்யா அவர்கள் கண்ட உண்மை.

அய்யா அவர்கள் மாணவராக இருந்தபொழுதே, தன்னம்பிக்கை, இறைவனிடம் பக்தி, மற்றோரிடம் அன்பு செலுத்துதல், பிறருக்கு உதவி செய்யும் நல்லெண்ணம், ஏழை, எளியோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல், உயிர்களிடத்தில் அன்பு கொள்ளுதல், தேசத்தினிடத்துப் பற்றுக்

கொள்ளுதல், நாட்டுக்குச் சேவை செய்ய அர்ப்பணித்தல் ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொண்டார்கள். அப் பண்புகள் தான் அய்யா அவர்களை ஓர் ஒப்பற்ற மனிதராக, நாடுபோற்றும் நல்லோராக, உலகிற்கு அறிமுகப்படுத்தின. அய்யா அவர்களின் இரக்க சிந்தனையில் உருவானவைதான் வித்யாலயம், சாரதாலயம் என்ற இரு கல்வி நிறுவனங்கள்.

கல்வி, ஆளுமைத் தன்மையை வளர்க்கின்ற ஒன்றாக இருக்கவேண்டும். கற்றதனாலாய பயன் இறைவனை நாள் தோறும் வணங்குவதும், அவன் அருளைப் பெற்று அன்றன்று செய்யும் காரியங்களைச் சிறப்பாகச் செய்வதும், இரவில் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி முடிப்பதுமேயாகும்.

வித்யாலயத்தில் பயிலும் மாணவர்கள், இறைபக்தி, அன்பு, கருணை, ஆன்மநேய ஒருமைப்பாடு, நல்லொழுக்கம், சான்றோனாதல் ஆகிய பண்புகளைப் பெறவேண்டும் என விரும்பிய அய்யா அவர்கள், பல்வேறு திட்டங்களின் மூலமாக அப்பண்புகளை வளர்க்கப் பாடுபட்டார்கள். அவை அனைத்—திலும் மேலான சிறப்பினை உடையது குருபூஜையாகும். ஒவ்வோர் ஆண்டும், அந்த ஆண்டின் முதல் ஞாயிற்றுக்கிழமை குருபூஜை மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

வித்யாலயம் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை குருபூஜை தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தியாவிலேயே, ஒரு கல்வி நிலையம் இத்தகைய, மக்களை ஒன்று சேர்க்கின்ற, மக்களுக்கு ஆன்ம பலத்தை அளிக்கின்ற குருபூஜையைக் கொண்டாடுவது வித்யாலயம் ஒன்றுதான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஆண்டுதோறும் நடைபெறும் இவ்விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருளைப் பெற்றுச் செல்கிறார்கள். இவ்விழாவில் வித்யாலயத்திற்கு அருகிலிருக்கும் பல கிராமங்களிலிருந்து மக்கள் திரண்டு வந்து பக்தியோடு குருபூஜையில் கலந்து கொள்கிறார்கள். பெரியோர், இளைஞர், ஆண்கள், பெண்கள், ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர்,

சிறுவா், சிறுமியா் ஆகிய அனைவரும் மகிழ்ச்சியோடு கலந்து கொள்கிற விழா குருபூஜையாகும்.

பாமர மக்கள், ஒரு பெரிய கல்வி நிறுவனத்திற்குள் சென்று, இறைவனை வழிபடும் பேற்றினைப் பெறுகிறார்கள். வித்யாலய குருபூஜை என்றால் மக்கள் மத்தியில் ஒரு புத்துணா்ச்சி ஏற்படுகிறது. கண்டிப்பாக குருபூஜையில் கலந்து கொள்ள வேண்டுமென்ற அவா உண்டாகிறது. மக்கள் அனைவரும் ஒன்றுகூடித் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், வித்யாலயத்தின் முன்னாள் மாணவா்கள் பலா் பயபக்தியோடு குருபூஜையில் கலந்து கொள்கிறார்கள். குருதேவரின் அருளைப் பெறுகிறார்கள். அய்யா அவா்களின் அன்பையும், ஆசியையும் பெறுகிறார்கள். வித்யாலயத்தின் வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் சக மாணவா்களைக் கண்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

வித்யாலயத்தின் குருபூஜை ஏற்பாடுகள் ஒருவார காலத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்படும். பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியோடு அமா்ந்து உரைகளைக் கேட்பதற்கும், விழாவில் பக்தியோடு கலந்து கொள்வதற்கும் இடவசதிகள், அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஆரம்பித்து விடுகிறார்கள். வித்யாலயத்தின் ஆசிரியர்கள், மாணவா்கள் மிகவும் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்கிறார்கள். தங்கள் வீட்டில் நடைபெறும் விழா என்றே ஒவ்வொருவரும் எண்ணிச் செயல்படுகிறார்கள். சேவை மனப்பான்மையோடு ஒவ்வொரு சிறு செயலிலும் ஈடுபடுகிறார்கள்.

'பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் இப்பெருவிழா அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் நடைபெறுவதற்கு காரணம் பலரும் திட்டமிட்டுச் செயல் படுவதேயாகும். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளுக்குப் பணம்

கொடுப்பதில்லை. ஏற்ற தாழ்வின்றி வித்யாலய மாணவர்களே அனைத்து காரியங்களையும் இன்முகத்தோடு செய்து முடிக்கின்றனர். ஒரு சிறந்த காரியத்திற்குத் தானும் உதவிசெய்ய முடிந்ததே என்று எண்ணி மகிழ்ச்சி அடைகின்றனர். மனத்திருப்தி கொள்கின்றனர்.

முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் பெரியவிழாப் பந்தல், அன்னதானப் பந்தல், ஆன்மீக நூற்களை விற்பதற்குரிய சிறிய சிறிய பந்தல்கள் அமைத்தல், சிற்றுண்டிச் சாலைகள், கார், பஸ், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களை நெறிபடுத்துதல், அவை நிற்பதற்கு தகுந்த இடங்களை அமைத்தல், செருப்பு, குடைகள், பக்தர்களின் பொருட்களைப் பாதுகாத்து, திரும்பிச் செல்லும் பொழுது அவற்றைக் கொடுத்தல், அன்ன தானத்திற்கு வேண்டிய உணவுவகைகள் தயாரித்தல், பரிமாறுவதற்கு வேண்டிய பாத்திரங்கள் சேகரித்தல், சுத்தப்படுத்துதல், கல்வி பொருட்காட்சி அமைத்தல், அவற்றைக் காணவரும் மக்களுக்கு விளக்கிக் கூறுதல், குருபூஜைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் சேகரித்தல், விழாப் பந்தல் அலங்காரம், குருதேவர் பட அலங்காரம், அங்கு வைக்கப்படும் கடைகளை ஒழுங்குபடுத்துதல், தண்ணீர் பந்தல் ஏற்பாடு, சுற்றுப்புறத் தூய்மையாக்குதல், சிறப்பு விருந்தினர்களை உபசரித்தல், முதலுதவி, குருபூஜையின் முன் இரவும், விழா நடைபெறும் நாளன்றும், காவல் காத்தல் போன்ற பல்வேறு பணிகளைப் பகிர்ந்து வித்யாலய மாணவர்கள் மிகச் சிறப்போடு செய்து வருகிறார்கள். அய்யா அவர்கள் மாணவர்களும், ஆசிரியர்களும் செய்துவரும் ஏற்பாடுகளைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள்.

குருபூஜையின் அனைத்து நிகழ்ச்சிகளும், இருபகுதி களாகப் பிரிக்கப்படுகின்றன. முற்பகல் நிகழ்ச்சி, பிற்பகல் நிகழ்ச்சி என அது அமைகிறது. காலையில் 5.30 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவிலில் பஜனையுடன் ஆரம்பமாகிறது. அப்பூஜைக்குப் பின் பந்தலில், மேடையில் அழகாக மலர் களால் அலங்கரிக்கப்பட்டு பூஜைக்காக வைத்திருக்கும் ஸ்ரீ

ராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்திற்கு பூஜை செய்யப்பட்டு பஜனை ஆரம்பிக்கப்படுகிறது. காலை 9 மணிவரை பஜனை தொடர்ந்து நடைபெறுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், கோவை அவினாசிலிங்கம் பல்கலைக்கழக மாணவியர், சேவாகிராமம் மாணவியர், அவினாசிலிங்கம் சிரமிக் வித்யாபீடம், கிராமப் பகுதியைச் சேர்ந்த பல்வேறு பஜனை குழுவினர் ஆகியோர் மிக அருமையாக பாடல்களைப் பாடி மக்களைப் பரவசப்படுத்துவர். காலை ஏழுமணி அளவில் வித்யாலய மைதானத்தில் கொடியேற்றப்படும். பாண்டு வாத்திய இசையுடன் மாணவர்கள் அணிவகுத்துச் சென்று கொடிவணக்கம் செய்வர்.

ஆண்டவனை வழிபட்டு, பஜனையில் பங்குகொண்ட மக்கள், அறிவியல் முன்னேற்றத்தையும் அறிந்து கொள்ளும் வண்ணம் அறிவியல் கண்காட்சி ஒன்றும் அமைக்கப் படுகிறது. வித்யாலயத்தைச் சேர்ந்த பல்வேறு பகுதி மாணவர்களும், அவினாசிலிங்கம் பல்கலைக்கழக மாணவியரும் அமைத்த அறிவியல் பொருட்காட்சி காண்பவர் களுக்கு அறிவியல் கருத்துக்களை வழங்குவதாக அமைகிறது. இப்பொருட்காட்சி அமைப்பதற்காக மாணவர்கள் ஒரு மாதத் திற்கு முன்பே தயாராகிறார்கள். எந்த பொருளில் பொருட் காட்சி அமையவேண்டும் என ஆலோசித்து, பொருளுக் கேற்றவாறு பல்வேறு படங்கள், வரைபடங்கள், மாதிரிகள் ஆகியவற்றை அழகுடனும், கலைநுணுக்கத்துடனும் தயாரித்து காட்சிக்கு வைப்பர். அறிவியல், மனையியல், பொறியியல், வேளாண்மை, தொழில்கள், கலைகள், சமூகவளர்ச்சி, சமயக் கருத்துக்கள், நாட்டு நலப்பணிகள், சான்றோர்களின் சிந்தனைத்திறன், வாழ்க்கை வரலாறு போன்றவை இப் பொருட்காட்சியில் டம் பெற்றுள்ளன. படைப்பாற்றல், கலை உணர்வு, அழகுணர்ச்சி, ஒற்றுமையுடன் செயலாற்றுதல் ஆகிய பண்புகளை வளர்ப்பதற்கு இப்பொருட்காட்சி சிறந்த சாதனமாக அமைகிறது. மாணவர்கள் ஒற்றுமையோடு,

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியங்களைச் செய்வதைக் காணுவது கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது. பொருட்காட்சித் திறப்பு விழாவில், தலைவரும், திறப்பாளரும், பொருட்காட்சியைத் திறந்து வைத்து, விழா பந்தலில் அமைந்திருக்கும் மேடையில் சிறப்புரை ஆற்றுவார்கள்.

இச்சிறப்புரைக்குப்பின் பத்துமணி அளவில், விழா பந்தலில் கூடியிருக்கும் பக்த கோடிகள் அனைவரும், ஸ்ரீ ராம கிருஷ்ணர் அஷ்டோத்திர மந்திரத்தை, வித்யாலய செயலர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சுவாமிஜி சொல்ல அதனைத் தொடர்ந்து சொல்லுவர்.

அர்ச்சனை முடிந்தவுடன் மகேஸ்வர பூஜை நடைபெறும் அதே நேரத்தில் அன்னதானத்திற்கென்று அமைக்கப் பட்டிருக்கும் பந்தலில் அன்னதானம் நடைபெறும். உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரர், செல்வர், வறியவர், நகரத்தார், கிராமத்தார் என்ற எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் அமர்ந்து உண்பது மற்றுமொரு சிறந்த காட்சியாகும். காலை 10.30 மணி அளவில் ஆரம்பிக்கும் இந்த அன்னதானம் மாலை 3.00 மணிவரை தொடர்ந்து நடைபெறும். இந்த நேரத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம் உணவை உண்டு செல்லலாம். ஏழை மக்கள், ஒரு நேரமாவது வயிறார உண்ண முடிந்ததே என்று எண்ணி உண்டு மகிழ்ந்து செல்வர். இந்த அன்னதானம் தன்னை நாடி வருகின்றவர்களுக்கு ஒரு வேளை உணவை அளிக்கிறது. அன்னதானத்திற்கு வேண்டிய யாவற்றையும் செய்வதோடு, அன்னதானத்திற்கு வருகின்ற—வர்களை வரிசையாக அமர வைப்பது, உணவுகளை ஒழுங்காக பரிமாறுவது, உண்டபின் இடத்தைச் சுத்தப் படுத்துவது, பாத்திரங்களைச் சுத்தப்படுத்துவது ஆகிய யாவற்றையும் வித்யாலய மாணவர்கள், ஆசிரியர்களின் வழி காட்டுதலோடு செய்வதை அய்யா அவர்கள் கண்டு, ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதோடு, வித்யாலய ஆசிரியர், மாணவர்களின் செயலைக் கண்டு பூரிப்—படைவார்கள்.

இந்த அன்னதானம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் விழா பந்தலில், பாடல் குழுவினர், முறைப்படி தொடர்ந்து பஜனை செய்வார்கள். பாடல் குழுவினர், தாங்கள் பாடுவதோடு மட்டுமல்லாமல் கூடியிருப்பவர்களையும் பாடும்படி செய்வார்கள். பஜனையைத் தொடர்ந்து கதாகாலட்சேபம் இரண்டு மணிநேரம் நடைபெறும். இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம், போன்ற காவியங்களிலிருந்து ஏதேனும் ஒரு பொருள் பற்றியும், சமயச் சான்றோர்கள் வாழ்க்கை பற்றியும் கதாகாலட்சேப நிகழ்ச்சி நடைபெறும். இவையனைத்தும் முற்பகலில் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்.

முற்பகலில் இசைக்கு இடம் அளிக்கப்படுவதுபோல, பிற்பகலில் சொற்பொழிவுகளுக்கு இடம் அளிக்கப்படுகிறது. பிற்பகலில் ''குருதேவரின் வாழ்வும் வாக்கும்'' என்ற தலைப்பில் இருசொற்பொழிவுகள் இடம்பெறும். இச்சொற்பொழிவுகளில் சொல்லாற்றல்மிக்க, கருத்துச் செறிவுகள் நிறைந்த சொற்பொழிவாளர்கள் பங்கேற்பர். அதோடு அந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்கும் தலைவரின் பேருரையும் இடம்பெறும். இதனையடுத்து மாலை வழிபாடும் நாதசுர இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும். மங்கள இசையுடன் குருதேவருக்கு எடுக்கும் மங்கள ஆரத்தியுடன் விழா இனிதே நிறைவுறும்.

இவ்விழாவிற்கு வேண்டிய பணம் முழுவதும் வித்யாலய மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், சாதுக்கள், வித்யாலயத்தின் மேல் அக்கறை கொண்ட சான்றோர்கள், பக்தர்கள், அன்பர்கள் ஆகியோரால். பொதுமக்களிடம் வசூலிக்கப்படுகிறது. தீபாவளி விடுமுறைக்கு மாணவர்கள் செல்லும்பொழுது விழாவிற்கு நிதி திரட்டுவார்கள். இதனைத் தங்களுக்குக் கிடைத்த பாக்கியம் என்றே மாணவர்கள் நினைத்தார்கள். உற்சாகமாக நிதி திரட்டினார்கள். அதனால் மகிழ்ச்சியும், மனநிறைவும் பெற்றார்கள். கோவை அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தைச் சோந்த மாணவியர், ஆசிரியர், ஊழியர்கள், பல்வேறு கல்வி நிறுவனங்களில்

பயிலும், பணியாற்றும் ஆசிரியர், மாணவியர், ஊழியர் ஆகியோரும் தங்களால் முடிந்த நிதி அளிப்பர். அதோடு, அன்னதானத்திற்கு வேண்டிய அரிசியும் விருப்பம் உடையவர் அளிப்பர். இக்குருபூஜை நடைபெறுவதற்கு, ஏற்பாடுகள் செய்வதற்காக நடைபெறும் முதல் ஆலோசனைக் கூட்டம் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் தான் எப்பொழுதும் நடைபெறும் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வாறு திரட்டப்படும் நன்கொடை வரவு, விழா செலவு, ஆகியவை பற்றிய விவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டறிக்கையில் இடம்பெற்று பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு வழிசெய்யப்படுகிறது.

அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களில் அன்னை சாரதாமணியின் விழா ஒவ்வோர் ஆண்டும் முதல் வாரத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காலையில் 6.00 மணிக்கு சாரதாலய வளாகத்தில் அமைந்திருக்கும் ஆலயத்தில் அகண்ட பஜனை ஆரம்பித்து, உச்சி வேளையில் ஆரத்தியோடு முடிவுறும். சாரதாலய நிறுவனங்களில் பயிலும் மழலையர் முதல், முனைவர் பட்டப்படிப்பு பயிலும் மாணவியர் வரை, ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் பக்தியோடு பஜனையில் கலந்து கொள்வார்கள்.

பிற்பகலில் அன்னையைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும். அக்கருத்தரங்கில் மாணவியர் அன்னையைப் பற்றி சொற்பொழிவு ஆற்றுவர். பக்தர்கள் அன்னையின் வாழ்வும் வாக்கும் பற்றி எடுத்துக் கூறி மாணவியர் அவ்வழி நடக்க அறிவுரைகள் வழங்கி வாழ்த்துவார்கள். அக்கூட்டத்தில் பக்தியோடு, தூய்மையோடு அன்னை நம்மிடம் இருக்கிறாள் என்ற உணர்வுகளோடு அனைவரும் அமைதியாகக் கலந்து கொள்வார்கள். கூட்டம் மங்கள ஆரத்தியோடு முடிவுறும். ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் நடைபெறும் இவ்விழா, ஆண்டு முழுவதும் அன்னையின் ஆசியைப் பெற்று நாங்கள் சிறப்பாகச் செயல்பட ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது. இதே பொலிவுடன் இவ்விழா தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறாக, குருபூஜையும், அன்னை விழாவும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரிடம் தெய்வபக்தி, அன்பு, உழைப்பு, தன்னம்பிக்கை, கடமை–யுணர்வுகள், தலைமைப் பண்புகள், கலை உணர்வு, அழகுணர்வு, ஆன்ம பயிற்சி, ஒற்றுமை ஆகியவற்றை வளர்க்கவும், ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணிதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் வாக்குகள், அருள் மொழிகள், வீரவுரைகள் மக்களிடம் சென்றடைந்து வாழ்க்கையை வளப்படுத்தவும் உதவி வருகின்றன என்பதில் ஐயமில்லை.

*ஏழை எளியவர் எங்கள் நன்னாட்டிலே*
*என்றும் பசியாற வேண்டுவனே*

*— சங்குசுப்ரமணியம்*

# 20. எழுத்தாளராக

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பல பாடல்களைப் பாடி மக்களை ஆன்மீக வழிக்கு அழைத்துச் செல்லத் துணை புரிந்தனர். மகாகவி பாரதியார் தூங்கிக் கொண்டிருந்த நாட்டு மக்களைத் தட்டி யெழுப்பவும், சுதந்திர தாகத்தை மக்களிடையே ஊட்டவும், பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட, எளிய நடையில், இனிய சொற்களைக் கொண்டு பல பாடல் களைப் பாடினார். நம் அய்யா அவர்களோ மக்கள் மனத்தில் பக்தி சுரக்கவும், நாட்டுப்பற்றையும் சுதந்திர உணர்வையும் வளர்க்கவும், அனைவரும் அழிவில்லாத கல்வியைப் பெறவும் விரும்பினார்கள். எனவே பல நூல்களைப் படைத்து அவற்றின் மூலம் இவ்வையகம் இன்புற விழைந்தார்கள். அவர்கள் படைத்த பல நூல்களின் வாயிலாக அவர்கள் கொடுத்த கருத்துக்களையும் செய்திகளையும் மக்கள் படித்துச் சிந்தித்து அவற்றின் வழி செயல்பட வேண்டும்.

அய்யா அவர்கள் எழுதிய பயணக்கட்டுரை திருக்கேதார யாத்திரையாகும். அவர்கள் மேற்கொண்ட நீண்ட நெடும் கால்வழிப் பயண அனுபவத்தை, அவர்கள் இறைவனைக் கண்டு தரிசித்த சிறப்பை, செல்லும் வழிகளில் ஏற்பட்ட இன்னல்களை, இறைவனின் அற்புதக் காட்சியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்கள். அந்நூலைப் படிக் கும் பொழுது நாமும் நூலாசிரியரோடு திருக்கேதாரம், பத்ரி காசிரமம் ஆகிய புண்ணிய தலங்களுக்குச் சென்ற உணர் வினை அடைகின்றோம். இதில் ஆண்டவனை நினைத்துச் செல்கின்ற பக்தர்களுக்கு இன்னல்கள் யாவும் பாலத்திற் கடியில் ஓடும் நீர் போல மறைந்து விடும் என்பதை அழகாக ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்கள். இந்நூலில் சாதனை யிலும் தூய்மையிலும் உயர்ந்த சாதுக்களின் கூட்டம், பல

புண்ணிய தலங்கள், புண்ணிய தீர்த்தங்களெனக் கருதப்படும் கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா ஆகிய ஆறுகளின் உற்பத்தித்தலங்கள் ஆகியவற்றைக் கொண்டு கம்பீரமாக விளங்கும், இமயமலை, கர்ணப் பிரயாகை, ருத்ரப் பிரயாகை, குப்த காசி, அல்மோரா, ஹரித்துவாரம், துங்கநாத் போன்ற புண்ணியதலங்களையும் அங்கெல்லாம் கண்ட காட்சிகளையும் இறைவனை வழிபட்ட நிலையையும் படிப்போரது உள்ளம் நெகிழும் வண்ணம் விளக்கி யிருக்கிறார்கள்.

உலகத்தை இறைவன் படைத்த பின்பு, உலகத்தோரை உய்விக்க வேண்டிய பொறுப்பு மஹா விஷ்ணுவுக்கு வந்தது. அதற்காக வேதங்களைப் படைத்தார். வேதங்களைக் கற்று அவற்றின் வழி நின்று மக்களுக்கு வழி காட்டுவதற்குத் திரு மாலே மனித அவதாரம் எடுத்து இமயமலையில் தவம் செய்தார். அப்பொழுது இலக்குமிதேவி, பத்ரி (இலந்தை) மரமாகத் தோன்றி நிழல் கொடுத்தார். எனவே அத்தலம் பத்ரிகாசிரமம் எனப் பெயர் பெற்றது எனப் பல செய்தி களைத் தந்திருக்கிறார்கள். அய்யா அவர்கள் எழுதிய இந்த நூல், அவர்கள் திருச்சி சிறையில் இருக்கும் பொழுது 1941ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இந்நூலில், கோதுமை மாவை அரைக்கும் முறையை மிக அழகாக நேரில் காண்பது போல் எழுதியுள்ளார்கள். இந்நூல் அய்யா அவர்களின் உற்றுநோக்கும் திறனுக்கும் கற்பனை ஆற்றலுக்கும் தமிழ்ப் புலமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சுவாமி விவேகானந்தர், ''எழுமின், விழிமின் கருதிய கருமம் கைகூடும் வரை நில்லாது உழைமின்' என்று வீர முழக்கமிட்டவர். நம் நாட்டின் சிறப்பை, பண்பாட்டை, அந்நிய நாடாம் அமெரிக்காவில் பறைசாற்றிய அஞ்சா நெஞ்சம் கொண்டவர். அத்தகைய மகானிடம் அய்யா அவர்களுக்கு அளவற்ற ஈடுபாடு இருந்தது. அவரது கருத்துக்களை மனத்தில் கொண்டு பின்பற்றி வந்தார்கள். அவர்கள் சுவாமி விவேகானந்தர் கல்வியைப் பற்றிக் கூறிய

கருத்துக்களைத் தொகுத்து, 'கல்வி' என்னும் நூலில் எழுதியுள்ளார்கள். அய்யா அவர்கள் இந்நூலில் மனிதனை, மனிதனாக்கும் கல்வி உலகிற்குப் பயன்படும் என்பதை அறிந்து எழுதியிருப்பது சிறப்பிற்குரியதாகும். ''இரும்பு போன்ற தசைகளும், எஃகு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்க முடியாத அளவற்ற சக்தியும் வாய்ந்தவர்களே நம் நாட்டிற்கு இப்பொழுது தேவை. அத்தகைய ஆண்மை தரக்கூடிய கல்வியே நமக்கு வேண்டும். மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப் படுத்துவதே கல்வி'' என்று கல்வியின் அடிப்படையான நோக்கத்தைச் சொன்னவர் சுவாமி விவேகானந்தர். இக்கருத்துக்களுடன் மனத்தை ஒருமுகப்படுத்துதல், மன ஒருமையின் சக்தியே அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோல்; அறிவு வளர்ச்சியில் உண்மையான அவா, விடா முயற்சி, தூய்மை ஆகியவையே மாணவர்களின் இலக்கணங்களில் முக்கியம் வாய்ந்தவை; மறைகளின் மெய்ப்பொருளை உணர்த்துவது தான் ஆசிரியர்களின் இலக்கணம்; பெண் கல்வியின் சிறப்பு, எல்லோருக்கும் கல்வியளித்தல் போன்ற செய்திகளையும் விவேகானந்தரின் வழி நின்று ஆழமாக அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அய்யா அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அய்யா அவர்கள் ஆன்மீக வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதா மணிதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அருள் வாக்குகளைக் கடைபிடித்து இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கும் இறைவனை விடாது பிடிப்பதற்கும் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமிகள் சிலர் பெரிதும் உதவி செய்தார்கள். அய்யா அவர்களின் இனிய, நெருங்கிய நண்பர்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பக்தர்களாக விளங்கி னார்கள். அய்யா அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட, கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை முறையில் சுதந்திரம் பெற அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது தான் ஒரே வழி என்பதைக் கல்லூரியில்

படிக்கும் பொழுதே அறிந்து கொண்டார்கள். எனவே மகாத் மாவைக் காண வேண்டும் என விரும்பிய அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல இடங்களில் அண்ணலைக் கண்டு, உரையாடும் வாய்ப்பை பெற்றிருந்தார்கள். அவற்றை 'நான் கண்ட மகாத்மா' என்ற நூலில் விளக்கமாகப் படைத் திருக்கிறார்கள். இந்நூல் 1951 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. மகாத்மா காந்தியை முதன் முறையாகச் சென்னையில் சந் தித்த பொழுது, காந்தியடிகள் அனைவரும் கதராடை அணிந்து ஏழை எளிய மக்கள் வாழ்வு மலர உதவிட வேண்டுமெனக் கூறினார்கள். மக்கள் அனைவரும் இந்நாட் டின் முன்னேற்றத்திற்காகவும், நாட்டு மக்களின் முன்னேற் றத்திற்காகவும் குறிப்பாக ஏழைகளை ஈடேற்றுவதற்காகவும் தம்முடைய வாழ்க்கையை அண்ணல் காந்தியடிகள் நடத்தினார்கள் என்பதை அவரிடம், தான் அறிந்து கொண்ட செய்தியாக இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அன்பும், அடக்கமும், மன்னித்தலுமே உயர்ந்த ஆண்மைக்கும் ஆற்றலுக்கும் அறிகுறிகளாகும் என்பதை காந்தியடிகளின் வாழ்க்கை வாயிலாக தாம் உணர்ந்து கொண்டதாகக் கூறுவதுடன் மற்றவர்களும் அம்மாபெரும் பண்புகளைப் பெற வேண்டுமென்ற விருப்பத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். காந்தியடிகள் எவ்வளவு நேரம் தாமதித்து உறங்கச் சென் றாலும், காலை நான்கு மணிக்கு எழுந்து பிரார்த்தனையில் கலந்து கொள்வதையும், காந்தியடிகள் எல்லோருக்கும் எல்லாமுமாய் இருந்த நிலையையும் தான் கண்டு அனுப வித்த செயல்களையும் இந்நூல் விளக்குகிறது. தமக்குச் சரி யென்று தோன்றுவதை உடனே பின்பற்றுவதுதான் மகாத்மா வினுடைய தனிப்பட்ட பண்பாகும். பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் பிறர் கூறும் அவதூறுகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது பகைவர்களுக்கு அருளும் நன்னெஞ்சைப் பெற முடியும் என்பதையும், உயர்ந்த இலட்சியங்களைப் பின்பற்றித் தன்னம்பிக்கையைப் பெருக்கி, நாட்டின் மேல் நம்பிக்கை வைத்துத் தூய்மை வாழ்க்கை நடத்தி நம் சக்தியைப் பெருக்கிக் கொள்ளுவதே அகிம்சை

வாழ்க்கையின் ஆரம்பம் என்பதையும், அண்ணல் காந்தி யடிகள் தொண்டர்களிடம் அளவற்ற அன்பு கொண்டிருந் ததையும், ''நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது'' என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்த தன்மையையும், இறுதியில் காந்தியடிகள் தம் தொண்டர்களிடம், ''எனக்காகக் கோவில்கள் கட்ட வேண்டாம்; குளங்கள் வெட்ட வேண்டாம்; ஆனால், நான் பின்பற்றி வந்த உயர்ந்த கொள்கைகளை உங்கள் தினசரி வாழ்க்கையில் மேற்கொள்ளுங்கள்'' என்று கூறிய சிறப்பையும் தன் நூலில் விளக்கியுள்ளார்கள்.

அய்யா அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பே ''அன்பின் ஆற்றல்'' என்னும் நூலாகும். பெயரைப் பார்த்த மாத்திரத்திலேயே நூலின் அரு மையை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூல் குழந்தைகளைப் பெற்றோர் அன்புடன் வளர்க்க வேண்டும் என்று ஆரம்பித்து, ஆண்மையோடு கூடிய இலட்சிய வாழ்க் கையைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டுமெனக் கூறி வாழ்க்கைத் தத்துவத்தைத் திருக்குறள் வழிநின்று ஆராய்ந்து கூறி, உழைப்பு, ஊக்கம், தன்னம்பிக்கை, தைரியம், ஒழுக்கம், தேசபக்தி, மனத்தை அடக்கி ஆளுதல், தெய்வ பக்தி ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டால் இவ்வுலகில் நல்ல வாழ்க்கையைப் பெறலாம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் கற்பவருக்கு உவகைதரும் வண்ணமும் எழுதியிருக்கிறார்கள்.

அய்யா அவர்கள் பயணக்கட்டுரை எழுதுவதில் சிறந்து விளங்கினார்கள். 'கைபர்கணவாயில்' என்னும் பயணக் கட்டுரையில் அய்யா அவர்கள் அமிர்தசரஸ் வரை நடந்து சென்று, லாகூர் வழியாக சிந்து நதியைக் கடந்து எல்லைப் புற மாகாணத்தை அடைந்தது போன்ற செய்திகளைக் கூறி எல்லை காந்தி கான் அப்துல் கபார்கானைக் கண்டு அவரோடு சில கிராமங்களுக்குச் சென்றதைப் பற்றியும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலக பந்தங்களினின்று விலகி, அவற்றால் வரும் அல்லல்களிலிருந்து தப்பி என்றும் அழியா அமைதி நிலையை அடைய முயலுகின்றவர்களுக்குப் புலனடக்கம் இன்றியமையாதது என்ற கருத்தை விளக்கியுள்ளார்கள். துளசிதாசர், ஆஞ்சநேயரின் அருளைப் பெற்று பல புண்ணிய தலங்களுக்குச் சென்றதையும் சென்ற இடமெல்லாம் பக வானை வாயார வாழ்த்தி இசையுடன் கீர்த்தனைகள் பல பாடிய சிறப்பையும் அய்யா அவர்கள் விளக்கி ஆண்டவனை அடைய துளசிதாசர் அருளிச் செய்த இராமாயணத்தைப் படிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அடுத்து, அய்யா அவர்கள் எழுதிய நூல் அருளின் ஆற்றலாகும். இந்நூல் அய்யா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'Sacred Touch' என்பதின் மொழிபெயர்ப்பாகும். காந்தியடிகள் தன்னுடைய சுய சரிதையை 'சத்திய சோதனை' எனப் பெயரிட்டு அழைத்தது போன்று அய்யா அவர்கள் தன் னுடைய சுயசரிதையை அனைவரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் 'அருளின் ஆற்றல்' என்ற பெயரில் எழுதியிருக் கிறார்கள். அய்யா அவர்கள் தன்னுடைய வாழ்க்கையை எழுதி அதற்கு அருளின் ஆற்றல் எனப் பெயரிட்டிருப்பதே அவர்கள் ஆண்டவன் அருளினால்தான் எல்லாவற்றையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கை உடையவர்கள் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. இந்நூலைப் படிப்பவர் களுக்கு அய்யா அவர்களின் வாழ்க்கை புரிந்துவிடும். அதோடு மட்டுமல்லாமல் தேசசேவையிலும், பொதுநலத் தொண்டிலும் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு வழி காட்டும் நூலாகவும் இது விளங்குகிறது.

தமிழில் அய்யா அவர்கள் பல நூல்கள் எழுதி மக்களை மேம்படச் செய்தது போலவே ஆங்கிலத்திலும் நூல்களை எழுதியுள்ளார்கள். அந்நூல்களின் தலைப்புகளைப் பார்க்கும் பொழுதே உள்ளே புதைந்திருக்கும் கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். அய்யா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களில் ஒன்று 'Make Me a Man' என்பதாகும். இது

மனிதனை மனிதனாக்கும் நூல். இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய, படித்துப் பயன் பெற வேண்டிய நூல். இந்நூல் 1989 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அய்யா அவர்கள் இந்நூலின் முன்னுரையில் 'To me, the Message of Swamiji is the message of strength, purity and Manliness and that message has inspired me all through these nearly six decades and will continue to inspire me throughout my life. It is the wish to share this message with others that prompted me to write this book' என்றும் Love, truth and unselfishness are not merely moral figures of speech but they form our highest ideal, because in them lie manifestations of immense power. Only persons possessing such qualities can be said to be manly and can be counted as men என்றும் கூறியுள்ளார்கள். இந்நூலில் இவ்வாறு ஒவ்வொரு செய்தியையும் படித்துப் பார்க்கும் பொழுது அவற்றிலுள்ள கருத்துக்கள் மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கு வழி காட்டும் என்பதை அறியலாம்.

அய்யா அவர்களின் மற்றொரு நூல் 'Cultural Heritage of India' என்பதாகும். இந்நூல் 1991 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அய்யா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாக இது விளங்குகிறது. இந்தியக் கலாச்சாரமும் பண்பாடும் குறைந்து வருகின்ற இக்கால கட்டத்தில் இந்நூல் நமக்கு மிகுந்த பயனளிக்க வல்லது. வேதகாலம் முதல் இக்காலம் வரை உள்ள பண்பாட்டினை விளக்கிக் காட்டுகிறது. இப்படிப்பட்ட சிறந்த நூல்களை எழுதிய அய்யா அவர்கள் என்றும் நம் உள்ளங்களில் நிலைத்து நிற்கிறார்கள்.

*''எழுதுகோல் தெய்வம் என் எழுத்தும் தெய்வம்''*

*— பாரதியார்.*

# 21. திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை ஆரம்பித்தது

அய்யா அவர்களின் அன்புத் தந்தை 1934 ஆம் ஆண்டு அமரரானார். எல்லாக் குடும்பங்களிலும் நேரிடுவதைப் போலவே அய்யா அவர்கள் குடும்பத்திலும் பாகப் பிரிவினை செய்ய வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. ஆனால் இங்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை மிகவும் வித்தியாசமானது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் எவ்வித பிரச்சினையு மின்றி யாவரும் விரும்பும் வகையில் ஒருவருக்கொருவர் மனமகிழ்ச்சியோடு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அய்யா அவர்களின் சகோதரர்கள் அனைவரும் இறுதிவரை பாசத்தோடு இருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அய்யா அவர்கள் தனக்குக் கிடைத்த சொத்தை என்ன செய்வதெனத் தன் சிறிய தந்தை திரு.டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களையும் தமையனார் திரு.டி.எஸ். கந்தசாமிச் செட்டியார் அவர்களையும் சந்தித்து ஆலோசனை கேட்டார்கள். தான் பெண்கள் முன்னேற்றமடைய யாதேனும் செய்ய வேண்டுமென மனத்தில் நீண்ட நாட்களாக நினைத்துக் கொண்டிருந்ததையும் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

மகளிர் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று எண்ணினார்கள். பணம் சம்பாதிப்பது பிறருக்குக் கொடுத்து மகிழத்தான் என்ற குறிக்கோளையுடையவர்கள் அய்யா அவர்கள். கொடைகளிலேயே தலையாய கொடை, ஆன்மீகக் கல்வியை அளிப்பதுதான் என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணி தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரை வணங்கி

அண்ணல் காந்தியடிகளின் வழி நின்று, ஸ்ரீ ராமகிருஷ்ண ரின் சீடர்களான சுவாமி பிரம்மானந்தர், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் துணைகொண்டு வாழ்ந்த அய்யா அவர் களுக்கு ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணம் எழுந்ததில் சிறிதும் ஐயமில்லை. எனவே அவர்கள் தனக்கென வந்த பூர்வீக சொத்தின் பங்கில் மகளிர் கல்விக்கென, அறக்கட்டளை ஒன்று நிறுவ விரும்பினார்கள்.

ஆண்டவன் அருளால் 1951 ஆம் ஆண்டு அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்கள். அந்த அறக்கட்டளைக்குத் தன் சொத்துக்கள் அனைத்தையும் எழுதி வைத்தார்கள். அறக்கட்டளை நிறுவிய அய்யா அவர்கள், நம் நாட்டு உயர்ந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கற்றுக் கொடுக்கின்ற, பெண் களை ஆன்மீக் வழிக்கு அழைத்துச் செல்கின்ற, மகளிரை மேம்பாடு அடையச் செய்கின்ற கல்வியை அளிக்க பெண் கள் கல்வி நிறுவனத்தைத் தோற்றுவிக்க விழைந்தார்கள்.

அய்யா அவர்கள், பெண்கள் கல்வி நிறுவனம் ஆரம் பிக்க வேண்டுமானால் அதற்கென நிலம் வேண்டுமே என்று யோசித்தார்கள். எப்படியும் ஆண்டவன் அருள் உதவி செய் யும் என்று நம்பினார்கள். நம்பினோர் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு என்பதற்கிணங்க 1954 ஆம் ஆண்டு விஜயதசமி நாளன்று சென்னை அரசாங்கத்திடமிருந்து 5 ஏக்கர் நிலம் அறக் கட்டளைக்கு அளிக்கப்படுவதாக கடிதம் வந்தது. ஆண்டவனுக்கு நன்றி செலுத்திய அய்யா அவர்கள் அன்றே, தன்னோடு வித்யாலத்தில் தங்கியிருந்த சுவாமி சர்வக்ஞானானந்தரோடு வித்யாலய மண்ணை சிறிதளவு எடுத்துக் கொண்டு அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட (முன்பு வனக் கல்லூரியின் ஒரு பகுதி) இப்பொழுது அவினாசி லிங்கம் பல்கலைக்கழகம் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். கொண்டு வந்திருந்த மண்ணைத் தூவி 'ஜெய் ஸ்ரீ குரு மகராஜ் கி ஜே' என்று கூறினார்கள். ஆண்டவன் அருளை அபரிமிதமாகப் பெற்ற அய்யா அவர்கள் மனநிறைவோடு, சுவாமிஜியுடன் வித்யாலயத்திற்குத் திரும்பினார்கள்.

தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு பயிற்சிகளை அளித்து ஊக்கப்படுத்துகிறது.

மேலும் இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கல்வித்துறையின் வயதுவந்தோர் கல்வி இயக்குநரகத்தின் தொழில்நுட்ப மேற்பார்வையின்கீழ் இயங்கி வரும் ஸ்ரீஅவினாசிலிங்கம் சிரமிக் வித்யாபீடம் (உழைப்போர் தொழிற்கல்வி மையம்) எனும் நிறுவனம் 1984 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இந்நிறுவனம் முறைசாராக் கல்வி மற்றும் பயிற்சியைப் பாடத் திட்டமாகக் கொண்டு வேலையற்றோருக்கு பல்வேறு வகையான தொழில்நுட்ப அறிவை வழங்கி வேலை வாய்ப்பிற்கு உதவுவதையும் வேலையில் உள்ளோர் மேலும் அவர்கள் பணியில் உயர்நிலையை அடைய உதவுவதையும் முக்கிய குறிக்கோள்களாக கொண்டுள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வேலை வாய்ப்பை உண்டாக்கவும் பயிற்சி அளிக்க சிரமிக் வித்யாபீடம் உதவுகிறது. இங்கு பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள், பல்வேறு தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் போன்றவற்றில் பணிசெய்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்கின்றனர்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இந்தியா முழுவதும் வேளாண் மையங்களில் பணிபுரியும் மனையியல் ஆசிரியைகளுக்கும் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்திற்கு பயிற்சியாளர் பயிற்சி மையம் நிறுவ வாய்ப்பு அளித்து அதன் அடிப்படையில் 1990 ஆம் ஆண்டு இம் மையம் ஆரம்பிக்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் இங்கு நகரங்களில் வாழும் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

அய்யா அவர்கள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை ஆரம்பித்த பொழுது மாணவியர் தங்களுக்கு விருப்பமான பாடங்களை எடுத்து படிக்கும் வண்ணம் பட்டப் படிப்பில் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுக்க வாய்ப்பு அளித்தார்கள். தற்பொழுது முதுகலை வகுப்பில் மனை யியல், சத்துணவியல், சத்துணவு நிர்வாகம், மனை நிர்வாகம், மனித மேம்பாடு, மனையியல் விரிவாக்கம், ஆடை அலங்காரம், வேதியியல், உயிர் வேதியியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல், கணிதம், கணிப்பொறியியல், தமிழ், ஆங்கிலம், இந்தி, பொருளாதாரம், உளவியல், கல்வியியல் M.C.A., M.B.A., ஆகிய பாடங்களில் முனைவர் பட்டம் வரை படிக்கும் வாய்ப்பையும் மாணவியர் பெற்றுள்ளனர். மனையியல் பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் நம் நாட்டிலே இங்கு மட்டும் தான் மனையியலின் அனைத்துப் பிரிவுகளும் இருக்கின்றன. எனவே மனையியலுக்கு ஒப்பற்ற கல்விக் கூடமாக இது திகழ்கிறது. இவையனைத்தும் அய்யா அவர்கள் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டவை.

அய்யா அவர்கள் மகளிர் எல்லாவற்றிலும் நிகரற்றவர் என்ற பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்பி னார்கள். எனவே கலை, அறிவியல், மனையியல் பாடங் களைப் படித்து பட்டங்கள் பெறுவதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புகளை விரைவில் நல்கும் தொழில்நுட்பப் பாடங்களையும் ஆரம்பிக்க வேண்டுமென கனவு கண் டார்கள். அய்யா அவர்களின் கனவு நிறைவேறும் வண்ணம் சென்ற கல்வியாண்டில் பொறியியல் பாடங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. சென்ற கல்வியாண்டில், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகமும், ஆஸ்திரேலியாவிலுள்ள ராயல் மெல் போர்ன் பொறியியல் பல்கலைக்கழகமும் (RMIT) இணைந்து, இன்றைய தேவையை மனத்தில் கொண்டு, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பாடத்தைத் தொடங்கியிருக்கிறது. இதன் சிறப்பு என்னவெனில் மூன்றாம் ஆண்டு கல்விகற்கும்



வினோபாபாவே அவர்களுடன் அய்யா அவர்கள்




முன்னாள் இந்தியப் பிரதமர் மாண்புமிகு
லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடன்
அய்யா அவர்கள்



முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர்
திரு. காமராசருடன் அய்யா அவர்கள்



முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையாருடன் அய்யா அவர்கள்



முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களுடன் அய்யா அவர்கள்



முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி
அவர்களுடன் அய்யா அவர்கள்



முன்னாள் குடியரசுத் தலைவர்
திரு. ஜெயில்சிங் அவர்களுடன் அய்யா அவர்கள்



முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.ஆர் வெங்கட்ராமன்
அவர்களுடன் அய்யா அவர்கள்

மிகச் சிறந்த குடிமக்களாக விளங்க வேண்டுமென்ற ஆர்வம் போன்ற குணநலன்கள் பெற்று வளர வேண்டும் என்ற நோக்கத்தோடே ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வருகிறது. வித்யாலயம் தன்னகத்தே கலை, அறிவியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, உடற்பயிற்சி கல்லூரி, சமுதாயப் பாலிடெக்னிக், விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி தொழிற் பகுதி, நடுநிலைப்பள்ளி, உறைவிட உயர்நிலைப் பள்ளி, சுவாமி சிவானந்தர் மேனிலைப்பள்ளி ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது.

வித்யாலயமும், சாரதாலயமும் கருத்தரங்குகள் பல வற்றை நடத்திப் பல்வேறு கருத்துக்களை நாடு பயனடை யுமாறு வெளியிட்டுள்ளன. சர்தார் வல்லபாய் பட்டேல், வினோபாபாவே, பெருந்தலைவர் காமராசர், லால்பகதூர் சாஸ்திரி, மூதறிஞர் இராஜாஜி போன்றோர் இந்த கல்வி ஆலயங்களுக்கு வருகை புரிந்துள்ளார்கள். குடியரசுத் தலை வர்களான டாக்டர் இராஜேந்திரப் பிரசாத், டாக்டர் இராதா கிருஷ்ணன், டாக்டர் ஜாகீர் உசேன், திரு.வி.வி. கிரி, திரு. சஞ்சீவ ரெட்டி, திரு. ஜெயில்சிங், திரு.ஆர். வெங்கட்ராமன் போன்றோர்களும் திருமதி இந்திரா காந்தி அவர்களும், சாரதாலயத்திற்கு வந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

மகளிருக்காக, குறிப்பாக, கிராமப்புறங்களிலிருந்து வரும் மகளிருக்காக தாழ்த்தப்பட்டோர், வறுமைக் – கோட்டிற்குக் கீழிருக்கும் மகளிருக்காக, 1957 ஆம் ஆண்டு சாரதாலயத்தில் அமைக்கப்பட்ட மனையியல் கல்லூரி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்திருக்கிறது.

*''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார் – வீட்டுக்குள்ளே*
*பெண்ணைப் பூட்டி வைப்போ மென்ற*
*விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்''*

என்ற பாரதியாரின் பாடலை நனவாக்கி வரும் மனையியல் கல்லூரியின் வளர்ச்சியால் அய்யா அவர்கள் பரவசமானார்கள். மகளிர் கல்லூரி, மற்ற கல்லூரிகளை விட மேன்மை பெற்று விளங்குவதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்கள். தாய்த்திருநாடு சிறந்த நாடாக விளங்க வேண்டுமெனில் மகளிர் முன்னேற்றமடைய வேண்டும். மகளிர் முன்னேற்றமடைந்து நாட்டையும், வீட்டையும் நல்வழியில் நடத்த வேண்டுமானால் கல்வி கற்றிருக்க வேண்டும். அத்தகைய உயர்ந்த கல்வியை அளித்து வரும் மனையியல் கல்லூரி தன் வெள்ளிவிழாவை 1982 ஆம் ஆண்டு கொண்டாடியது. வெள்ளி விழாவையொட்டிய நிகழ்ச்சிகள் அனைத்தும் செம்மையுடன் நடைபெற அறிவுரைகள் கூறி, அய்யா அவர்கள் வழி நடத்தினார்கள்.

வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் கியானி ஜெயில் சிங் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அய்யா அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அத்தனை பேரையும் அன்புடன் வரவேற்றார்கள். தமிழ்நாட்டில் அன்றைய கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் வெள்ளி விழாவையொட்டி அமைக்கப்பட்ட வயது வந்தோர் கல்வித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவையொட்டி 25 மணிநேர அகண்ட பஜனை நடைபெற்றது. கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் ஆறு ஆராய்ச்சிக் கட்டுரைக் கோர்வைகள் வெளியிடப்பட்டன. விவேகானந்தபுரம் அருகில் 25 கிராமங்களைத் தத்தெடுத்து வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுதல் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. ஏனைய கல்வி நிறுவனங்களில் வெள்ளி விழா நடைபெறுவதற்கும் மனையியல் கல்லூரியில் வெள்ளிவிழா நடைபெறுவதற்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. இங்கு வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆன்மீக சிந்தனையில் மாணவிகளை ஈடுபடுத்துவதுடன் கிராம வளர்ச்சியிலும் ஈடுபடச் செய்தன. மகாத்மா

காந்தியடிகள் நம் கிராமங்கள் வளர்ந்தால்தான் நம் நாடு வளர்ச்சியடைய முடியும் என்றார். அந்த வழியில் வந்த நம் அய்யா அவர்கள் ஆக்கபூர்வமான திட்டங்களைத் தீட்டி மாணவியர் கிராம வளர்ச்சிப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதையே பெரிதும் விரும்பினார்கள். அதோடு மட்டுமல்லாமல் மனிதனை மனிதராக்கி தெய்வநிலைக்குக் கொண்டு செல்கின்ற ஆன்மீகக் கல்வியை மாணவர்கள் கண்டிப்பாகப் பெறவேண்டும் என்று எண்ணினார்கள். கண் பார்வையற்ற மாணவிகளுக்கு சாரதாலயம் செய்து வரும் தொண்டினை அய்யா அவர்கள் மனமாரப் பாராட்டினார்கள்.

அவினாசிலிங்கம் கல்லூரியின் வெள்ளிவிழா தொடக்க உரையில் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் அவர்கள், இக் கல்லூரி விரைவில் பல்கலைக்கழகமாக வேண்டும் என மனதார வாழ்த்தினார். வெள்ளிவிழாவின் மற்றொரு முக்கிய நிகழ்ச்சி பள்ளி மதிய உணவுத் திட்டமும், கல்வியும் என்பது பற்றி நடைபெற்ற உலக செயலரங்கு ஆகும். 25 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்தவர்களைக் கௌரவிக்கும் வண்ணம் ஏற்படுத்தப்பட்ட நன்றி பாராட்டும் நிகழ்ச்சியில் அப்போதைய குடியரசுத் துணைத்தலைவர் திரு.ஆர். வெங்கட்ராமன் அவர்களும், அவர்களது துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்களும் கலந்து கொண்டார்கள். குடியரசுத் துணைத்தலைவர் பணியாற்றியவர்களை வாழ்த்தியதுடன் நமது கல்லூரி பல்கலைக்கழகமாக மலர வேண்டும் என்றும் மனதார வாழ்த்தினார். இக்கல்லூரிக்கு விரைவில் பல்கலைக் கழகத் தகுதி வழங்கப்படும் என்றும் கூறினார்கள். அதற்காகப் பேருதவியும் செய்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயத்திற்கு பல்கலைக் கழக அந்தஸ்து அளிக்க மத்திய அரசு முன்வந்த போது ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அய்யா அவர்கள், மனையியல் தன்னாட்சிக்

கல்லூரி பல்கலைக்கழகமாக விளங்க வேண்டுமென விரும்பினார்கள். அவர்கள் எண்ணப்படியே இக்கல்லூரி பல்கலைக்கழகமாகியது. மூன்று ஆண்டுகள் அய்யா அவர்களே முதல் வேந்தராக இருந்து பல்கலைக்கழகத்திற்குப் பெருமையும் வலிமையும் சேர்த்தார்கள்.

அய்யா அவர்கள், வித்யாலயத்தின் பொன்விழாவை 1981 ஆம் ஆண்டும், வைரவிழாவை 1991 ஆம் ஆண்டும் கண்டார்கள். ஒரு தனிநபர் வாழ்க்கையில் இத்தனை கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து அவற்றில் ஒன்றின் வைரவிழா வையும் கண்டது மாபெரும் சாதனையாகும்.

அய்யா அவர்கள் 81 ஆண்டுகள் வெற்றிவாழ்க்கை வாழ்ந்ததை முன்னிட்டு 1984 ஆம் ஆண்டு அவினாசி லிங்கம் மனையியல் கல்லூரி, 'ஆண்டவன் அருள்' என்னும் நூலை வெளியிட்டு அய்யா அவர்களுக்குத் தன் நன்றிக் கடனை சமர்ப்பித்தது. ஆண்டவன் பணியைச் செய்ய தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு ஆண்டவனின் குழந் தைகள் அன்பையும், பாசத்தையும் பொழிவார்கள் என்ப தற்கு அய்யா அவர்களின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வித்யாலயத்தின் வைரவிழாவைக் கொண்டாடி மன நிறைவு கொண்ட அய்யா அவர்கள், அவினாசிலிங்கம் மனையியல் தன்னாட்சிக் கல்லூரி பல்கலைக்கழகமாகப் பரிமளித்ததைக் கண்ட அய்யா அவர்கள், உலகிடை தன் கடன் முடிந்ததென எண்ணிச் சாதனைகள் பல புரிந்த சாதனையாளராய், கல்வி நிறுவனங்கள் பல கண்ட கல்வி யாளராய், கல்வி நிறுவனங்களின் தனிப் பெருந்தலை வராய் பாசமிகு அய்யாவாய் விளங்கி, இப்பூவுலகில் மெய்ப் புகழைப் பரப்பி, விண்ணுலகில் தெய்வத்துள் தெய்வமாய் நின்று இன்று எங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

*''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்''.*

*— திருக்குறள்*

# 23. அய்யா அவர்கள் பெற்ற விருதுகள்

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நனி சிறந்ததென்று எண்ணி, தாயை மதித்துப் போற்றித் தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை என்ற கொள்கையோடு நடந்த அய்யா அவர்கள் அன்னையைத் தெய்வமென போற்றி வந்தார்கள். அதுபோன்றே தாய்த்திருநாட்டினையும் பெருமையோடு பேசினார்கள். சுதந்திரம் பெறத் தன்னை அர்ப்பணித் தார்கள். சுதந்திரத் திருநாட்டில், சென்னை மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சராகி அரும்பெரும்பணிகளை ஆற்றி னார்கள்.


அய்யா அவர்களின் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், பொதுநலத்தொண்டும் அவர்களை நாடு முழுவதும் அறி முகப்படுத்தின. அய்யா அவர்களின் நற்பணிகளைப் பாராட்டிச் சிறந்த சேவையை ஊக்குவித்து, தன்னலங்கருதாத தியாகத்தை உணர்ந்து, மத்திய அரசு 1970 ஆம் ஆண்டு ''பத்மபூஷண்'' விருதை வழங்கி கௌரவித்தது. அய்யா அவர்கள் செய்த அறிவொளி சேவையைப் பாராட்டி, மத்திய அரசு 'நேரு லிட்ரஸி அவார்டு' வழங்கி பெருமைப் படுத்தியது.

தேமதுரத் தமிழோசை உலகெலாம் செழிக்கச் செய்த சேவையை நினைத்துத் தமிழக அரசு 1978 ஆம் ஆண்டு 'செந்தமிழச் செல்வர்' என்ற விருது அளித்துப் பாராட்டி மகிழ்ந்தது. 1983 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக் கழகம்' தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

தரணியில் தமிழின் சிறப்பைப் பரப்பிக் கொண் டிருக்கும் தமிழ்ப்பல்கலைக்கழகம் அய்யா அவர்கள்



முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.வி.வி. கிரி
அவர்களிடமிருந்து பத்மபூசன் விருது பெறும்போது



முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் ஜாகிர் உசேனிடமிருந்து அய்யா அவர்கள்
நேரு எழுத்தறிவு விருது பெறும்போது



தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு
எம்.ஜி. இராமச்சந்திரனிடமிருந்து செந்தமிழ்ச் செல்வர்
விருது பெறும்போது

வித்யாலயம் அதனைச் சார்ந்த நிறுவனங்களின் மூலம் ஆண்களுக்கு கல்விக் கண்களைத் திறந்தும், சாரதாலயம் அதனைச் சார்ந்த நிறுவனங்களின் மூலம் மகளிர் குறிப்பாக கிராம மகளிர், வறுமைக்கோட்டிற்குக் கீழிருக்கும் மகளிர் கல்வி கண்ணைத் திறந்து, அறிவொளி வழங்கி, தன் காலில் நிற்கக் கூடிய வலிமையோடு வாழ தொழில் பயிற்சியும் அளித்து ஆயிரக்கணக்கான மகளிர் மேம்பாடடைய செய்த சிறந்த கல்விச் சேவையைப் பாராட்டி, 1983 ஆம் ஆண்டு டாக்டர் ஆஃப் சயன்ஸ்' என்ற பட்டத்தை வழங்கித் தனக்கு பெருமை சேர்த்துக் கொண்டது. மேலும் ஜம்னாலால் பஜாஜ் பவுண்டேசன் சார்பாக கல்விச் சேவைக்காக ஜம்னாலால் பஜாஜ் விருதும் 1985 ஆம் ஆண்டு அய்யா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பெருமையுடனும், சீருடனும், சிறப்புடனும் வாழ்ந்த அய்யா அவர்களின் வாழ்க்கை வரலாறு, பல்லோருக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

*''ஊருக் குழைத்திடல் யோகம் ; — நலம்*
*ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம் ;*
*போருக்கு நின்றிடும் போதும் ; உளம்*
*பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ் ஞானம்''.*

*— பாரதியார்*

# 24. இறைவனிடம் இரண்டறக் கலந்தது

அய்யா அவர்கள், பிறக்கும் பொழுது எல்லாக் குழந்தை களைப் போல பிறந்து, வசதிமிக்க குடும்பத்தில் வாழ்ந்து, பெற்றோரின் தெய்வ வழிபாட்டுடன் கலந்த அரவணைப்பை அபரிமிதமாகப் பெற்று, சகோதர, சகோதரிகளின் பாசத்தில் திளைத்து, வாழ்க்கையை வளப்படுத்தும் கல்வியைப் பெற்றுத் தன் வாழ்க்கையை காந்தியடிகளின் பாதையில் நிர்ணயித்துக் கொண்டு கல்விச் சேவை புரிந்ததினால் தன்னை ஈன்றெடுத்த பெற்றோருக்கும், தான் பிறந்த பொன்னாட்டிற்கும் பெருமையையும், புகழையும் தேடித்தந்தார்கள்.

ஆண்டவன் அருளினால், அவன் தாள் வணங்கி, அனைத்துக் காரியங்களையும் மனநிறைவோடு செய்து முடித்தார்கள். அவர்கள் தம் வாழ்நாளில், நல்ல குழந்தையாக, சிறந்த மாணவராக, ஏற்றமிகு வழக்குரைஞராக, பார் போற்றும் பண்பாளராக, தேசசேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மலாக, தாய் மொழியாம் தமிழுக்கு ஏற்றம் கொடுத்த தமிழ்த் தொண்டராக அனைத்திற்கும் மேலாக ஆண்டவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பக்திமானாக விளங்கினார்கள்.

அய்யா அவர்கள், ஒரு தனிமனிதராக இம்மண்ணுலகில் அவதரித்து, கல்விக்கொடை வள்ளலாக வித்யாலயம், சாரதாலயம் ஆகிய இருபெரும் கல்விநிறுவனங்களை நிறுவி, அவற்றை இன்று பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியர் பல மாநிலங்களிலும், பல நாடுகளிலுமிருந்து வந்து கல்விகற்கும் உன்னத கல்விக்கூடங்களாக வளர்த்து, உலகெங்கிலும் புகழ் பரப்பி, ஒப்பில்லா மாமனிதராய் விளங்கினார்கள். தனிமனிதர் தன்னை ஆண்டவனுக்கு அர்ப்பணித்துச் செயலாற்றும் பொழுது, ஆண்டவன் அவருக்கு

அருள்பாலித்து எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி பெறச் செய்வான் என்பதற்கு அய்யா அவர்களின் வாழ்க்கை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அய்யா அவர்கள் எண்ணியதெல்லாம் பிறருக்காகவே எண்ணி, செய்ததெல்லம் பிறருக்காகவே செய்து, வாழ்நாள் முழுவதும் பிறருக்காகவே வாழ்ந்தார்கள். அய்யா அவர்கள் நிறுவிய சாரதாலயத்தில் பயிலும் ஒவ்வொரு மாணவியும், தேசபக்தியும், தெய்வபக்தியும் கொண்டு முழுமை பெற்ற பெண்மணியாக விளங்க வேண்டுமென்று விரும்பினார்கள். அதற்கேற்ற ஆன்மீக, அறிவியல், சமுதாயக் கல்வியை அளித்தார்கள்.

அய்யா அவர்கள், ஒவ்வொரு நாளும் சாரதாலயத்திற்கு வருவார்கள். மாலைப் பிரார்த்தனையில் மகிழ்ச்சியோடு பங்கு கொள்வார்கள். மாணவியரைப் பார்த்து பூரிப்படைவார்கள். அவர்களிடம் பேசும்பொழுது, ''நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சாரதாமணிதேவிகள். இந்த நாட்டை உய்விக்க வந்த குழந்தைகள். உங்களைப் பார்க்கும் பொழுது எதிர்காலத்தில் நாடு சிறந்தோங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று தீர்க்கதரிசியைப் போல கூறுவார்கள்.

அய்யா அவர்களின் ஒவ்வொரு சொல்லும் மாணவிகளின் உள்ளத்தில் உற்சாகத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு செயலும் மாணவியரை ஆக்கபூர்வமான செயல்களைச் செய்வதற்கு ஊக்கப்படுத்தியது. அவர்களுடைய வாழ்க்கை, பிறருக்காக வாழ்கின்றவர் சாவதில்லை, மரணம் அவர்களை அணுகுவதில்லை என்ற எண்ணத்தை உருவாக்கியது.

அய்யா அவர்கள் தாய்நாட்டின் விடுதலைப்போரில் ஈடுபட்டு 1930, 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் சிறையில் இருக்கும் பொழுது நோயினால் பாதிக்கப்பட்ட போதிலும் நோய் தன்னை ஒன்றும் செய்யாது என்று

திடமாக இருந்தார்கள். எண்ணியதை முடிக்கும் திண்ணியராய், நல்லோர் போற்றும் வல்லவராய் விளங்கி னார்கள். அய்யா அவர்கள் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்றே எப்பொழுதும் விரும்பினார்கள். பிறர் மகிழ்வதைக் கண்டு தாம் மகிழ்ந்தார்கள். பிறருக்குச் சேவை செய்வதைப் புண்ணியமாகக் கருதினார்கள்.

அய்யா அவர்கள், நாட்டு விடுதலையின்போது தூங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டியெழுப்பிய வீரராய், யாவரும் வணங்கி, வாழ்த்தினைப் பெறுகின்ற சான்றோராய், நாடு போற்றும் நல்லோராய் விளங்கினார்கள். அவர்கள்

*''இன்றைமை வருத்தும் இன்னல்கள் மாய்க!*
*நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!*
*அறம்வளர்ந் திடுக! மறமடி வுறுக!*
*ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்*
*சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!*
*நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!*
*வந்தே மாதரம் வந்தே மாதரம்''.*

என்ற பாரதியார் பாடலுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவர்கள்.

அய்யா அவர்கள், 1979 ஆம் ஆண்டு ஷித்யாலயத்தின் பொன் விழாவைக் கண்டுகளித்து, 1982 ஆம் ஆண்டு சாரதாலயத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடி உள்ளம் மகிழ்ந்து, 1988 ஆம் ஆண்டு மனையியல் கல்லூரி பல்கலைக்கழகமாக மலர்ந்ததைக் கண்டு ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி, 1991 ஆம் ஆண்டு வித்யாலயத்தின் வைர விழாவைக் கொண்டாடி பூரண திருப்தி அடைந்தார்கள். ''ஆண்டவன் எனக்கு இட்ட பணியைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறேன். இனி குருமகராஜுடன் மகிழச்சியோடு சேருவேன்'' என்று மனதிருப்தியுடன் கடைசி நாட்களில் என்னிடம் கூறிக் கொண்டேயிருந்தார்கள்.

அய்யா அவர்கள் நாடு விடுதலை பெற சிறைவாசம் அனுபவித்த கால கட்டத்திலேயே, சொல்லொணாத் துயரத் துக்குள்ளாகிப் பல்வேறு இன்னல்களைச் சகித்துக் கொண்டார்கள். அவர்கள் கொண்ட சுதந்திர தாகத்தால் தன் உடல்நோயினால் அவதியுற்றதை எள்ளளவும் எண்ணிப் பார்க்கவில்லை. எனவே அப்பொழுதிலிருந்தே அய்யா அவர்கள் ஆஸ்துமா என்னும் நோயினால் பீடிக்கப்பட்டார்கள். பிறருக்குத் தொண்டு செய்கின்றவர்களுக்கு, பிறர் நலம்பேணித் தன்னலம் காணா தகைமைசால் சான்றோர்களுக்கு, தம் நோயைப்பற்றி நினைக்க நேரமேது? அய்யா அவர்களும் அத்தகைய பண்பாளராய் தன்நோயைப் பற்றியோ உடலைப் பேணிக்காக்க வேண்டுமென்றோ கவலைப்படவில்லை.

அய்யா அவர்கள் கடைசி இரண்டு ஆண்டுகளில் அதாவது 1989 ஆம் ஆண்டு முதலே என்னை அடிக்கடி வெளியூருக்குச் செல்ல வேண்டாம் என்று கூறுவார்கள். ''என் வாழ்க்கை நிச்சயமில்லாதது. ஆண்டவன் எப் பொழுது வேண்டுமானாலும் என்னை அழைத்துக் கொள் வான். ஆகவே நீங்கள் ஊரிலேயே இருக்க வேண்டும்'' என தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். ஆண்டவன் தன்னுடைய அடியவர்களுக்கு எப்பொழுது தன்னிடம் சேரமுடியும் என்பதையும் அறிவித்து விடுவான் போலும்! பலர் இறப்பதற்கு அஞ்சுகின்றனர் — ஆனால் அய்யா அவர்களோ இறப்பதற்கு அஞ்சவில்லை. இறப்பையும் மனமகிழ்ச்சியோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

*யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதுனுக்கென்*
*கடவேன்*
*வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான்*
*மதித்துமிரேன்*
*தேனேயு மலர்க்கொன்றைச் சிவனே*
*எம்பெருமானெம்*
*மானேயுன்னருள் பெறுநாள் என்றென்றே*
*வருந்துவனே.*

என்ற மாணிக்கவாசகர் பாடலுக்கேற்ப இறப்பையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

வாழ்க்கை முழுவதும் துணையாக இருந்த ஆஸ்துமா வால் நலிந்தவுடல் மீண்டும் நலிவுற்றது. ஆனால் அய்யா அவர்களோ எங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து பிரார்த் தனையில் கலந்து கொண்டு, மாணவியரை வாழ்த்தி பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் கொண்டு நாங்கள் நாளும் வாழ வாழ்த்திக் கொண்டேயிருந் தார்கள்.

அய்யா அவர்கள் அதிக பலவீனப்பட்ட கடைசிக் காலங்களில் சாரதாலயத்திற்கு வருவது குறைந்தது. எனவே நான் அய்யா அவர்களைக் காண காலையிலும், மாலை யிலும் வித்யாலயம் செல்வேன். அவர்களுக்குக் காலை உணவையும், மாலைச் சிற்றுண்டியையும் மிகவும் கவனமாகத் தயாரித்து எடுத்துச் சென்று உண்ணும்படி செய்வேன். அப்பொழுதெல்லாம் அய்யா அவர்கள் சாரதாலயத்தைக் குறித்துக் கேட்பார்கள். ஆசிரியர்கள், மாணவர்களைப் பற்றி கனிவோடு விசாரிப்பார்கள்.

1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி அய்யா அவர்கள் சாரதாலயம் வர ஆவலோடு இருந்தார்கள். சாரதாலயத்திற்கு வந்து காரிலேயே அதன் வளர்ச்சியைக் கண்டு மனமகிழ்ச்சி அடைந்து வித்யாலயம் திரும்பினார்கள். அதுதான் அய்யா அவர்கள் இறுதியாக சாரதாலயம் வந்தது. மறுநாள் அய்யா அவர்களுக்கு ஆஸ்துமா நோய் அதிக—மாகியது. அய்யா அவர்களைக் கவனித்துக் கொண்ட வித்யாலய டாக்டர் சீனிவாசன் அந்நேரம் அங்கு இல்லை. அடுத்தநாள் காலையில் அய்யா அவர்களை இராமகிருஷ்ணா மருத்துவமனையில் சேர்த்தார்கள். அய்யா அவர்களை அங்கிருந்த மருத்துவர்கள் நன்கு கவனித்தார்கள். ஆயினும், அய்யா அவர்களை ஆண்டவன் அழைத்துக் கொள்ள

T4.44136 AVIW
31N8
INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER ED (DEEMED UNIVERSITY)
108915

வேண்டுமென எண்ணிய பொழுது யாராலும் அதனைத் தடுக்க முடியாதல்லவா? மனநிறைவோடு, கடமைகளைச் செவ்வனே செய்து விட்டோம் என்ற திருப்தியோடு சாரதாலயம், வித்யாலயம் ஆகிய இரு நிறுவனங்களும் நாளும் வளர்ந்து வருவதை அறிந்த மகிழ்ச்சியோடு அய்யா அவர்கள் மண்ணுலகை விட்டு நீங்கி விண்ணுலகை அடைந்தார்கள். 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதி கார்த்திகை தீப நன்னாளில் ஜோதியில் ஜோதியாய் இறைவனிடம் இரண்டறக் கலந்துவிட்டார்கள். விண்ணுலகிலிருந்து எங்களை நாளும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நவம்பர் மாதம் 21ஆம் தேதி இரவு ஒன்பது மணி அளவில் அய்யா அவர்களின் உடல் வித்யாலயத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பொதுமக்கள் பார்வைக்கு அய்யா அவர்கள் தங்கியிருந்து பணிசெய்யும் அறையில் வைக்கப் பட்டது. இரவு ஆரம்பித்த பஜனை அய்யா அவர்களின் இறுதி யாத்திரை வரை தொடர்ந்து நடந்தது.

அய்யா அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி அவர்களின் ஆசியைப் பெற மாணவர்களும், மாணவிகளும் வரிசையாகச் சென்றனர். பஜனையில் கலந்து கொண்டனர். இரவு முழுவதும் பல்வேறு குழுவினர் பஜனைகள் செய்து தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

அய்யா அவர்கள் தினமும் காலையில் அமர்ந்து சிற்றுண்டி உண்ட மரத்தடியில் மக்கள் வெள்ளம் கூடியது. அய்யா அவர்கள் உடல் வித்யாலய மாணவர்களால் வித்யாலயத்தின் பல நிறுவனங்களின் வழியாக வந்து கடைசியாக அவர்களைத் தகனம் செய்யும் இடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அங்கு வித்யாலய மாணவர்களால் அய்யா அவர்களின் பூதவுடல் அக்னிதேவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

அய்யா அவர்கள் இறந்த செய்தியைக் கேட்டவுடன் கோவை மாவட்டமே அதிர்ச்சி அடைந்தது. சொல்லொணாத்

துயரத்தில் ஆழ்ந்தது. அன்று, திரு சி. சுப்ரமணியம் அவர்கள், அன்னாள் பாரதப் பிரதமர் திரு நரசிம்மராவுடன் புட்டப்பருத்தியில் பகவான் சாயிபாபா பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டிருந்தார். உடனே அவர் கோவைக்கு வந்து இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டார். அவர், நிர்வாக அறங்காவலராக சில ஆண்டுகள் இருந்து அரிய ஆலோசனைகள் தந்தார். இன்றும் அறங்காவலர் குழுவி–லிருந்து சாரதாலயம் வளர்ச்சி அடைய, முன்னேற்றமடைய, முதல் இடத்தைப் பெற ஆலோசனைகள் வழங்கி வருகிறார். அய்யா அவர்கள் இல்லாத குறையை அவர்கள் நிவர்த்தி செய்து வருகிறார்.

டாக்டர் ராதா தியாகராஜன் அவர்கள், அய்யா அவர்கள் மீதும் எங்கள் பல்கலைக்கழகத்தின் மீதும் அன்பு கொண்டவர். அக்கறை கொண்டவர். பல்கலைக்கழக வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர். அவர், மதுரையிலிருந்து அய்யா அவர்கள் இறந்த செய்தியைக் கேட்டு உடனே கோவைக்கு வந்தார். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார். ஆறுதல் கூறி எங்களைத் தேற்றினார். அறக்கட்டளையின் உறுப்பினராகவும், ஆட்சிக் குழுவின் உறுப்பினராகவும் இருந்து ஆலோசனைகள் கூறிவருவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

நாடு முழுவதிலுமிருந்தும், பல்லாயிரக்கணக்கானோர் நேரிலும் தந்தி, தொலைபேசிகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்திலுள்ள சான்றோர்கள், பெரியோர்கள், அன்பர்கள், நண்பர்கள் பலர் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். திருமதி இலட்சுமி மேனன், திருவாளர் ஜி.கே. மூப்பனார், எம். அருணாசலம், எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், எஸ்.ஆர். பொன்னுசாமி செட்டியார், அன்னபூர்ணா தாமோதரசாமி நாயுடு, லட்சுமி நகைக்கடை அதிபர் கே.பி. சுப்பையன், வெங்கடேசலு ஆகியோர் அவர்களுள் சிலர்.

14.44136AVIW
31N8
INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION (DEEMED UNIVERSITY)
103915
LIBRARY

தாங்க முடியாத துயரத்திலிருந்த எங்களுக்கு அன்புச் சகோதரர் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் ஆறுதல் அளித்ததுடன் இன்றளவும் எங்களுக்குப் பேராதரவாக இருக்கின்றார்கள்.

ஆண்டவன் அருளாலும், விண்ணுலகிலிருந்து வாழ்த்திக் கொண்டிருக்கும் அய்யா அவர்களின் ஆசியாலும், அவர்களின் பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கும் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் ஓங்கி வளர்ந்து வருகிறது. அய்யா அவர்களின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறது,

*''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே''.*

*புறநானூறு*

# நூலாசிரியரைப் பற்றி



முனைவர் திருமதி இராசம்மாள் பா. தேவதாஸ், தமிழகத்தின், கோயம்புத்தூரில் சிறப்பாக இயங்கும் அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தின் வேந்தர் ஆவார்கள். அவர்கள் உலகம் அறிந்த சத்துணவு விஞ்ஞானி. இவர் தனது பி.எச்.டி. பட்டத்தை 1950—ல் அமெரிக்கா விலுள்ள ஒஹையோ மாநிலப் பல்கலைக் கழகத்திலும், டி.எஸ்ஸி. பட்டத்தை 1978—ல் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்று, அவினாசிலிங்கம் நிகர் நிலைப் பல்கலைக் கழகத்தில் முதல் துணை வேந்தராகவும் (1988-1994), ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் முதல்வராகவும் (1960-80), மத்திய அரசின் புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திலும் (1975-76) சத்துணவு உதவி இயக்ககுநராகவும், தலைமை மனை பொருளியலறிஞர் மற்றும் இணை இயக்குநராகவும் (மனையியல்), விரிவாக்க இயக்குநராகவும், உணவு மற்றும் விவசாயத்துறை, இந்திய அரசு (1955-61); பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக் கழகத்தில்

முதன்மையர் மற்றும் மனையியல் பேராசிரியராகவும், மனையியல் புலம், புதுதில்லி மத்திய அரசின் செவிலியர் கல்லூரியின் உணவியல் பேராசிரியராகவும் (1951-53) பணியாற்றியுள்ளார்கள். தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளில், ஆலோசனை வழங்கும் பதவிகளை வகித்து வருகிறார்கள். நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 250 கட்டுரை களையும், 40 புத்தகங்களையும் வெளியிட்டு இருப்பதோடு, உலகத்தின் பல பாகங்களில் பயணம் செய்துள்ளார்கள். தேசிய, பன்னாட்டு விருதுகள் பல பெற்றுள்ளார்கள். அவற்றுள் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது, பல்கலைக்கழக மானிய குழுவின் ஹரி ஓம் ஆசிரம் விருது, அமெரிக்க நாட்டின் ஆரிகன் மற்றும் ஒஹியோ மாநில பல்கலைக் கழகங்கள் வழங்கிய மனித நேயத்தில் டாக்டர் பட்டம், கான்பூர் சந்திரசேகர் ஆஷாத் வேளாண்மை மற்றும் தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தின் சிறப்பு டி.எஸ்ஸி. பட்டம் ஆகியவை அடங்கும். அய்யா டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களுடன் 50 வருடங்கள் சேவை செய்துள்ளார்கள். இந்தியப் பெண்களுக்குப் பொருத்தமான இந்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒரு மனையியல் கல்லூரியை உருவாக்க வேண்டும் என்ற கனவை அய்யா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள். கோவையில் அவினாசிலிங்கம் நிறுவனம் தொடங்கியதிலிருந்து, டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அதன் ஆலோசகராக செயல்பட்டு, 1960—லிருந்து அதன் முதல்வராகவும், பின்னர் துணைவேந்தராகவும், டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் மறைவுக்குப் பிறகு வேந்தராகவும் செயல்பட்டு வருகிறார்கள். டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்களின் இடையறா உழைப்பின் விளைவாகப் பல்கலைக்கழகம் விரிவடைந்து உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது.